உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 5 ஞாயிற்றுக்கிழமை (21.11.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 360

## பட்ஜெட்டில் பாதுகாப்புக்கு அதிக நிதியை ஒதுக்கிக் கொண்டு

# வடக்கின் அபிவிருத்திக்குக் கடன் கேட்டு ஆசிய வங்கியிடம் கையேந்துகிறது அரசு

### 1000 கோடி ரூபாவைப் பெறுவதற்குப் பேச்சு

கொழும்பு, நவம்பர் 21

நாளை சமர்ப்பிக்கப்பட உள்ள அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் பெரும் தொகை நிதியை பாதுகாப்புச் செலவீனங்களுக்காக ஒதுக்கீடு செய்துள்ள இலங்கை அரசு, வடக்கின் அபிவிருத்திப் பணிகளுக்காக சுமார் 1000 கோடி ரூபா கடன் கேட்டுக் கையேந்தி நிற்கிறது ஆசிய அபிவிருத்தி வங்கியிடம்.

வடக்கில் குடிதண்ணீர் விநியோகம் மற்றும் கழிவகற்றலுக்கான உட்கட்டுமான வசதிகளை மேற்கொள்வதற்காக 90 மில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பெறுவது தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் அரசு பேச்சு நடத்தி வருகிறது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நீர் விநியோகம் மற்றும் கழிவகற்றல் உட்கட்டுமானங்களை விருத்தி செய்வதற்காகவே இந்தக் கடன் உதவி கோரப்படுகிறது என்று அரசு கூறுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ், வடமாகாணத்தில் நீர் விநியோகம் மற்றும்கழிவகற்றல் உட்கட்டுமான வசதிகள் புனரமைக்கப்பட்டு, அபிவிருத்தி செய்யப்படும். நீர் வளங்களை முகாமை செய்யும் வசதிகள் பலப்படுத்தப்படும்.

இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படும் போது வடக்கின் கிராமப்புறங்களில் மக்களின் சுகாதார மற்றும் மனிதாபிமான நிலைமைகள் மேம்படும் என்று அரசு கூறுகிறது.

(21ஆம் பக்கம் பார்க்க)

### நாவற்குழியில் அத்துமீறிய குடியேற்றம் இதுவரை நடவடிக்கைகள் ஏதுமில்லை

யாழ்ப்பாணம்,நவ.21

நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் செந்தமான காணியில் சிங்கள மக்கள் அத்துமீறி குடியேறியுள்ளது தொடர்பாக யாழ். மீவட்ட முகாமையாளரால் தலைமைப் பீடத்துக்கு அறிவிக்கப்பட்டு இரண்டு வாரங்களாகியும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரியவருகிறது.

தேசிய வீடமைப்பு அதிகார

(21ஆம் பக்கம் பார்க்க)

### ஐ.சி.ஆர்.சி யின் யாழ்., வவுனியா அலுவலகங்களுக்கு மூடுவிழா

கொழும்பு,நவ.21

அரசின் கோரிக்கையை அடுத்து எமது நிறுவனத்தின் செயற்பாடுகளைக் கொழும்பில் இருந்து மேற்கொள்ளவுள்ளோம். இதன் காரணமாக யாழ்ப்பாணம், வவுனியா உட்பட வடக்கில் செயற்படும் எமது அலுவலகங்களை மூடமுடிவு செய்துள்ளோம்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பேச்சாளர் சரசி விஜயரத்தின மேற்கண்ட தகவலை உதயனுக்குத் (21ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

வடக்கு நோக்கிய அரசியல் பயணங்கள்
அலசுகிறது கட்டுரை பக்கம் 07

மீண்டும் மன்னராட்சி
அலசுகிறது கட்டுரை பக்கம் 13

அன்பின் அரவணைப்பில் விளைவதே நல்லிணக்கம்
சாயிபாபா விசேட கட்டுரை பக்கம் 07

சந்தியடிச் சோமு பக்கம் 03

சவால்களுக்கு மத்தியில் மஹிந்தரின் பதவிக் காலம். பக்கம் 03

### ஜனாதிபதியுடன் ஓரிரு தினங்களில் கூட்டமைப்பினர் பேச்சு நடத்துவர்

#### இது குறித்து நேற்றுக் கூடி விரிவாக ஆராய்வு

கொழும்பு,நவ.21

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் அடுத்த வாரம் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படும் பேச்சுக்களில் முதன்மைப்படுத்த வேண்டிய விடயங்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று விரிவாக ஆராய்ந்தது.

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் கூட்டம் நேற்றுப் பிற்பகல் கொழும்பில் இடம்பெற்றது. அதன்போதே உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் பேச வேண்டிய விடயங்கள் குறித்து விவாதித்தனர்.

அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் நடத்திய உத்தியோகப்பற்றற்ற பேச்சுக்களின் போது, தாம் இரண்டாவது பதவிக் காலத்துக்கான பதவிப் பிரமாணம் செய்தபின் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி தீர்வு ஒன்றை எட்டப் போவதாக அறிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் பதவிப் பிரமாணம் முடிவடைந்த நிலையில் எதிர்வரும் 25ஆம் திகதி இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா இலங்கை வர முன்னர் இந்தப் பேச்சு இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் ஜனாதிபதியுடன் நடைபெறும் பேச்சுக்களில்

(21ஆம் பக்கம் பார்க்க)

### சிறைக்கூண்டுக்கு மீண்டார் பொன்சேகா

கொழும்பு, நவ. 21

சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சரத்பொன்சேகா மீண்டும் சிறைச்சாலைக்கு நேற்று மாற்றப்பட்டுள்ளார்.

திடீரென நோய்வாய்ப்பட்ட பொன்சேகா சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். (21ஆம் பக்கம் பார்க்க)

### தளபதி ஹத்துருசிங்க விருது பெறுவதற்கு மணிலா செல்கிறார்

யாழ்ப்பாணம்,நவ.21

யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுக்கு சமாதானத்துக்கான விருது எதிர்வரும் 24 ஆம் திகதி பிலிப்பைன்ஸ் நாட்டில் வைத்து வழங்கப்பட உள்ளது.

பிலிப்பைன்ஸில் உயர் பயிற்சிகளைப் பெற்றுத் திரும்பிய

(21ஆம் பக்கம் பார்க்க)

### அரச ஊழியருக்கு ரூ. 2,500 சம்பள உயர்வு?

கொழும்பு,நவ.21

நாளை சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு 2,500 ரூபா சம்பள அதிகரிப்பு அதிகரிக்கப்படலாம் என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பள உயர்வு உடனடியாக வழங்கக் கூடிய வகையில் அமையாது என்றும் ஜனவரி முதல் கட்டம் கட்டமாக இச்சம்பள உயர்வு வழங்கப்படலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

தொழிற்சங்கங்கள் கோருவது போன்று 8 ஆயிரம் ரூபா

(21ஆம் பக்கம் பார்க்க)

### 'பட்ஜெட்டி'ல் அபிவிருத்திக்கே முன்னுரிமை

கொழும்பு, நவ.21

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிதி அமைச்சர் என்ற வகையில் நாளை சமர்ப்பிக்கவிருக்கும் வரவு - செலவுத் திட்டத்தில் அபிவிருத்திக்கும் மக்களின் நிவாரணத்துக்கும் முன்னுரிமை அளிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாளை பிற்பகல் 1.30 மணிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரவு - செலவுத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றவிருக் கிறார்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தை இறுதியாக்கும் பணியில் ஜனாதிபதியும் திறைசேரிச் செயலாளர் பி.வி.ஜெயசுந்தரவும் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

மக்கள் மீது சுமைகளைச் சுமத்தும் வகையில் வரவு - செலவுத் திட்டம் அமையாது என்று அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

மக்கள் அனுபவித்துவரும் மானிய மற்றும் நிவாரணம் போன்றவற்றைத் தொடர வரவு - செலவுத் திட்டம் உதவும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

வரவு - செலவுத் திட்டம் இறுதியாக்கப்பட்டு நாளை காலை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

கடற்படை, விமானப்படை அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி, வர்த்தக அபிவிருத்தி, மின்வலு அபிவிருத்தி ஆகியவற்றை மையப்படுத்தியே வரவு - செலவுத் திட்டம் அமையும் என்றும் அரச உயர்மட்டம் தெரிவித்துள்ளது.

மொத்தத்தில் அடுத்த மூன்று

(21ஆம் பக்கம் பார்க்க)

### உண்ணாவிரதப் போரை கைவிட்டார் தேவதாசன்

கொழும்பு,நவ.21

புதிய மகஸின் சிறைச்சாலையில் கடந்த ஆறு தினங்களாக உண்ணாவிரதம் இருந்து வந்த திரைப்பட கூட்டுத்தாபன அதிகாரி க.தேவதாசன் நேற்று தமது போராட்டத்தைக் கைவிட்டார்.

நீதி அமைச்சர் அதாவுட செனவிரத்தின விடுதலை குறித்து அளித்த உறுதி மொழியைத் தொடர்ந்தே உண்ணா நோன்பை நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் கைவிட்டார். (ஒ)

### கர்தினாலாக மல்கம் ரஞ்சித் நேற்றுத் திருநிலை

கொழும்பு,நவ.21

இலங்கை கத்தோலிக்கத் திருச்சபையின் பேராயர் பேரருட்திரு மல்கம் ரஞ்சித் ஆண்டகை பரிசுத்த பாப்பரசர் 16 ஆவது ஆசீர்வாதப்பரால் கர்தினாலாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

நேற்றுச் சனிக்கிழமை வத்திக்கான் புனித பீட்டர்ஸ் தேவாலயத்தில் (21ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதி இளைஞர், யுவதிகளின் தொழில் மேம்பாட்டுக்கு ஐ.நா. உதவி

கொழும்பு, நவ.21

யுத்தத்தினால் பாதிப்படைந்துள்ள வடபகுதி இளைஞர், யுவதிகளின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு இளைஞர் விவகார அமைச்சும் யுனிசெவ் அமைப்பும் இணைந்து துறை சார் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளன.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் ஸ்தாபிக்கப்பட்டு 21 வருட நிறைவைக் குறிக்கும் முகமாகவே, இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதிப்படைந்த இளைஞர், யுவதிகளின் ஆற்றல்களை வலுப்படுத்தி இந்த திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்புகள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் புனர்வாழ்வு முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் உட்பட 850 இற்கும் மேற்பட்டவர்களுக்கு தெரிவு செய்யப்பட்ட துறைகள் சார்ந்த தொழில் பயிற்சிகளும் இதன் மூலம் வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் வழிகாட்டலுடன், உளரீதியான உதவிகள் வழங்கப்படும் அதேவேளை அங்கவீனர்களான பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமெனவும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கான இந்த மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கான நிதியினை பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் டென்மாக் அரசாங்கங்கள் வழங்க முன்வந்துள்ளதாக யுனிசெப் தெரிவித்துள்ளது. (த)

# வடக்கில் 3 வர்த்தக வலயங்கள்

கொழும்பு, நவ.21

வடமாகாணத்தில் மூன்று வர்த்தக வலயங்களை துரிதகதியில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இந்த வர்த்தக வலயங்கள் மன்னார், கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்படவுள்ளதாகவும் எதிர்வரும் சில மாதங்களில் இந்த வலயங்கள் செயல்பட ஆரம்பிக்குமெனவும் அவர் கூறினார்.

மன்னாரில் அமையவுள்ள வலயத்திற்கான காணி அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர்,வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய வலயங்களுக்கான காணிகளும் தற்போது தெரிவுசெய்யப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

சிறிய மற்றும் நடுத்தர தரத்தைக் கொண்ட தொழில் நடவடிக்கைகள் இந்த வலயத்தில் செயற்படுவதுடன் அதற்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு வர்த்தக வலயங்கள் அமைக்கப்படுவதன் மூலம் வடமாகாண உற்பத்திப் பொருள்களைஉள்ளூரிலும் வெளிநாடுகளிலும் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அதிகளவு ஏற்படுமெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (த)

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகன இறக்குமதியில் மேலும் சலுகை

கொழும்பு, நவ.21

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகன இறக்குமதி தொடர்பான சுற்றுநிருபத்தை திறைசேரி மாற்றியுள்ளது. இதன்படி அதிக எண்ணிக்கையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரிச்சலுகையைப் பயன்படுத்தி தமது சொந்தப் பாவனைக்கான வாகனங்களை இறக்குமதி செய்யமுடியும்.

இவ்வருட முற்பகுதியில் வெளியிடப்பட்ட சுற்றுநிருபமொன்றின்படி, கடந்த 5 வருட காலத்தில் வாகன இறக்குமதிக்கான வரிச்சலுகையை பயன்படுத்தாதவர்கள் மாத்திரமே மீண்டும் இச்சலுகையைப் பெறமுடியும். 5 வருட காலம் என்பது இறுதியாக வரிச்சலுகையைப் பயன்படுத்தி வாகனங்களை இறக்குமதி செய்த தினத்திலிருந்து கணிக்கப்பட்டது. இதனால் 69 பேர் மாத்திரமே மீண்டும் இச்சலுகையைப் பெறத் தகுதியுடையவர்களாக இருந்தனர்.

எனினும் கடந்த புதன்கிழமை திருத்தப்பட்ட சுற்றுநிருபத்தின்படி 5 வருடகாலம் என்பது வாகன இறக்குமதிக்கான அனுமதிப் பத்திரம்பெற்ற தினத்திலிருந்து கணிப்பிடப்படும்.

பெரும்பாலான எம்.பிகள் அனுமதிப்பத்திரம் பெற்று ஒரு வருடத்தின் பின்னரே வாகனங்களை இறக்குமதி செய்தனர். மேற்படி 5 வருட காலம் செப்ரெம்பர் 23 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது. இந்நிலையில் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டவர்கள் மீண்டும் சலுகை அடிப்படையில் வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும் என அரசாங்க வட்டாரமொன்று தெரிவித்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இச்சலுகையின்படி 50, 000 அமெரிக்க டொலர் பெறுமதியான வாகன மொன்றை இறக்குமதி செய்ய முடியும். இதற்கு 18 சதவீத இறக்குமதி வரி மாத்திரமே அறவிடப்படும். இதற்காக இலங்கை வங்கிக் கூடாக 50 லட்சம் ரூபா கடனும் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# 'ஹெட்ஜிங்' தொடர்பான வழக்கில் சட்டத்தரணிகளுக்கு ரூ.228 மில்லியன்

கொழும்பு, நவ.21

வெளிநாட்டு வங்கிகளுடன், எண்ணெய் விலையேற்றம் காரணமாக வரக்கூடிய நட்டத்தை தவிர்க்கும் ஹெட்ஜிங் ஏற்பாடு தொடர்பான வழக்கில் சட்டநிபுணர்களுக்கான கட்டணமாக 228 மில்லியன் ரூபாவை அரசாங்கம் செலுத்தியுள்ளதென ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

கடந்த 14 மாதங்களில் இந்தத் தொகை செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் சிற்றி பாங்கிற்கும் இடையிலான நட்டத்தவிர்ப்பு ஏற்பாடு தொடர்பான பிரச்சினை தற்போது சிங்கப்பூர் சர்வதேச நடுத்தீர்ப்பு நிலையத்தினால் விசாரிக்கப்பட்டு வருகிறது.

சிற்றி பாங்க், பெற்றோலிய கூட்டுத்தாபனத்திலிருந்து 197 மில்லியன் அமெரிக்க டொலரையும் டச் வங்கி 95 மில்லியன் அமெரிக்க டொலரையும் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளன. விசாரணை நவம்பர் 13 வரை தொடர்ந்து 10 நாள்கள் சிங்கப்பூரில் நடைபெற்றது. விசாரணை முடிவு விரைவில் வரவுள்ளது.

இதைவிட, ஸ்டான்டர்ட் சார்டர்ட் வங்கி ஐக்கிய இராச்சியத்திலுள்ள வர்த்தக நீதிமன்றத்தில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் மீது வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்கு அடுத்த வருடம் மே மாதம் விசாரிக்கப்படும். இந்த வங்கி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் 121 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டஈடு கோருகிறது.

இந்த வழக்குத் தொடர்பில் செலுத்தப்பட்ட கட்டணம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பிரிஸிடம் கேட்கப்பட்டபோது, கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது தெரியும். ஆனால் சரியான விவரம் தெரியாது என்று கூறினார். (த)

# கண்டியிலும் அனுராதபுரத்திலும் ஜனாதிபதி மஹிந்த வழிபாடு

கொழும்பு, நவ.21

இலங்கையின் ஆறாவது ஜனாதிபதியாக நேற்றுமுன்தினம் காலை பதவியேற்றபின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுசனிக்கிழமை கண்டி ஸ்ரீதலதா மாளிகை மற்றும் அனுராதபுரம் மகாபோதி ஆகிய புனித தலங்களுக்குச் சென்று தெய்வ ஆசியைப் பெற்றுக்கொண்டார்.

கண்டியில் அஸ்கிரிய பீடத்தின் மகா நாயக்கர் உடுகம் ஸ்ரீ புத்தரக்கித தேரர் மற்றும் மல்வத்த பீடாதிபதி திப்படுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் ஆகியோரைச் சந்தித்து அவர்களின் நல்லாசியையும் பெற்றுக்கொண்டார்.

அதன் பின்னர் ஜனாதிபதி அனுராதபுர மகாபோதி மற்றும் ருவன்வெலிசாய ஆகிய புனித ஸ்தலங்களுக்கு விஜயம் செய்து விசேட மத வழிபாடுகளில் ஈடுபட்டார். (த)

# இந்தியப் பந்து வீச்சாளர்கள் ஆதிக்கம் நிலைகுலைந்தது நியூசிலாந்து அணி



நாக்பூர், நவ. 21

இந்திய - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளான நேற்று இந்திய பந்து வீச்சாளர்களின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் நியூசிலாந்து அணி தடுமாறி வருகிறது.

நாக்பூரில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்பத் துடுப்பெடுத்தாட்ட வீரர்களாகக் களமிறங்கிய குப்தில் (6), மைக் இன்டொச் (4) ஆகிய இருவரும் ஸ்ரீசாந்தின் வேகத்தில் வெளியேறினர். அதன் பின்னர் நியூசிலாந்து அணியின் ஓட்ட வேகம் ஆமை வேகத்திலேயே நகர்ந்தது. எனினும் தற்காப்பு முறையில் நியூசிலாந்து வீரர்கள் துடுப்பெடுத்தாடியபோதும் இந்தியப் பந்து வீச்சாளர்களின் விக்கெட் வேட்டை தொடர்ந்தபடியே இருந்தது.

நியூசிலாந்து அணி சார்பாக ஜெசி ரைடர் மட்டும் அரைச்சதம் கடந்தார். விக்கெட்டுக்கள் மளமளவென வீழ்ந்ததால் பின்னால் வந்த வீரர்கள் விக்கெட்டுக்களைக் காப்பதிலேயே குறியாக இருந்தனர். நேற்றைய ஆட்டநேர முடிவின்போது7 விக்கெட் இழப்புக்கு 148 ஓட்டங்களை நியூசிலாந்து அணி பெற்றிருந்தது. களத்தில் மைக்கலம் 34 ஓட்டங்களுடனும், சௌத்தி 7 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர். இந்திய அணி சார்பில் ஸ்ரீசாந், இஷாந்த் சர்மா, ஓஜா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இரண்டாம் நாள் ஆட்டம் இன்று தொடரும்.

## துடுப்புப் படகு வலித்தலில் இந்திய வீரருக்குத் தங்கம்

சீனாவின் குவாங்சு நகரில் நடைபெற்று வரும் 16வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் துடுப்பு படகு வலித்தல் தனிநபர் போட்டியில் இந்தியாவின் பஜ்ரங் லால் தக்கார் தங்கம் வென்றார். இதன் மூலம் ஆசிய விளையாட்டு வரலாற்றில் படகு வலித்தல் போட்டியில் தங்கம் வென்ற முதல் இந்தியர் என்ற புதிய சாதனை படைத்தார்.

சுமார் 2000 மீற்றர் தூரம் கொண்ட பந்தயத் தூரத்தை பஜ்ரங் லால் 7நிமிடம் 04.78 விநாடிகளில் கடந்து முதலிடம் பிடித்தார். இதன் மூலம் ஆசிய விளையாட்டு அரங்கில் துடுப்பு படகு போட்டியில், முதல் தங்கம் வென்ற முதல் இந்தியர் என்ற வரலாற்றை இவர் படைத்தார். இது இம்முறை இந்தியாவுக்கு கிடைத்த 2ஆவது தங்கப்பதக்கம். முன்னதாக இங்கிலாந்து பில்லியர்ட்ஸ் தனிநபர் போட்டியில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி தங்கம் வென்றார்.

# கலிஸ், டிவில்லியர்ஸ் அபார சதம்; பலமான நிலையில் தென்னாபிரிக்கா

பாகிஸ்தான் - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் முதல் நாளான நேற்று கலிஸ் - டிவில்லியர்ஸ் ஆகியோரின் அபார சதங்களின் உதவியோடு தென்னாபிரிக்க அணி பலமான நிலையில் உள்ளது.

அபுதாபியில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் தென்னாபிரிக்க அணியைத் துடுப்பெடுத்தாடப் பணித்தது. பாகிஸ்தான் பந்துவீச்சாளர் தன்வீரின் அபார பந்துவீச்சில் சிமித் (10), பீற்றர்சன் (2), அம்லா (4) ஆகியோரின் விக்கெட்டுக்களை தென்னாபிரிக்கா ஆரம்பத்திலேயே இழந்தது. எனினும் பின்னர் களமிறங்கிய கலிசும் டிவிலியர்சும் அணியைப் பலமான நிலைக்கு இட்டுச் சென்றனர். கலிஸ் 105 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது தன்வீரின் பந்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். தொடர்ந்து களமிறங்கிய பிறின்ஸ் 32 ஓட்டங்களோடு வெளியேறினார். நேற்றைய ஆட்டநேர முடிவில் தென்னாபிரிக்க அணி 5 விக்கெட் இழப்புக்கு 311 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. டிவில்லியர்ஸ் 120 ஓட்டங்களுடனும் பௌச்சர் 26 ஓட்டங்களோடும் ஆட்டமிழக்காது இருந்தனர். பாகிஸ்தான் அணி சார்பில் தன்வீர் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவால்களுக்கு மத்தியில் ஆரம்பிக்கிறது மஹிந்தரின் இரண்டாவது பதவிக் காலம்

ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தமது இரண்டாவது பதவிக் காலத்துக்கான சத்தியப் பிரமாணத்தை ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டது போன்று வெகு கோலாகலமாக நடத்தி முடித்துள்ளார். வண்ணமயமாக நடைபெற்ற இந்த நிகழ்வில் ஏராளமான வெளிநாட்டுப் பிரமுகர்களும் நாட்டு மக்களும் ஆர்வத்துடன் கலந்துகொண்டு ஜனாதிபதிக்கு வாழ்த்தும் தெரிவித்துக் கொண்டனர்.

ஜனாதிபதி மஹிந்த இந்த நாட்டின் சர்வ அதிகாரங்களும் படைத்த, எவராலும் கேள்வி கேட்க முடியாத ஒருவராக உயர்ந்து நிற்கின்றார். இந்த நாட்டிலேயே அவரால் எதனையும் செய்யமுடியும். நாடாளுமன்றத்திலே கூட மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அவர் எட்டியுள்ளார். எதிர்க்கட்சிகள் நாதியற்ற நிலைக்குத் தள்ளப்பட்டு தடுமாறி நிற்கின்றன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் அரசுப் பக்கம் தாவியுள்ளனர். இவர்களில் பலர் அமைச்சர்களாகவும் பிரதி அமைச்சர்களாகவும் பதவியேற்று பதவிச் சுகத்தை அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர். மேலும் சிலர் பதவிகளுக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

இவர்களால் இனிமேல் ஜனா திபதியின் பக்கம் ஒரு சுண்டு விரலைக் கூட காட்ட முடியாது. இதைப்போன்றதொரு நிலையே அநேகமான எதிர்க்கட்சிகளுக்கும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக் காலம் அவருக்கு பஞ்சணை மெத்தையாக மாறுமா அல்லது முள்படுக்கையாகுமா என்பதை இந்தக் கட்டுரை ஆராய்கின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது சிறுபான்மை மக்களின் வாக்குகளே வெற்றியைத் தீர்மாணிக்குமெனக் கூறப்பட்டது. இதனை மஹிந்தரும் நன்கு ணர்ந்து கொண்டார். இதற்கான காய்நகர்த்தல்களும் திரைமறைவில் நடைபெற்ற தாகத் தகவல்களும் கசிந்தன.

இக்கட்டத்தில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலே செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள், தமிழ்மக்கள் ஜனாதிபதி வேட்பாளர்கள் எவருக்கும் வாக்களிக்கவேண்டாம்; தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கோரியிருந்தனர். இதற்கு முழு ஆதரவும் கிடைத்தது. இதற்கு விடுதலைப் புலிகள் மீதான பற்று விசுவாசம் அல்லது பயம்கூட காரணமாக இருந்திருக்கலாம். ஆனால் விடுதலைப் புலிகளின் இந்த முடிவு மஹிந்தருக்குச் சாதகமாகவே அமைந்தது. இறுதியில் அவர் வெற்றியும் பெற்றார்.

தமிழ்மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தால் தேர்தல் முடிவுகள் தலைகீழாக மாறியிருக்கும். ஆனால் தோற்க வேண்டும் என்ற ரணிலின் தலைவிதியை எவராலும் மாற்ற முடியவில்லை.

### இடதுசாரிகளின் ஆதரவு

தென்பகுதியைப் பொறுத்தவரை அப்போது நாடாளுமன்றத்திலே 39 உறுப்பினர்களைக் கொண்ட பெரியதொரு கட்சியாக விளங்கிய ஜே.வி.பியினரும் இடதுசாரிகளும் மஹிந்தருக்குப் பின்னால் அணிவகுத்து நின்றனர். ஜே.வி.பி. கிராம மட்டத்திலே மஹிந்தருக்கு உச்சக் கட்ட ஆதரவைத் திரட்டி வழங்கியது. அத்துடன் தென்பகுதியின் தெற்கு மாவட்டங்களில் மஹிந்தரின் பிரசாரத்துக்குப் பலத்த ஆதரவு கிடைத்தது. மேலும் தமிழ் மக்களின் தேர்தல் புறக்கணிப்பும் எதிர்பாராமல் கிடைக்க அவர் வெற்றிக் கனியைச் சுவைக்க முடிந்தது.

பின்னாளில் இந்த நாட்டிலே 20வருடகாலமாக நீடித்து வந்த யுத்தத்துக்கு முடிவு கட்டுவேனெனச் சபதம் பூண்டு தமிழ் பிரதேசங்களின் மீது கொடிய யுத்தமொன்றை நடத்தினார். விடுதலைப் புலிகளிடமிருந்து அப்பாவித் தமிழர்களை விடுவிப்பதே இந்த யுத்தத்தின் நோக்கம் என்றும் மனிதாபிமான நட வடிக்கை என்றும் புதிய வியாக் கியானமும் கூறப்பட்டது.

தமிழர் பிரதேசங்கள் சுடகாடுகளாக மாறின. பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும் அங்கங்களை இழந்தும் சீரழிக்கப்பட்டனர். உலக வரலாற்றிலேயே உள் நாட்டு யுத்தம் ஒன்றின் போது எழுத்தில் வடிக்க முடியாத அளவுக்கு மக்கள் சொல்லொணா துன்பங்களை அனுபவித்த பதிவாக இந்த கொடுமையானயுத்தம் இடம்பெற்றது.

இலட்சக்கணக்கான தமிழர்கள் அகதி முகாம்களில் அடைக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டனர். எனினும் தற்போது மீள்குடியேற்றம், அபிவிருத்தி போன்ற வாசகங்களே முன்நிற்கின்றன.

### விரோதியானார் பொன்சேகா

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுத் தாங்கள் நிம்மதியான சூழலில் வாழ்வதாகப் பெரும்பான்மையின மக்கள் கருதத் தொடங்கினர். மஹிந்தரின் புகழ் அவர்கள் மத்தியில் எட்டாத தொலைவிற்கு உயரத் தொடங்கியது. அவரது முதலாவது பதவிக் காலம் அவருக்கு ஒரு ஏற்றமிக்கதொரு பொற்காலமாகவே விளங்கியது. போர் வெற்றியே முக்கியமானதொரு கருப் பொருளாக சிங்கள மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டது. இதற்குரிய பயனும் கிட்டியது.

ஆனால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது தான் சில விவகாரமான சம்பவங்கள் அரங்கேறின. இராணுவத் தளபதியாக இருந்து புலிகளைத் தோற்கடிப்பதற்குக் காரணகர்த்தர் எனப் புகழப்பட்ட சரத் பொன்சேகா மஹிந்தரின் விரோதியாக மாறித் தேர்தலிலும் ஏனைய எதிர்க் கட்சிகளின் ஆதரவுடன் போட்டியிட்டார். பொன்சேகாவே வெற்றிபெறுவாரென்ற எதிர்பார்ப்பும் நிலவியது. ஆனால் இறுதியில் எவ்வாறோ மஹிந்தர் வெற்றி பெற்றுவிட்டார். சரத் பொன்சேகா இப்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இவையெல்லாம் கடந்து போன சமாச்சாரங்கள். தற்போது மஹிந்தரின் இரண்டாவது பதவிக் காலம் ஆரம்பமாகின்றது. ஆனால் இவரது முதலாவது பதவிக் காலம் போன்று இது அமையுமா என்ற கேள்வியும் கூடவே எழுகின்றது.

30 வருடகாலமாக நீடித்த யுத்தம் முடிவுக்கு வந்த போதும் இதற்கு மூலகாரணமான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் எதுவும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் சாதாரண மக்கள் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளன.

**- ராஜராஜன் -**

வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது. 36 ஆயிரம் வேலையில்லாப் பட்டதாரிகள் உள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. வெளிநாட்டுக் கடன்கள் மக்களின் தலைமீது அழுத்தத் தொடங்கிவிட்டன. ஆனால் அரசோ மேன்மேலும் கடன்களை வாங்கிக் குவித்து வருகின்றது. இது நாட்டுக்கு மீட்சியைத் தராது எனப் பொருளாதார வல்லுநர்கள் கூறு கின்றனர்.

### எதிர்கொள்ளும் சாவால்கள்

முக்கியமாக இலங்கை ஒரு ஜனநாயக நாடு என பீற்றிக் கொண்டாலும் இங்கு நிகழும் நிகழ்வுகள் இதற்கு மாறாகவே உள்ளன. ஆகவே ஜனநாயகத்தை வளர்த்தெடுப்பதற்கு ஜனாதிபதி உடனடியாகவே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். முக்கியமாக அடக்குமுறைகளுக்குள் வைத்திருக்கும் அவ சரகாலச் சட்டம் நீக்கப்படல் வேண்டும். இதனை ஜனநாயகத்துக்கான முதல் படியாகக் கொள்ளலாம். அடுத்ததாக அபிவிருத்தியில் சகல இன மக்களுக்கும் சமபங்கு வழங்கப்படல் வேண்டும். இல்லாவிட்டால் இன ஒற்றுமை என்பது கானல் நீராகவே முடியும்.

தற்போது அரசு வீணான செலவுகளை மேற்கொள்வதாகப் பரவலாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது. வீங்கிக் கிடக்கும் அமைச்சரவை, அதிக சம்பளத்தில் ஏராள மான ஆலோசகர்கள், ஆடம்பரமான வைபவங்கள், இலாபந் தராத திட்டங்கள் எனப் பல்வேறு துறைகளிலும் வீணான நிதி விரையம் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது. இலங்கையொரு பௌத்த தர்மமுள்ள நாடு என ஒரு புறத்தே தெரிவிக்கப்பட்ட போதும் மறுபுறத்தில் கசினோ சூதாட்டத்தை விருத்தி செய்வதற்கான சட்ட வலுவுக்கான சட்ட மூலம் நிறைவேற்றப் பட்டுள்ளது. இது இலங்கையொரு [illegible] நாடு என்ற தோற்றத்தை ஏற்படுத்தி விடும்.



# சந்தியடிச் சோமு

## ஜனாதிபதிக்கு மிஸ் கோல் போடக் காத்திருப்போர்

என்ர மனக்குமுறலையும், அண்டை அயலாற்ற மற்றும் அறிஞ்சவையின்ர குமுறல்களையும் நான், போனகிழமையே உங்களிட்ட கொட்டவேணும் எண்டு நினைச்சனான் பாருங்கோ. எதுக்குமொருக்கா பேப்பர்காரப் பெடியனைக் கேட்டுப்போட்டு எழுதினா நல்லதெண்டிட்டு பின்னுக்குப் போட்டனான்.

இப்ப கிட்டடியில, ஒருநாள் விடியக்காத்தால, நான் வாழைக்கு பாத்தி கிழறிக்கொண்டிருக்கேக்க, என்ர பக்கத்து வீட்டுக்காறி பதறிக்கொண்டு ஓடி வந்தா. நானும் என்னவோ ஏதோவெண்டு செய்த வேலைய அப்பிடியே போட்டுட்டு ஓடிப்போனா மனிசி கேட்டுது "பேப்பரப் பாத்தனீங்களே?" எண்டு. நான் சொன்னன் "வீட்ட பேப்பர் எடுக்கிறதில்லை. பத்துப்பதினொரு மணிபோல வாசிகசாலைக்குப் போய்த்தான் பாக்கவேணும். ஏன் என்ன போட்டிருக்கிறாங்கள்? வழமையப் போல உப்புச்சப்பில்லாத செய்திகள்தானே கிடக்கும்" எண்டன்.

"நாவற்குழியில சிங்களவரை ராவோட ராவாகக் குடியேற்றிப் போட்டாங்களாம். இனி என்ன நடக்கப் போகுதோ தெரியாது? அதப் பாத்ததில இருந்து எனக்கு நெஞ்சு பதறுது நாங்கள் இப்ப நாதியற்ற ஆக்களாகப் போட்டம். அவன் என்ன செய்தாலும் பேசாமல் பாத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்குது. தட்டிக் கேட்க ஆளில்லை" எண்டு மனிசி அடிச்சு அள்ளிக் கொண்டு போய்ச்சுது.

அவங்கள் தாங்கள் நினைச்சதெல்லாம் செய்யிறாங்களாம். பேயாட்சி நடந்தா சாத்தானுக்கு கொண்டாட்டமாம். எங்கட நிலைமை இப்படியாப் போச்சுதாம் எண்டு மனிசி பொரிமிக் கொட்டிச்சுது.

இந்த மனிசி முன்னம் புலிய புழுத்தபாட்டில பேசித்தள்ளுறது. இப்ப ஏன் மனிசி இப்பிடித் திடீரெண்டு கதைக்குது எண்டு எனக்கொரே முழுசாட்டம். "என்ன சொய்யிறது கையொடிஞ்சனாங்கள் எல்லாத்தையும் மௌனமாப் பாக்க வேண்டியதுதானே" எண்டு பட்டும் படாமலும் மெல்ல இழுத்தன். நான் எதையாவது சொல்லப் போக மனிசி எங்கையாவது போட்டுக் குடுத்துடும் எண்டு எனக்கொரு லேசான பயம் இருக்கத்தான் செய்தது.

"என்ர வயலுகளும் காணியளும் மறுவன்புலவில இருக்குது. பாக்க மேய்க்க அங்க ஆக்கள் இல்ல. அதையும் எடுத்துப் போடுவாங்களோ" என்று மனிசி கேட்கத்தான் மனிசியின்ர கொதிப்பு என்னவெண்டு விளங்கிச்சு. தனக்குத் தனக்கு வரேக்கதான் சுளகு படக்குப்படக்கு எண்டு அடிக்குது பாருங்கோ. எல்லாருமாச் சேந்து வடம் பிடிச்சிருந்தா தனித்தனி தீவுகளா இண்டைக்கு மனதுக்க குமுறதேவயில்லையே!

கொட்டில் பொலிற்றிக்ஸ் தொடர்பா, ஐஞ்சாறு நாள் நாடாளுமன்றத்தில இதைப் பற்றி தும்பு பறந்துது. பிறகு அப்பிடியே எல்லாம் நீர்த்துப் போச்சு. அதில முக்கியமா குற்றக் கூண்டில நிறுத்தப்பட்டாக்கள் கொடி, குடை, ஆலவட்டம் பிடிக்கிற தமிழ் அரசியல் வாதியள்தான். அரசாங்கத்தின்ர "எல்லாத்தையும்" செய்யினம். இவையாலதான் அரசாங்கத்தில "ஒண்டையும்" செய்யேலாமக் கிடக்கு. இவர் இணாங்கி இணாங்கிப் போக அவர் நல்லாத் தலையில மிளகாய் அரைக்கிறார் போலத்தான் கிடக்கு. "எல்லாரையும் கலைக்கிறன்; பெரியவர் அதுக்கான நடவடிக்கை எடுக்கச் சொல்லிப்போட்டார்" எண்டு அவர் கிட்டடியில ஒரு மீட்டிங்கில சொன்னவராம். ஆனால் ஒண்டும் நடக்கக் காணேல்லை.

அவை மட்டுமில்ல தேசியக் கூட்டமைப்பு. பிறகு உந்த தேசியத்துக்கான கூட்டமைப்பு இவையள் எல்லாரும் கூட சனத்துக்கு என்ன பதில் சொல்லப்போகினம் எண்டது தெரியேல்ல. ஜனாதிபதிக்கு கடிதம் எழுதுறது, பேப்பருக்கு அறிக்கை விடுகிறது என்றதுகளோட திருப்திப்படுகிற ஆக்களா இருக்கிற வரைக்கும் சனத்துக்கு என்ன கிடைக்கப் போகுது எண்டதும் தெரியேல்லை.

உவர் கருணாநிதியைப் போலதான் இவையளும் அரசியல் நடத்துகினம். இலங்கைப் பிரச்சினையெண்டால் பிரதமருக்கும் சோனியாவுக்கும் ஒரு கடிதம் அனுப்புவார். ரெண்டு மணித்தியாலம் போல உண்ணாவிரதம் இருப்பார். அதப்போலதான் எங்கட ஆக்களும் அரசியல் நடத்தப் பாக்கினம். இன்னும் கொஞ்சக் காலத்தில "இந்தப் பிரச்சினை தொடர்பா ஜனாதிபதிக்கு எஸ்.எம்.எஸ். போட்டனான், மிஸ்ட் கோல் குடுத்தனான்" எண்டு உவையள் சொல்லாட்டில் என்னைச் செருப்பால அடியுங்கோ.

உதுகள் எல்லாத்தையும் பாத்துப் போட்டு மனசு கேக்காமல் எம்.பி. ஒருத்தரை ரெண்டு நாள் முன்னம் சந்திச்சுக் கதைச்சன். அந்தாள் சொன்ன விசயம் நெஞ்சில பாறாங்கல்லத் தூக்கிப்போட்ட மாதிரி இருந்துது . யாழ்ப்பாணத்தை சிங்கள மயமாக்க வேணுமெண்டது மஹிந்தரின்ரயோ அவரது குடும்பத்தின்ரையோ விருப்பமில்லையாம். இது முழுக்க முழுக்க இந்தியாக்காரற்றை விருப்பம்தானாம் எண்டு அந்தாள் சொல்லுது. உந்த நாடகத்தை எழுதி தாயாரிக்கிறது எல்லாம் அவையள் தானாம். அவையள எப்பிடி இந்தத் தமிழ் அரசியல்வாதிகள் எல்லாரும் நம்புகினம் எண்டு ஒண்டுமா விளங்கேல்லை எனக்கு.

கௌடில்யற்ற காலத்திலயிருந்து தந்திரமும் சாணக்கியமும் தெரிஞ்சு நாசஞ்செய்யிறவனை எதிர்த்து என்ன பயன் எண்டு அந்த மனுசன் என்னக் கேக்குது. அதக் கேட்டு எனக்கு நெஞ்சு பதறுது. இனியென்ன செய்யிறது ஜனாதிபதிக்கு மிஸ்ட் கோல் போடுறதை கேட்டுட்டு கப்பென்று இருக்க வேண்டியதுதான் நாங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**TOYOTA BELTA (JAPAN) CAR**
**உடன் விற்பனைக்கு உண்டு**

P/S, P/M, Digital A/C, C/Lock, Key Lock, Rpm Meter, 1300cc, 5300 Km ஓடியது. Pearl white cdc 2008/Dec Model, Reg 2010 / Sep, Show room Condition, KL - 7xxx, Iccedent Free, Record available Doctor இடம் உள்ளது. வெளிநாடு செல்ல இருப்பதால் உடன் விற்கப்படும்.
8/1, கையில், 30000× 56 லீசிங் உண்டு. லீசிங்குடன் விற்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0779234235.


# மரண அறிவித்தல்கள்

## சதாசிவஐயர் ஞானபூங்கோதையம்மா

தெல்லிப்பழை, தோதரையம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவஐயர், ஞானபூங்கோதையம்மா நேற்று (20.11.2010) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவஐயரின் மனைவியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

அல்விஸ் பிளேஸ்,
கொழும்பு-13, 0112345540

(சி/573095)

## நயினாதீவு விசுவலிங்கம் யோகநாதன்

(இளைப்பாறிய துறைமுக அதிகாரசபை உத்தியோகத்தர்)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வதிவிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் யோகநாதன் 19.11.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம்-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகநாதன்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சோமேஸ்வரியின் (இளைப்பாறிய ஆசிரியை தி/பெருந்தெரு விக்னேஸ்வரா ம.வி.) அன்புக் கணவரும், பாமதி (ஜேர்மனி), அகிலன் (லண்டன்), சாருமதி(கனடா), சுபமதி(பிரதேச செயலகம், வவுனியா), சுடர்மதி (ஆசிரியை, திரு/ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சத்தியேஸ்வரன் மற்றும் தயாநிதி (லண்டன்), சபேசன்(கனடா), பரந்தாமன் (அதிபர், வவுனியா), நவனேசன் (துறைமுக அதிகாரசபை, திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமனும் பிரசாந், சாம்பவி, வினோத், ரதீபன், ரதீசன், ஓவியா, கவின், செழியன், ஹரனி ஆகியோரின் அன்புத் தாத்தாவும், சபாநாதன் (ஓய்வுபெற்ற SLDG), Dr.வேதநாதன், மகேஸ்வரநாதன் (மின் முகாரி, சிமெந்துக் கூட்டுத்தாபனம், K.K.S), மீனாட்சி (பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்), காலஞ்சென்ற புண்ணியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவமணி (ஓய்வுபெற்ற அதிபர்), மாலினிதேவி(ஓய்வுபெற்ற அதிபர்), சொர்ணம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்றவர்களான நவநீதகிருஷ்ணன் (வருமான வரித் திணைக்களம்), பரமலிங்கம் (வர்த்தகர்), மங்கையர்க்கரசி (ஆசிரியை) மற்றும் இரத்தினேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சண்முகானந்தன் (ஓய்வுபெற்ற படவரைஞர்), ஜெகதீஸ்வரி (ஓய்வுபெற்ற தேசியசேமிப்பு வங்கி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் திரு.திருமதி கிருஷ்ணசாமி, திரு.திருமதி சுந்தரலிங்கம், திரு.திருமதி கோபாலசுந்தரம், காலஞ்சென்ற Dr.பரராசசிங்கம், திரு.திருமதி காளிக்குட்டி (திருமலை) ஆகியோரின் சம்பந்தியும், பங்கசாம்பாள், பத்ம நாதன் (ஓய்வு பெற்ற அதிபர்), வனஜா (ஓய்வுபெற்ற அதிபர்), அன்னலிங்கம் (குகன் மோட்டார் வவுனியா) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.11.2010) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் திருகோணமலை இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

11, கோணேசபுரம், உவர்மலை,
திருகோணமலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## சங்கரத்தை பத்திரகாளி ஆலய கும்பாபிஷேகம்

சங்கரத்தை வீரபத்திர சமேத ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான மேற்கு வாயில் ராஜகோபுரமும் பரிவார ஆஞ்சனேய ஆலயமும் புதிதாக அமைக்கப்பெற்று திருக்குட திருமுழுக்குப் பெருவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.45 மணிமுதல் 9.45 மணி வரை இடம் பெறவுள்ளது. 24 ஆம் திகதி புதன் கிழமை விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளது.

அடியார்கள் பங்குபற்றி அம்பாளின் அருளைப் பெறுமாறு கேட்கப்படுகின்றனர். (ஒ-16)


**உடன் விற்பனைக்கு**

Pulsar 150 cc
Digital model
UR.9xxx
Mitsubishi Lancer Car
11-xxxx
தொடர்புக்கு :
186, யாழ். வீதி,
மானிப்பாய்,
0772247627,
0776179118

**விற்பனைக்கு**

Flash Memory Kingston
8 GB- 1500, 16 GB-2000
32 GB-2500
மேலும் கணினி உதிரிப் பாகங்கள் மலிவு விற்பனை.
தொடர்பு:0750404404

**கணனிக் கல்வி**

MS OFFICE 2007, DTP, INTERNET E-MAIL, HARD WARE, புதிய பிரிவுகள் ஆரம்பம்.
SKY COMPUTERS (PVT) LTD
162, MAIN STREET,
JAFFNA. T.P.021-222-1417
(சென் சாள்ஸ் பாடசாலை அருகாமை)

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் சம்பல் வீதியில் 1 பரப்பு 2 குளி காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
விபரங்களுக்கு:0776126089


**சேர்த்து வாசிக்கவும்**

20.11.2010 பக்கம்-23 இல் வெளி வந்த சின்னம்மா செல்லையா என்பவரின் மரண அறிவித்தலில் யாகசோரூபன், பிரேம்நாத், பார்த்தீபன், பிரியா என்பவர்கள் பேரப்பிள்ளைகள் என சேர்த்து வாசிக்கவும்.


**கார் விற்பனைக்கு**

NP JH xxxx Nissan Sunny TA-FB15 (Super Saloon) 2001 Model white Colour உடன் விற்பனைக்குண்டு.
T.P.0777807517

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

NP-UZ.XXXX, 200 பள்சர்
தனிப்பாவனை
0777860906


# மரண அறிவித்தல்கள்

## வேதவனம் தங்கராசா (சர்க்கரை)

(ஓய்வுபெற்ற முகாமையாளர், பரந்தன் ப.நோ.கூட்டுறவுச் சங்கம்)



கிளிநொச்சி, குஞ்சுப்பரந்தனைப் பிறப்பிடமாகவும், உருத்திரபுரம், சிவநகரை வசிப்பிடமாகவும் கொண்ட வேதவனம் தங்கராசா 15.11.2010 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேதவனம் (சின்னத்துரை) மற்றும் பொன்னம்மா தம்பதியினரின் அன்புமகனும், இராமுப்பிள்ளை- சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், அன்னலட்சுமியின் (சர்கரை அக்கா) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம் (ஆசிரியர்), நாகராசா மற்றும் வேலுப்பிள்ளை (சீனி), மங்கையர்க்கரசி (கனடா), பரமேஸ்வரி, புவனேஸ்வரி, கந்தசாமி, மகேஸ்வரி(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற புண்ணியமூர்த்தி மற்றும் கிருஸ்ணபிள்ளை, தேவராசா, புஸ்பமலர், பரஞ்சோதி, சாரதாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பாரதி (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற சுரேஸ் மற்றும் பிறேமதி, ரமேஸ்(கனடா), ரோணேஸ் (றோணா- லண்டன்), ரமணேஸ் (இந்தியா), மிரேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாஸ்கரன், விக்னேஸ்வரன், சஜீதா (கனடா), மைதிலி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் கீர்த்தனா, அபிநயா, மகிஷா, கிரிஷாந், கபிலாஸ், ஓவியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உருத்திரபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி, சிவநகர்,
உருத்திரபுரம், கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.

## நாகமுத்து பரமசாமி (சங்கானை)



சங்கானை, அராலி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து பரமசாமி நேற்றுமுன்தினம் (19.11.2010) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கனகசபை - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் சோமசுந்தரம் (இருபாலை), கனகரத்தினம், சீவரத்தினம் (இருபாலை), தவமணி, தம்பிஐயா, சோதிலிங்கம், தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் பத்மலோஜினி, சாந்தாதேவி, வினோதரன் (ஜேர்மனி), ஞானவதி, லங்கேஸ்வரி (ஆசிரியை, வட்டு. மத்திய கல்லூரி) ஆகியோரின அருமைத் தந்தையும், உபேந்திரன் (உப அதிபர், சங்கானை சிவப்பிரகாச ம.வி.), ரவீந்திரன் (தொழில் துறைத் திணைக்களம் பிரதேச செயலகம், சாவகச்சேரி), சுமதி (ஜேர்மனி), காலஞ்சென்ற தங்கவடிவேல் (துன்னாலை) மற்றும் குலேந்திரன் (New Nelson Learners - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, பூமணி, வேலாயுதம், தியாகராசா மற்றும் நடராசா (வவுனியா), இராசதுரை (உடுப்பிட்டி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் துஷ்யந்தன் (ஆசிரியர், விபுலானந்தா கல்லூரி, வவுனியா), சுதர்சினி (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்), திலீபன் (இயன் மருத்துவர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), தாரணி (சிவப்பிரகாச ம.வி., சங்கானை), கயானன் (ஜேர்மனி) றொசான் (ஜேர்மனி), சோபிதன் (யாழ். இந்துக் கல்லூரி), நிதர்சன் (சிவப்பிரகாச ம.வி., சங்கானை), அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20.11.2010) சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சங்கானை கரைச்சி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வீதி,சங்கானை.

தகவல்:
குடும்பத்தினர்.


**கார் விற்பனைக்கு**

மொறிஸ் மைனர் 10
SRI XXXX
தொலைபேசி:0779184603

**காணியுடன் வீடும் விற்பனைக்கு**

கோப்பாய் தெற்கு, இருபாலை டச்றோட்டில் சுற்று மதிலுடன் கூடிய 10 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. இது இருபாலை சந்தி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை, இருபாலை கற்பக விநாயகர் கோயில் ஆகியவற்றிற்கு அண்மையில் உள்ளது. இங்கு பல பயன் தரும் மரங்களும் உண்டு.
தொடர்பு: 0771553248, 0726994524.

**இறைச்சிக் கோழி விற்பனை**

புரொயிலர், கல்போட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன்,நல்லூர்.

**பிரத்தியேக வகுப்பு**

தரம் 9-11 கணிதம், விஞ்ஞானம் (தமிழ் மொழி மூலம்) கற்பிக்கப்படும். தரம் G.C.E (A/L) அரசியல், வணிகக் கல்வி, தனிப்பட்ட ரீதியாகவோ குழுக்களாகவோ கற்பிக்கப்படும்.
தொடர்பு 0779226701

**காணி விற்பனைக்கு**

மாரீசன் கூடல் (இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கு அருகில்) 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு:- 0772336227, 0750415353

**வீடு வாடகைக்கு**

புலோலி கிழக்கு 60 பாகை கிணற்றடி உள்ள சிறிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 0772224913

**விற்பனைக்கு**

Toyota CARENA 64 - CAR for Sale. A/C, Power Sutter என்பன அடங்கலாக.
தொடர்புக்கு:- 0779218444

**விற்பனைக்கு**

Brand new dell Laotop, Dongles, Bank DVDS, Films DVD உடனடி விற்பனைக்கு.
தொடர்பு :0775099996

**வீடு வாடகைக்குத் தேவை**

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர்கொண்ட சிறிய குடும்பத்திற்கு யாழ். நகரப்பகுதியை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை. (பிராமண குடும்பத்திற்கு).
தொடர்பு: 0775029266.

**வாடகைக்கு**


வெள்ளவத்தை 55ஆவது லேனில், படிக்கும் அல்லது வேலைபார்க்கும் பெண் ஒருவருக்கு இன்னொரு பெண் ஒருவருடன் சேர்ந்தோ, தனியாகவோ அல்லது வசிப்பதற்கு அறை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0778692541.

**வாடகைக்கு**

ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் 60 அடி நீளம் 18 அடி அகலம் கொண்ட வணிக நிலையம் வாடகைக்கு [illegible]
தொடர்பு: 0777283811, 0113158007.


# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் ஜெயரட்ணம் (பாப்பையா)



இராசாவின் தோட்டத்தை பிறப்பிடமாகவும் 651, நாவலர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் ஜெயரட்ணம் (பாப்பையா) நேற்று (20.11.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் யோகராணியின் அன்புக் கணவரும் கேதீஸ்வரன் (ஜேர்மனி), ஆர்த்தி (லண்டன்), ஜெனனி (குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் துவாரகன் (லண்டன்), கோபிதாசன்( மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் டிலக்சன், துஷன் (லண்டன்) ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

651, நாவலர் வீதி,
நல்லூர்.

(சி/573096)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அபிவிருத்தியும் மக்கள் வாழ்க்கை நிலையும்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது இரண்டாவது பதவிக் காலத்தையும் தொடங்கியாயிற்று. அதன் பொருட்டு வழமையாக அனேகமாக நவம்பர் மாதம் முதலாவது வாரத்தில் சமர்ப்பிக்கப்படும் வருடாந்த் வரவு - செலவுத்திட்டம் நான்காவது வாரத்தில் - நாளை இருபத்தி ரெண்டாம் திகதி திங்கட்கிழமை - நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த வருடத்துக்குரிய (2010ஆம் ஆண்டுக்குரிய) வரவு செலவுத் திட்டம் பிய்த்துப் பிய்த்து இரண்டு தடவைகள் உத்தேச வரவு - செலவுத் திட்ட அறிக்கைகளாகச் சமர்ப்பிக்கப்பட்டன.

இவ்வருடம் ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற காலத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு 2,500 சம்பள உயர்வு வழங்கப்படும் என்று ஆளுங் கட்சி தரப்பில் மேடைகளில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவ்வாறு எதுவும் நடைமுறைக்கு வரவில்லை.

அவர்களுக்குரிய புதிய சம்பளத் திட்டம் வகுக்கப்படவுள்ளதாகவும் அடுத்த வருடத்தில் (2011 ஆம் நிதி ஆண்டில்) வழங்கப்படும் என்றும் பிரதி நிதியமைச்சர் சரத் அமுனுகம நாடாளுமன்றில் ஒரு முறை அறிவித்திருந்தார்.

2011ஆம் ஆண்டுக்கரிய வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக (கடந்த வாரத்தில்). அரசாங்க ஊழியர்களுக்கு மாதாந்தம் 1300 ரூபாவே சம்பள உயர்வாக வழங்கப்படும் என்றவாறு அரச தரப்பிலிருந்து அரசல் புரசலாக 'கதைகள்' கட்டவிழ்ந்துகொண்டிருக்கின்றன.

எப்படியோ, நாளைய வரவு செலவுத்திட்ட உரையில் நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரச ஊழியருக்கு வழங்கப்படவுள்ள சம்பள உயர்வை உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என்று நம்பலாம்.

இதற்கிடையில், அரச ஊழியருக்கு 9,000 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை இலங்கை தொழிற்சங்கங்களின் சம்மேளனம் முன்வைத்து நிற்கிறது.

அரச ஊழியருக்கு 10,000 சம்பள உயர்வு வழங்கப்படும் என்று, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சியும், ஜனதா விமுக்தி பெரமுனவும் இணைந்திருந்த ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளர் சரத் பொன்சேகா தரப்பில் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் பிரசாரம் செய்யப்பட்டது. அது சாத்தியமற்றது, தேர்தல் 'வெடி' என்பது சிறு பிள்ளைக்கும் தெரியும்.

அதனாலேயே முன்னணியில் இருந்து உடைந்து சென்று தனி ரூபத்தில், சுயரூபத்தில் செயற்படும் ஐ.தே.க. 4,000 ரூபா சம்பள உயர்வு வேண்டும் என்று 'மட்டை' பிடிக்கிறது.

எது எப்படியோ, அரசாங்கம் நாளைய வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கவுள்ள குறைந்தளவு சம்பள உயர்வை நியாயப்படுத்தும், சமாளித்துவிடும் தகவல்கள், தரவுகள் அரச தரப்பிலிருந்த கசிந்துவருகின்றன.

அரசாங்க ஊழியருக்கு குறிப்பிடத்தக்க, போதுமான, அவர்கள் எதிர்பார்க்கும் சம்பள உயர்வு வழங்கப்பட்டால், அரசாங்கத்தின் பெரும் அபிவிருத்தித் திட்டங்களை கைவிட நேரிடும் என்று கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி எடுத்துக்காட்டியிருக்கின்றனர். அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் 100 ரூபா சம்பள உயர்வு வழங்கினால் கூட, அரசுக்கு ஆயிரத்து 400 கோடி ரூபா தேவை என்றும் அவர் அமைச்சர்களிடம் கணக்குக் கூறியுள்ளார்.

இதற்கிடையில், நாட்டின் இப்போதைய வருடாந்த வருமானம் 80,000 கோடி ரூபாவாக இருக்கும் போது அரச ஊழியருக்கான சம்பளமாக 50,000 கோடி ரூபா செலவினம் உண்டு என்று கல்வியமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் அபிவிருத்திக்கே முதலிடம் கொடுக்கப்படும் என்று ஜனாதிபதி தமது பதவியேற்பு நிகழ்வில் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கின்றார். நாடு அபிவிருத்தியை நோக்கி பயணித்துக்கொண்டிருப்பதாகவும், அது அரசியல் பேதங்கள் இன்றி மனிதாபிமானப் பயணமாக அமைய வேண்டும் என்றும் கூட வலியுறுத்தியுள்ளார் அவர்.

மக்கள் எதிர்பார்ப்பதை விடவும், நாட்டினை மிகச் சிறந்த நிலைக்கு கட்டியெழுப்பவேண்டியது தமது பொறுப்பு என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். நாட்டின் அபிவிருத்தியை நோக்கிய வேலைத்திட்டங்களையே முன்னெடுக்க வேண்டும் என்ற திடசங்கற்பத்துடன், மன உறுதியுடன் அவரது கருத்து வெளிவந்திருக்கிறது.

ஜனாதிபதியினுடைய தூர நோக்கில், நாட்டின் முன்னேற்றத்தை நாடும் நிலைப்பாட்டில், எவரும், எந்த அரசியல்வாதியும் பிழை காணமுடியாது. ஆனால் நாட்டு மக்களின் - அரசாங்க ஊழியர் உட்பட சகல தரப்பு மக்களினதும் - நாளாந்த வாழ்க்கை நிலை அடிமட்டத்துக்கும் கீழே தாழ்ந்து போகவும் விடக்கூடாது என்பதை அரச தலைவர் உட்பட அரசு உணரவேண்டும்.

அரசாங்த்தின் வீண் செலவுகள், டாம்பிக நிகழ்வுகள், அரசியல் பாரபட்சங்களின் பாற்பட்ட செலவுகள், அரசியல் செல்வாக்கு நாடி வகுக்கப்படும் நாட்டுக்குத் துளி பயனும் தராத திட்டங்கள், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் நிதி மோசடிகள் மற்றும் லஞ்சம் ஊழல்களைத் தடுக்கவும் அவற்றில் ஈடுபடுவோருக்கு அரசியல் பேதம் இன்றிக் கடும் தண்டனை வழங்கவும் அரச தரப்பு மனங்கொள்ளவேண்டும்.

அரசாங்கத் தரப்பும் அது சார்ந்த நிறுவனங்களும் அபிவிருத்திக்கு ஒவ்வாத பணிகளைப் புறந்தள்ளி, நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைத்து அவர்கள் சராசரி வாழ்வைத்தானும் அனுபவிக்க வகைசெய்யுமா?

அதற்கான வழிவகைகளைக் காணாமல் அபிவிருத்தி என்ற வார்த்தையை மட்டும் உச்சரிப்பது அர்த்தமற்றது. அபிவிருத்தி மக்களுக்காகவே அன்றி, வாய் வேதாந்தமாக மட்டும் இருப்பதால் ஏது பயன்? இதனையும் அரசாங்கமும் அதன் உறுப்பினர்களும் கவனத்தில் கொள்வது நாட்டுக்கு நல்லது.

# ஜனாதிபதியின் பதவியேற்பு மேடையில் பொலிஸ் மா அதிபர் இல்லாதது ஏன்?

கொழும்பு,நவ.21

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது ஜனாதிபதி பதவிக்காலத்திற்கான பதவியேற்பு வைபவத்தில் பொலிஸ் மாஅதிபர் வழமைக்கு மாறாக முப்படைத் தளபதிகளுடன் மேடையில் காணப்படாதிருந்தமை அன்றைய வைபவத்தில் கலந்துகொண்டோரின் விவாதத்துக்குரிய நிகழ்வாக இருந்தது.

ஜனாதிபதி தேசிய மட்ட விழாக்களில் கலந்துகொள்ளும்போது, முப்படைத் தளபதிகளுடன் பொலிஸ் மாஅதிபரும் ஜனாதிபதியின் பின் நிற்பது மரபாகும். ஆனால், மஹிந்த ராஜபக்ஷ, பிரதம நீதியரசர் அசோக டி சில்வா முன்னிலையில் நேற்றுமுன்தினம் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டபோது, முப்படைகளின் தளபதிகள் மட்டுமே மேடையில் காணப்பட்டனர்.

அலங்கார அணி வகுப்பில் பொலிஸ் காணப்படாமை பல ஊகங்களுக்கு இட்டுச் சென்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மரியாதை செலுத்தும் அணிவகுப்பிலும் பொலிஸ் அணியினர் இருக்கவில்லை.

தன்னை இனங்காட்ட விரும்பாத ஓர் அமைச்சர் தனக்கு பொலிஸ் மா அதிபர் ஏன் ஒதுக்கப்பட்டாரெனத் தெரியவில்லையென்றும் ஜனாதிபதிக்கு பொலிஸ் மா அதிபர் பாலசூரிய மீது பூரண நம்பிக்கை உண்டென்றும் தெரிவித்தார்.

# பூனையின் மலக்கழிவு மூலம் அபாயகரமான நோய் பரவுகிறதாம்

## மருத்துவ ஆராய்ச்சியில் கண்டுபிடிப்பு

கொழும்பு, நவ.21

பூனையின் மலத்திலிருந்துஉருவாகக் கூடிய ''பிளான்மோடியா கொண்டாய்' எனும் அபாயகரமான நோய் பற்றி மருத்துவ ஆராய்ச்சி நிலையம் பரிசோதனைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த நோயால் தாக்கப்படும் கர்ப்பிணிகளுக்கு கருச்சிதைவு, அங்கங்கள் செயலிழப்பு போன்றன ஏற்படலாமெனவும் பிறக்கும் குழந்தை மந்தபுத்தி கொண்டதாக இருக்கலாமெனவும் சாதாரண மனிதனுக்கு இந்த நோய் பாரிசவாதம், கண்பார்வை அற்றுப் போதல், மூளையில் கட்டிகள் தோன்றுதல் போன்ற அபாயகரமான விளைவுகள் ஏற்படக் கூடுமென ஆராய்ச்சி நிலையம் எச்சரித்துள்ளது.

பூனை இனத்தைச் சேர்ந்த விலங்குகளின் மலத்தில் இருக்கும் ''டொக்ஸோ பிளாஸ் மோடியா'' எனும் கிருமி மூலம் இந்த நோய்த் தொற்று ஏற்படுவதாக மருத் துவ ஆராய்ச்சி நிலையத்தின் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் திருமதி சாகரிக்கா சமரசிங்க தெரிவித்தார்.

இவ்வருடத்தில் 500 பேர் இந்த அபாயகரமான நோய்த்தொற்றுக்கு ஆளாகியுள்ளதாகவும் அவர்களது இரத்தத்தில் இந்த நோய்க் கிருமிகள் இருந்ததாகவும் அவர் கூறினார்.

இக்கிருமி தொற்றியவருக்கு உடலில் எந்தப் பாகத்திலும் வீக்கங்கள் ஏற்படுமெனவும் காய்ச்சல் குணம் தோன்றுமெனவும் தெரிவித்த சாகரிக்கா சமரசிங்க பூனைகளின் மலத்தைப் பாதுகாப்பாக அகற்றுவதன் மூலம் நோய் பரவலைப் பெருமளவு கட்டுப்படுத்தலாமெனவும் தெரிவித்தார். (ம)

# விஞ்ஞானத்தைப் பரப்பியதற்காக கலாநிதி மிகுந்தனுக்கு தேசிய விருது

யாழ்ப்பாணம், நவ.21

கடந்த ஐந்து வருடங்களாக விஞ்ஞான அறிவை மக்களிடையே



பரப்புவதில் அரும்பணியாற்றியமைக்காக கலாநிதி கு.மிகுந்தனுக்கு இவ்வாண்டுக்கான தேசிய விருது(National Award for Popularization of Science) வழங்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானதொழில்நுட்ப அமைச்சும் தேசிய விஞ்ஞான மன்றமும் இணைந்து இந்த வருடத்துக்கான தேசிய விருதை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 12 ஆம் திகதி சுகததாச உள்ளரங்கில் இடம்பெற்ற உலக விஞ்ஞானதினத்தில் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவால் மேற்படி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விவசாயபீட விவசாய உயிரியல் துறைத் தலைவராகவும் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் கடமையாற்றும் இவர், பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகின் பணிப்பாளராகவும், யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் இவ்வருடத்துக்கான தேர்வுத் தலைவராகவும் பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது.

இவர் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் தொடர்ந்து எழுதும் விஞ்ஞானக் கட்டுரைகளின் சிறப்புக்காகவே மேற்படி தேசிய விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (201)

# குமுதினியின் திருத்த வேலைகள் நீடிப்பு

நெடுந்தீவு,நவ.21

திருத்த வேலைகளுக்காக எடுத்துச் செல்லப்பட்ட குமுதினிப் படகு சமீப காலங்களில் சேவையில் ஈடுபடுவது சாத்தியமில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, திருத்த வேலைகளுக்கென ஊர்காவற்றுறைக்குக் கொண்டு செல்லப்பட்ட குமுதினிப் படகு அதன் திருத்த வேலைகள் முடிவுற்று எதிர்வரும் புதன்கிழமை மீண்டும் வழமையான சேவைக்குத் திரும்பும் எனக் கடந்த மாதம் வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (201-111)

# நாளை

| | | |
|---|---|---|
| கார்த்திகை 05 | | 22.11.2010 திங்கட்கிழமை |
| திதி: | : | பிரதமை மு.ப.09.04 வரை |
| நட்சத்திரம் | : | கார்த்திகை மு.இ.11.48 வரை |
| சுபநேரம் | : | 12.10-01.40 வரை |
| இராகுகாலம் | : | 07.40-09.10 வரை |
| [illegible] | | |

# அழிந்து போகாதது இறையாட்சியே

இன்று கிறிஸ்தவ மக்களாகிய நாம் '' கிறிஸ்து அரசர்'' பெரு விழாவைக் கொண்டாடுகின்றோம்.அதாவது இறையாட்சியில் அரசர் கிறிஸ்து ஒருவரே என்பதை நாம் முழுமையான விசுவாசத்துடன் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் இந்த இறையாட்சி என்பது எப்பேற்பட்ட ஆட்சியாக இருக்கும் என்பதையும் நாம் அறிந்து கொள்கின்ற போது ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழுகின்ற குறிப்பிட்ட மக்களை குறிப்பிட்ட காலத்தில் ஆட்சி செய்கின்ற நிலையற்ற ஆட்சியாளர்களின் ஆட்சி போல் அல்லாமல் காலத்திற்கும், இடத்திற்கும் அப்பாற்பட்ட நிலையிலே என்றும் வாழும் இறைவன் மக்களை ஆட்சி செய்வது இறையாட்சி ஆகும். இதனைத்தான் கபிரியேல் தூதர் ''அவரது ஆட்சிக்கு முடிவே இராது'' (லூக் 1:33) என்று மக்களை வார்த்தையின் போது அன்னை மரியாவிடம் கூறுகின்றார்.




இருள் சூழ்ந்த உலகில் பாவத்தின் பிடியில் சிக்கித் தவித்த எம்மை விட்டு மீட்டு இறையாட்சிக்கு உட்படுத்துவதற்காகவே கிறிஸ்து இந்த உலகத்தில் மனிதனாகப் பிறந்தார். அவர் தமது முதல் மறைதூதுப் பணியை ஆரம்பித்த போது '' காலம் நிறைவேறிவிட்டது, இறையாட்சி நெருங்கிவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்'' (மாற் 1:15) என்று பகிரங்க அழைப்பு விடுத்ததுடன் ஏழை உள்ளத்தோடு நீதியின் பொருட்டு துன்புறுத்தப்படுவோரும் (மத் 5:3:10) இறையாட்சியில் சிறப் பான பங்கை வகிப்பார்கள் என்று கூறுகிறார். மேலும் இன்றைய நற் செய்தியிலே நம்மை இறையாட்சிக்கு அழைத்துச் செல்வதற்காக கிறிஸ்து பலவிதமான அவமானங்களை, துன்பங்களை அனுபவிப்பதுடன் நம் மீட்புக்காக தமது உயிரையே அர்ப்பணிக்கிறார். (லூக் 23:35- 49) கிறிஸ்து அரசரோ எம்மை மீட்டு தமது இறையாட்சிக்குப் பங்காளிகளாக்குவதற்காக இப்படிப்பட்ட துன்ப துயரங்களை வலிந்து ஏற்றுக்கொண்டார்.

ஆனால் இன்று இந்த உலகத்திலுள்ள பெரும்பாலலான நாடுகளில் ஆட்சி புரியும் ஆட்சியாளர்கள் தாம் சார்ந்த இனத்தின் நலன்களை முன்னிலைப்படுத்தியும் ஏனைய இனங்களின் சுதந்திரங்களைப் பறித்து, அடிமைப்படுத்தி, கொடுமைப்படுத்தி இதன் மூலம் தமது செல்வாக்கை தாம் சார்ந்த இனத்தின் மூலமாகப் பெற்று தமது பதவியை தக்கவைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளில் சுயநல போக்கில் ஈடுபட்டு வருகின்றமை பற்றி நாம் அறிந்து கொள்கின்றோம். நாமோ எத்துயர் வந்தாலும் இவையனைத்தையும் கிறிஸ்துவுக்காக ஏற்று வாழ்ந்து நிலையான இறையாட்சிக்குப் பங்காளிகளாக ஆகும் செயற்பாடுகளை முன்னெடுத்து வாழ்வோமாக!

க.அருள்நேசன்
குருநகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியதோர் சந்தர்ப்பம்

தனியார் மற்றும் பிரத்தியேக வகுப்புக்கள் நடத்துவதற்கு யாழ்.நகர மத்தியில் அனைத்து வசதிகளுடன் கூடிய இடம் உண்டு.

தொடர்புகளுக்கு: 0771397361

## பதவி வெற்றிடம்

யாழ். மண்ணில் சுன்னாகம், நெல்லியடி, கிளிநொச்சி, சாவகச்சேரி, யாழ்.நகர் ஆகிய இடங்களில் தனது சந்தைப் படுத்தல் வலயமைப்பை விரிவுபடுத்தியுள்ள பிரபல சந்தைப் படுத்தல் கம்பனி மேற்படி கிளைகளுக்கான வெற்றிடங்களுக் குத் தகுதியானோரை உள்வாங்கவுள்ளது.

கல்வித் தகைமை - G.C.E O/L
வயதெல்லை - 18 - 45
ஊதியம் - 12,000 ஆயிரம் ரூபா முதல்
விண்ணப்ப முடிவுத் திகதி - 17.12.2010
விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி
C/o உதயன் 4092

(106252)

## 20ஆம் ஆண்டு நினைவாக...

### வேலுப்பிள்ளை சிவகடாச்சம்

பிறப்பு 1940.04.22
இறப்பு 1990.11.30

மலர்ந்த மலர்கள் மடியும் என்று
மலரும் மலர்கள் நினைப்பதில்லை
சேர்ந்த உறவுகள் பிரியும் என்று
சேரும் உறவுகள் நினைப்பதில்லை

தற்காலிக முகவரி:
பழைய தபால்கந்தோர் லேன்,
தலையாளி, கொக்குவில்.

சொந்த முகவரி:
புளியங்கூடல். (106314)

மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்.

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

### யாழ்ப்பாணத்தில் வீடுகள் வாடகைக்குத் தேவை.

யாழ் நகரத்திலிருந்து 7கி.மீ எல்லைக்குட்பட்ட பாடசாலை, வைத்தியசாலைக்கு அண்மித்த பகுதியில் இரண்டு வீடுகள் எஸ்.ஓ.எஸ் தற்காலிக சிறுவர் இல்லத்தை நடத்துவதற்கு $1^1/2$ வருடங்களுக்கு வாடகை அடிப்படையில் தேவை. இரண்டு வீடுகளும் நல்லூர்க் கோயிலுக்கு அண்மித்ததாக இருத்தல் விரும்பத்தக்கது. ஒவ்வொரு வீட்டிலும் 20 தொடக்கம் 30 பிள்ளைகள் தங்கக்கூடிய வசதி இருத்தல் வேண்டும். வாடகை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
திரு.திவாகர் இரத்தினதுரை
உதவி தேசிய இயக்குனர்
எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமம்
த.பெ.இல – 05
கெஸ்பேவ, பிலியந்தலை.
தொலைபேசி இல:- 0112103890, 0777689631

## EDWARD MAKES

**Edward pain Oil**

**எட்வேட் நோவு வாத எண்ணெய்**

சகல விதமான நோவு, வீக்கம், கண்டல், சுளுக்கு, கை கால் பிடிப்பு, நாரிப்பிடிப்பு, கழுத்துளைவு, தீச்சுட்ட புண், பித்த வெடிப்பு நீங்க நோ எண்ணெய் வாங்குங்கள்!

* பித்த வெடிப்பினால் ஏற்பட்ட நோவு, வேதனையிலிருந்து விடுதலை தந்து குணமளிக்கும் அதிசய தைலம்.
* மாடுகளுக்குண்டாகும் சகல நோவு, வீக்கங்களும் குணமாகும்.

**RED OINTMENT (ரெட் ஒயின் மென்ட்)**

நீர்ச்சிரங்கு, சொறி, புண், புரை, பருக்கள், கட்டு, படுவன் அக்கி, கிரந்தி அவியல், தலை அவியல், தீச்சுட்ட புண், வெட்டுக்காயம், உரேஞ்சல், வட்டக்கடி, அரைக்கடி சகலதையும் குணமாக்க வல்லது.

**எட்வேட் தயாரிப்புக்கள் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்**

பல காலமாகப் பற்பல மருந்துகள் செய்து அனுபவம் பெற்றவர்கள். சித்த ஆயுள்வேத மருந்துகள், வைத்தியர்களுக்கும் மருந்துக் கடைகளுக்கும் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.

நோயாளர்களுக்கு வைத்திய ஆலோசனைகளும், சிகிச்சையும் வழங்கப்படும்.

வைத்திய கலாநிதி கபிரியேல் எட்வேட்
L.A.M.P., R.I. M.P.
வைத்தியச்சாரி, வைத்தியபூபதி, கலாஜோதி
வைத்தியகலாநிதி திருமதி யஸ்ரின் புட் எட்னா
(B.S.M.S)

சித்த ஆயுள்வேத சுதேச மருந்துகள் உற்பத்தி நிலையம்
63, குருசோ வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். தொடர்பு: 021 2228171
edwardmakes @yahoo.com

## Baraka

உங்கள் நலத்தின் பங்காளி




### JointSafe

மூட்டுவலிகளினால் ஏற்படும் உபாதைகளுக்கான நிவாரணி.




### Memo-Plus

கற்றல், ஞாபகசக்தி மற்றும் மனம் சம்பந்தமான தொழிற்பாடுகளை அதிகரிக்கும்.




### FOOT-KIO

பித்த வெடிப்பு மற்றும் வரண்ட சருமத்தினை மென்மையாக்கும்.




### HAIRMENN

இளநரை மற்றும் முடி உதிர்தலை தடுக்கும்.

Manufactured by:
BIO EXTRACTS (PVT) LTD.
No: 11, S.De. S. Jayasinghe Mawatha, Kalubowila, Dehiwela.
Marketed by:
EXPOLANKA PHARMACEUTICALS (PVT) LTD.

**HOT LINE: 0777 800668**

யாழ். விநியோக முகவர்:
SIVA NARUMANAB POONGA
No: 288, Hospital Road,
Jaffna.
TEL: 0212222567

## நிறுவுநர் தினமும் பரிசுத் தினமும்

யாழ்ப்பாணம், நவ.21

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் நிறுவுனர் நினைவு தினமும் பரிசுத் தினமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன.

பாடசாலை அதிபர் ச. சிவானந்தராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் உத்தியோகத்தர் வ.செல்வம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக கிராமசேவையாளர் பொ.இராசேந்திரமும் கலாசார உத்தியோகத்தர் திருமதி ம.பத்மாதேவமலரும் பங்குபற்றஉள்ளனர்.

ஆசியுரையை சிவ ஸ்ரீ இராமபாலச்சந்திரன் குருக்களும் நினைவுப் பேருரையை முதுகலை மானி செ.பாலச்சந்திரனும் வழங்கவுள்ளனர். கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஐ-55)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கந்தையா சந்திரசேகரம்**

(ஓய்வுபெற்ற இலங்கை போக்குவரத்துச் சபை, எஸ்.என்.ஜே. சாரதி)

திதி: பூரணை

மண்ணின் மடியில்
05.11.1936
விண்ணின் மடியில்
08.12.2003

ஏழாண்டென்ன!
எத்தனை ஆண்டுகள்
கடந்தாலும் நீங்காதப்பா
உங்கள் நினைவுகள்,
என்றும் எங்களை விட்டு.

நிரந்தர முகவரி: "முரளி வாசம்",
இல.114, படித்த மகளிர் திட்டம், மிருசுவில்.

தற்காலிக முகவரி:
மீசாலை வடக்கு, கொடிகாமம்.

குடும்பத்தினர். (106285)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 05 ★ 09 ★ 1951



விண்ணில் 12 ★ 12 ★ 2008

**தனலெட்சுமி பாலசுப்பிரமணியம்**

நயினாதீவு - 5

திதி: பூரணை

எமதருமை அன்பு அம்மாவே!
ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
ஆறவில்லை எம்மனது
ஏக்கத்துடன் எம்மை தவிக்கவிட்டு
நடமாடும் வீட்டில் - ஏனம்மா
பாடமாகப் போனீர் -
அம்மாவே உன் ஆத்மா சாந்திக்காக
நயினை நாகபூஷணி அம்பாளை வேண்டுகின்றோம்.

6, வளாக வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர். (106299)

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை செல்வராஜா



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்வராஜா நேற்றுமுன்தினம் (19.11.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இரத்தினம் தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - மனோன்மணி தம்பதியினரின் மருமகனும் சத்தியபாமாவின் அன்புக் கணவரும் கலாமோகன், வனஜா, சத்தியமூர்த்தி, சத்தியராஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் வசந்தரூபி, கருணாமூர்த்தி, ஜெயராணி, ராசினி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரவீன், சர்வீன், சிந்துஜா, நிதுஷனா, ஜதுமிகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற தவமணி, செல்வராணி, தங்கராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் லோகேந்திரன், இந்திராணி, சிவலோகநாதன், வாமதேவன், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், மல்லிகாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.11.2010) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னமார் கோயிலடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.
T.P. 021 3215300, 0778813151
(சி/573076)

தகவல்:
செ.சத்தியராஜா
(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறு காரம்

# வடக்கு நோக்கிய அரசியல் பயணங்கள்

## இனந்தெரியாதவர்களினால் அரங்கேற்றப்படும் அரசியல் காடைத்தனங்கள்

போர்முடிவுக்கு வந்து ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்பு அவ்வீதி என்றுமில்லாதவாறு மிகப்பிரபலமடைந்து விட்டது. நாளாந்தம் தென்னிலங்கையிலிருந்து போரின் வெற்றியையும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட பேரழிவுகளையும் கண்டுகளிக்க வரும் தென்னிலங்கை உல்லாசப் பயணிகள் முதற்கொண்டு வெளிநாட்டு ராஜதந்திரிகள், கடனுதவி வழங்குவோர், தென்னிலங்கையின் அரசியல்வாதிகள் எனப் பலரது பயணங்களும் வேகமாகவும் தொடர்ச்சியாகவும் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பயணங்களில் வெவ்வேறு தரப்பைச் சேர்ந்த அரசியல்வாதிகளின் பயணங்கள் மிகமுக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இன்று வடக்கு கிழக்கின் அரசியல் அரங்கில் விடுதலைப்புலிகள் இல்லாத நிலையில் அந்தவெற்றிடத்தை நிரப்ப அல்லது பங்கு போட பல்வேறுதரப்பினரும் பல அரசியல் பயணங்களையும் நடவடிக்கைகளையும் போட்டி போட்டுக் கொண்டு மேற்கொண்டு வருவதை அவதானிக்க முடிகிறது. ஒருபுறம் அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஏனைய அரசியல்வாதிகள் எனப் பலரும் இங்கு விஜயம் செய்து விழாக்களில் கலந்து கொள்வதும். அபிவிருத்தி தொடர்பான வேலைத்திட்டங்களில் பங்கெடுப்பதும் மக்களின் சந்திப்புக்களை நடத்துவதும் எனப் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். மறுபுறம் எதிர்க்கட்சியினர் குறிப்பாக ஜே.வி.பியினர் இங்கு வருவதும் தமிழ் மக்கள் தொடர்பான பிரச்சினைகளில் மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி சில சிறு போராட்டங்களை முன்னெடுக்க முயல்வதையும் காணக்கூடியதாகவுள்ளது. ஜே.வி.பியின் இந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக வடக்கில் காணாமற் போனோர் தொடர்பாக அவர்களின் பெயர்களை வெளியிடுமாறு கைது செய்யப்பட்டோர் அரசாங்கத்தைக் கோரும் மகஜரில் தமிழ் மக்களின் கையெழுத்து பெறும் போராட்டத்தை யாழ். பஸ் நிலையத்தில் நடத்த முன்வந்தனர். இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி உட்பட ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் வீட்டில் அவருடன் உரையாடிக் கொண்டிருந்த போது அங்கு வந்த இனம்தெரியாத நபர்கள் ஜே.வி.பி.யினரை தாக்கிக் காயப்படுத்தினர். பின் அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அடுத்த நாள் அவர்கள் தாம் தங்கியுள்ள விடுதியில் பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தத் திட்டமிட்டிருந்த போதும் விடுதி உரிமையாளருக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் காரணமாக அதுவும் கைவிடப்பட்டது. பஸ்நிலையத்தில் கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றபோது அங்கு வந்த மக்கள் முட்டைகளாலும், தக்காளிப்பழங்களாலும், கற்களாலும் தாக்கப்பட்டனர். அண்மையில் ஆயுதப் படையினர் நிற்கும் போதே அச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

மேலும் இப்போராட்டத்தில் கலந்துகொள்ள வந்த ரஜரட்டை பல்கலைக்கழக மாணவ மாணவியர் பொலிஸாரால் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு பலவந்தமாகத் திருப்பியனுப்பப்பட்டனர். இப் போராட்டத்தைக் குழப்ப ஒரு காடையர் கூட்டம் வன்முறையில் ஈடுபட்டனர். இதற்கு பொலிஸாரும் இராணுவத் தினரும் மறைமுகமாகக் துணைபோனார்கள் என்பதே அங்கு நின்ற மக்களின் அபிப்பிராயம் ஆகும். ஆனால் இது தொடர்பாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான மத்திய நிலையத்தின் பணிப்பாளர் இத்தாக்குதலுக்கும் அரசுக்கும் சம்பந்தமில்லை எனவும் யாழ் மக்களே இதனைச் செய்திருக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார். இதே போன்று அரச கட்டுப்பாட்டில் உள்ள ஊடகம் ஒன்றும் ஆத்திரமுற்ற தமிழ் மக்களே இத் தாக்குதலை நடத்தினர் எனவும் செய்தி வெளியிட்டது.

அரச தரப்பு, இந்த இனம் தெரியாதவர்களை 'விரும்பாத தமிழ் மக்கள்' எனவும், 'ஆத்திரமடைந்த தமிழ் மக்கள்' எனவும் குறிப்பிட்டு சில அரசியல் உள்நோக்கம் கொண்ட காடையர்களை 'தமிழ்மக்கள்' எனக்காட்ட முயல்வது மக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. இனத்துவேசங்களை கிளப்பி இனமோதல்களை உருவாக்க ஒரு சதி இங்குமேற்கொள்ளப்படுகிறதா எனக் கேட்கத் தோன்றுகிறது.

ஏற்கனவே அனைத்திலங்கைப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் யாழ். பல்கலைக்கழகத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவிப் பொருள்களை வழங்கக் கொண்டு வந்த போது அவர்கள் வளாகத்தில் உட்செல்ல அனுமதிக்கப்படவில்லை. அது மட்டுமன்றி அன்றிரவு அவர்களில் சிலர் ஆரியகுளம் சந்தியில் வைத்துத் தாக்கப்பட்டதுடன் அவர்களுக்குக் கொலை அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டது. அதுவும் இந்த இனம்தெரியாதவர்களின் சாதனைதான்.

தென்னிலங்கையிலிருந்து வந்து ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கானோர் யாழ். நூல் நிலையத்துக்குள் புகுந்து காடைத்தனம் புரிந்ததையோ, தந்தை செல்வாவின் தூபி அமைந்திருந்த வளாகம் சேதப்படுத்தப்பட்டமையையோ, சிங்கள மக்கள் அத்துமீறி நாவற்குழியில் வந்து குடியேறியமையையோ இந்த இனம் தெரியாதவர்கள் கண்டு கொள்ளவில்லை. தமிழ் மக்களுக்கு விரோதமான தமிழ் மக்களின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கும் போது இவர்கள் மௌனம் காத்து விடுகின்றனர்.

**சந்திரசேகர ஆசாத்**

ஆனால் யாழ். பல்கலைகழக மாணவர்களுக்கு தென்னிலங்கை மாணவர்கள் உதவி செய்ய வரும் போதும் சிறையிலிருப்போர், காணாமற்போனோர் தொடர்பான போராட்டங்களை முன்னெடுக்கும் போதும் இவர்கள் சீறி எழுவதன் மர்மம்தான் என்ன?

இவர்களின் வன்முறைகளில் அதாவது ஒரு நியாயத்தன்மை இருக்க முடியுமா? இது இனம்புரியாதவர்களின், இனம்புரிய முடியாத அரசியல் நடவடிக்கைகளா?

ஜே.வி.பி. என்பது அடிப்படையில் ஓர் இனவாத அமைப்பு என்பதில் தமிழ் மக்கள் மத்தியில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. தென்னிலங்கை அரசியலில் பலவீனமடைந்து விட்ட தமது நிலைமையை ஈடு செய்ய வடபகுதியை நாடுகின்றனர் என்பதில் சந்தேகமில்லை. எல்லா அரசியல்வாதிகளையும் போன்று இவர்களும் அதற்காகப் பல்வேறு வேடங்களைப் புனைபவர்கள் என்பதையும் தமிழ் மக்கள் அறிவார்கள்.

போரின் முடிவின் பின் அரசியல் களத்தில் விடுதலைப்புலிகள் இல்லாமல் போன பின்பு ஒரு வெற்றிடம் ஏற்பட்டிருப்பது உண்மைதான். வற்றிய குளத்தில் மீன் பிடிக்கப்பலரும் போட்டியிடுவது இதைவிட உண்மை. இக்கைங்கரியத்தில் அரச தரப்பும், அரச ஆதரவு சக்திகளும், ஜே.வி.பி, ஐக்கிய தேசியக் கட்சி போன்ற எதிர்க்கட்சிகளும் போட்டி போட்டுக் கொண்டு வடபகுதி அரசியலில் களமிறங்குகின்றன. இப்போட்டியில் இறங்கியுள்ள எந்த ஒரு தரப்புக்கும் தமிழ் மக்களின் நலன்கள் தொடர்பாகவோ, தமிழ் மக்களுக்குத் தங்கள் போட்டிகளால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாகவோ அக்கறை கிடையாது.

ஆனால் இவர்கள் அனைவருமே தமிழ் மக்கள் தெளிவாகவே உள்ளனர் என்பதை இன்னும் புரிந்து கொள்ளவில்லை. தமிழ் மக்கள் தங்கள் தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றை விசுவாசமாக கற்று அதற்காகச் செயற்படுபவர்களுக்கே தங்கள் ஆதரவை வழங்குவார்கள் என்பதைக் கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கிய பேராதரவு மூலம் நிரூபித்துவிட்டனர். எனவே "நேருக்கு நேர் கடைபோடும்" அரசியல், தமிழ் மக்கள் மத்தியில் செல்லுபடியாகாது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

வடமாகாணத்தில் எப்போதுமே இடதுசாரிகளுக்கென ஒரு வலுவான அடித்தளம் உண்டு. அதை இலக்கு வைத்தே ஜே.வி.பியின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. ஆனால் ஜே.வி.பி ஒரு இடதுசாரி அமைப்பு அல்ல என்பதைத் தமிழ் மக்கள் எப்போதோ புரிந்து கொண்டுவிட்டனர். தமிழ் மக்களுக்கு எதிராகத் தொகுக்கப்பட்டு பேரழிவை ஏற்படுத்திய இந்தப் போரை ஆதரித்த எவர் பற்றியும் தமிழ் மக்கள் எப்போதும் விழிப்பாகவே இருப்பார்கள்.

இப்படியான ஒரு நிலையில் வடபகுதியில் வைத்து ஜே.வி.பியினர் மேல் நடத்தப்படும் வன்முறைகளுக்கான தேவை எதுவுமேயில்லை. அது மட்டுமன்றி அரசியல் நடவடிக்கைகளுக்கு எதிரான காடைத்தனங்களைத் தமிழ் மக்கள் நிராகரிக்கவே செய்வார்கள். அதிலும் தமிழ் மக்களின் பேரால் இப்படி நடத்தப்படுவது உண்மையிலேயே ஒரு தமிழ் மக்கள் விரோத நடவடிக்கையாகும்.

யாழ். நூலக சம்பவம், தந்தை செல்வா நினைவுத் தூபியில் இடம்பெற்றவை, நாவற்குழியில் மேற் கொள்ளப்படும் அத்துமீறிய சிங்களக் குடியேற்றம் இவை அனைத்துக்கும் அரச படைகளின் ஆதரவு உண்டு. அரசாங்க தரப்பைச் சேர்ந்தவர்களும் இவற்றை பூசி, மெழுகி மறைக்க முயற்சிக்கிறார்களேயொழிய இவற்றுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடத் தயாரில்லை. இவையனைத்தும் தமிழ் மக்களை வேண்டுமென்றே அவமதிக்கும், ஆத்திரமூட்டும் சம்பவங்களாகும்.

இதேபோன்று ஜே.வி.பியினர் மேல் தாக்குதல் நடத்தப்பட்டமையும் அப்பழியைத் தமிழ் மக்கள் மேல் போடுவதும் சிங்கள மக்களையும் சினமூட்டும் நோக்கம் கொண்டவையாகும்.

இப்படியாக சிங்கள, தமிழ் மக்களிடையே வெறுப்பையும், கசப்புணர்வையும், முரண்பாடுகளையும் ஏற்படுத்தும் வகையிலான சம்பவங்களை சிங்களக் கடும்போக்குவாதிகள் இனமோதல்களை உருவாக்கத் தயங்கமாட்டார்கள். இப்படியான சம்பவங்கள் இனக் கலவரங்களுக்கு அடித்தளமிடும் அபாயம் உண்டு. சிலர் இப்பிடியான ஒரு சூழ்நிலையைத் திட்டமிட்டு உருவாக்குகிறார்களோ என்று சந்தேகப்பட வேண்டியுள்ளது.

இன்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு தொடர்பாக மேற்கு நாடுகள், இந்தியா போன்றவை கொடுத்து வரும் அழுத்தங்கள் காரணமாக அதன் தீர்வுக்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் உருவாகி வருகின்றன. நாடாளுமன்றத்திலும் இப்பிரச்சினையை துணிச்சலுடன் முன்னெடுக்க மூன்றில் இரண்டு பெரும்பான்மை உண்டு.

இதை விரும்பாத சக்திகள் அரசாங்கத்துக்கு உள்ளேயும் உண்டு. வெளியேயும் உண்டு. அரசுக்கு ஆதரவு வழங்கும் தமிழ்க் கட்சிகள் மத்தியிலும் உண்டு. இனப்பிரச்சினைத் தீர்க்கப்பட்டு ஒரு சுமுகசூழல் தோன்றினால் நாம் அரசால் ஓரங்கட்டப்பட்டு விடுவோமோ என்ற பயம் இன்னும் பல தமிழ் அரசியல்வாதிகளுக்கு உண்டு.

இதன் அடிப்படையிலேயே சிங்கள, தமிழ் மக்களிடையே முரண்பாடுகளையும் மோதல்களையும் உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஓர் இனக்கலவர சூழல் ஏற்பட்டால் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகள் கிடப்பில் போடப்பட முடியுமல்லவா?

அப்படியிருப்பினும், வடக்கு நோக்கிய பயணங்களில் ஒரு சிலருக்கு மாலை மரியாதைகளும் இன்னொரு சிலருக்கு அடி உதைகளும் என்ற நடைமுறைகள் மூலம் தமிழ் மக்களின் மனதை எவரும் வெற்றி கொள்ள முடியாது. ஆனால் இந்த இனம்புரியாதவர்களின் அரசியல் பின்னணி கொண்ட காடைத்தனங்கள் அனுமதிக்கப்படும் வரை தமிழ் மக்களுக்கு நிம்மதியான வாழ்வு என்பது எட்டாக் கனிதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயி அவதார தின நிகழ்வு

வடமராட்சி, நவ.21

பருத்தித்துறை ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 85 ஆவது அவதார தின நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நிலையத் தலைவர் ஸ்ரீ ஆ.ஜெகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 5 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில், 8 மணிக்கு பிரசாந்திக் கொடியேற்றம் இடம்பெறும். பின் சாயி பஜனையைத் தொடர்ந்து காலை 9.30 மணிக்கு வட பிராந்திய சத்ய சாயி சேவா நிலையங்களின் இணைப்பாளர் ஸ்ரீ.இ.வசந்தசேனன் சிறப்புரையாற்றுவார்.

அத்துடன் பாலவிகாஸ் மாணவர்களின் நடன, நாடக காவடி, பேச்சு நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

'' சாயியை அறிவோம்'' என்னும் தலைப்பில் இளைஞர்களின் உரையாடலும் இடம்பெறும்.

நண்பகல் 12.30 மணிக்கு மங்கள ஆரத்தியுடன் நிகழ்வுகள் நிறைவுறும்.

(உ-236)

## திருத்தி வாசிக்கவும்

நேற்று சனிக்கிழமை 'உதயன்' பத்திரிகையின் 23ஆம் பக்கத்தில் வெளியாகிய கந்தப்பு சின்னத்துரை என்பவரின் மரண அறிவித்தலில் முகவரி, பழம்றோட், ஆனைக்கோட்டை என்பது அராலி வீதி, சங்கானை என்று தவறுதலாகப் பிரசுரமாகி உள்ளது.

அத்துடன் மகள்-தவநாயகம் என்றுள்ளதை மகன்-தவநாயகம் எனவும் திருத்தி வாசிக்கவும்.


## பாராட்டி வாழ்த்தில் திருத்தம்

எம்மால் கடந்த 18.11.2010 இல் வெளியிடப்பட்ட வெற்றிவேல் நிசோதன் என்பவரின் பாராட்டு வாழ்த்து விளம்பரத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி என்பதற்குப் பதிலாக யாழ்.மத்திய கல்லூரி என தவறுதலாக பிரசுரமாகிவிட்டது. இதை திருத்தி வாசிக்கவும்.

(106294) விளம்பரதாரர்.

YMCA JAFFNA

## 2011 ஆம் ஆண்டுக்கான கேள்விக் கோரிக்கை

யாழ்.வை.எம்.சீ.ஏ.
கட்டடத்தில் அமைந்துள்ள

1.சிற்றுண்டிச்சாலை
2.கடை (கச்சேரி நல்லூர் வீதி)
3.கடைத்தொகுதியின் கீழ்க்கடை (Ground floor) 4.கடைத்தொகுதியின் 2ஆம் மாடிக் கடை (2nd floor)

என்பவை குத்தகைக்கு கொடுக்க கேள்விக்கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

முடிவுத் திகதி: 01.12.2010

காகித உறையின் மேல் இடது மூலையில் கோரிக்கைக்கான கடைத் தொகுதியை குறிப் பிடவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

Y.M.C.A
109,கண்டி வீதி, யாழ்ப்பாணம்

பொதுச்செயலாளர்.

## ALL DIGITAL IMAGING SOLUTION

XEROX DIGITAL PRESS

அச்சகத்துறையினருக்கு ஓர் வரப்பிரசாதம்
(தொகையாக பிரதியாக்கம் செய்வோருக்கு விசேட சலுகை)



2400DPI

COLOUR PHOTO COPY - 50/=

100 பிரதிகளிற்கு மேல் பிரதியாக்கம் செய்வோருக்கு



1440DPI

பனர் - 25/= முதல்
ஸ்ரிக்கர்- 60/= முதல்
ALBUM REXSIN COVER-150/=

| | |
|---|---|
| A4 Paper Print | - 25/= |
| A4 Sticker | - 35/= |
| visiting Card | - 3/= |
| dvd cover | -20/= |
| cd cover | -10/= |
| cd/dvd sticker | - 8/= |
| 10x15 (2 side ALBUM) | - 80/= |

உங்களது உறவினர் நண்பர்களின் படங்களுடன் A3 அளவுடைய 2011ம் ஆண்டு கலண்டர் - 50/=

மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப், 62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பிள்ளையார் இன் 'A' உல்லாசப் பயணிகள் தங்குமிடம்
('A' Grade Hotel Approved by the Ceylon Tourist Board)

## ROOM BOYS / WAITERS

மேற்படி வேலைக்கு அனுபவமுள்ள ஆள்கள் தேவை. மாநகர சபை எல்லைக்குள் இருப்பவர் விரும்பத்தக்கது. அனுபவமில்லாதவர்கள் பயிற்சியளிக்கப்படுவர்.

நாளை 22-11-2010 மு.ப.10 மணிக்கு நேரில் வரவும்.

Pillaiyar INN
31, Manipay Road, Jaffna.
Tel- 021 222 2829
Tel- 021 222 4449
E-mail pillaiyar.in@gmail.com

## metropolitan

### சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் தேவை

கடந்த 50 வருடங்களிற்கு மேலாக இலங்கையில் **Canon Photo Copier & IT** துறையில் முன்னணி வகிக்கும் நிறுவனத்துக்கு யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்திற்கு துடிப்பு மிக்க சந்தைப் படுத்தல் உத்தியோகத்தர் மற்றும் தொழில் நுட்பவியலாளர்கள் தேவை.

யாழ்மாவட்டம்
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் -02
- தொழில்நுட்ப உத்தியோகத்தர் -01
- கணக்கு எழுதுவினைஞர் -01

கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டம்
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் -01
- தொழில்நுட்ப உத்தியோகத்தர் -01

தகைமை:-

சாதாரணதரப்பரீட்சையில் கணிதத்தில் திறமை சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி மற்றும் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தில் முன்அனுபவம் (காப்புறுதி நிறுவனத்தில் வேலை செய்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

தொழில்நுட்பவியலாளருக்கு தொழில்நுட்பக்கல்லூரியின் இலத்திரனியல் கற்கைநெறி அல்லது அதற்கு சமனான தகைமை வேண்டப் படுகிறது.

கணக்கு எழுதுவினைஞருக்கு க.பொ.த உயர்தரப்பரீட்சையில் கணக்கியல் படித்தவரும், ஆங்கிலம் எழுத வாசிக்க தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

தகைமையுடையோர் தங்களது சுயவிவரக்கோவையை 26.11.2010ற்கு முன் எமது நிறுவனத்திற்கு கிடைக்கபெறக்கூடிய வகையில் அனுப் பவும்.

சுயவிவரக்கோவை அனுப்ப வேண்டியமுகவரி :

Metropolitan Office (Pvt) Ltd.
Dealers Office
Navahala, 200, K.K.S Road, Jaffna.

(106173)

## சிறுவர்களின் சிந்தனையை சிறகடிக்க செய்திட ஆரம்பமாகும்




வாருங்கள் உங்கள் வளமான எதிர்காலத்திற்கு வித்திட ஓர் அரியவாய்ப்பு

- எதிர் கால கணினியுகத்தின் சவால்களை வென்றிட நாடுங்கள் MCN கணினிப்பூங்காவை.
- மிகக்குறைந்த கட்டணத்தில் சிறுவர்களுக்கான கணனி வகுப்புக்கள்

தை தொடக்கம் மார்கழிவரை (12 மாதங்கள்)
ரூபா 3000/= மட்டும்

* MS Windows And It * MS Word * MS Excel
* MS Access * MS Power Point * Photo Shop
* Internet & E.mail * English

12 Month 3000/=

வயதெல்லை 7 வயது தொடக்கம் 16 வயது வரை
- சிறுவர்களை வாகனத்தில் ஏற்றி இறக்கப்படும் இதற்கான மாதக்கட்டணம் 150/=
- கணினிப் பூங்காவுடன் இணையும் மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வகுப்புகளும் நடத்தப்படும்.
- சிறுவர்களின் வசதிக்கேற்ப வகுப்புகள் மாற்றியமைக்கப்படும்.

வகுப்புகள் ஆரம்பமாகும் திகதிகளும் இடங்களும் வருமாறு.
- 01.01.2011- யாழ்ப்பாணம், உடுப்பிட்டி, மந்திகை, கொடிகாமம், கிளிநொச்சி, மல்லாவி, வவுனியா.
- 01.02.2011- மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, மன்னார், விஸ்வமடு.

தொடர்புகளுக்கு: 077 1290458

AMCO

## அறிமுகமாகிறது... அம்கோ வெயிட் கெயின்

எடையைக் கூட்டுவதற்கு இலகுவான வழி!




அம்கோ வெயிட் கெயின் என்பது உங்கள் உடல் இழையங்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை உள்ளடக்கியதாக மோல்ட் சாற்றிலிருந்து விஞ்ஞான ரீதியாகத் தயாரிக்கப்பட்ட புரதச்சத்து நிறைந்த பாலாகும். அது லைசின் பதார்த்தம் கொண்டு செறிவூட்டப்பட்டுள்ளதால், உடலின் எடையை அதிகரிக்கும் ஆற்றலை அல்லது புரத உள்வாங்கலை (புரத வினைத்திறன் விகிதம்) முன்னேற்ற உதவும். சமபோஷாக்கான உணவுடன் அம்கோ வெயிட் கெயின் எடுத்தால் உங்கள் எடையை அதிகரிக்கலாம்.

**சிறுவர்களுக்கும் வளர்ந்தோருக்கும் 450கி. டின்களில் கிடைக்கின்றது.**

சிபாரிசு செய்யப்பட்ட அம்கோ வெயிட் கெயின் அளவு
ஒவ்வொரு உணவு வேளைக்கும் 1 மணிநேரம் கழித்து ஒரு கிளாஸ் சூடாக அல்லது குளிரூட்டிப் பருகவும்.
(நாள் ஒன்றிற்கு குறைந்தது 3 கிளாஸ்கள்)

இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளவை தகவலுக்காக மட்டுமே. எப்போதும் உங்கள் வைத்தியரின் ஆலோசனையை நாடவும்.

எடுப்பான தோற்றம். நலமான வாழ்வு.
அம்கோ வெயிட் கெயின் மூலம் உங்கள் எடையைக் கூட்டுங்கள்

AMCO
weight GAIN




நாடெங்கும் முன்னணி பார்மஸிகளிலும் சுப்பர் மார்க்கட்களிலும் வாங்கலாம்

ஏக விநியோகஸ்தர்:
சூரி ட்ரேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்
இல. 6, பங்களாவத்தை வீதி, மாபோல, வத்தளை, இலங்கை.
தொலைபேசி: +94 11 4810251 ஈ-மெயில்: info@suritrading.com
வெப்தளம்: www.suritrading.com

அறிமுக விலை
சிறுவர் ரூ.980/=
வளர்ந்தோர் ரூ.1,200/=

Gracewinds Advertising


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளிக் கடன்

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை - 174

*1960களின் ஆரம்பகட்டத்தில் இலங்கைத் தமிழ்ச் சிறுகதைத் துறையில் காலடி வைத்த 'கோபதி'யின் இயற்பெயர் ப.தெய்வேந்திரன்.*

*இவரது சிறுகதைகள் சுதந்திரன், தினகரன், வீரகேசரி, சிந்தாமணி, சஞ்சீவி ஆகிய பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன.*

*அரச எழுதுவினைஞர் சேவையில் கடமையாற்றியவர். சிறுகதைப் போட்டிகளில் பரிசில்களும் பெற்றுள்ளார்.*

*கவிதைத் துறையிலும் திறமையை வெளிப்படுத்தியவர். இவரது கவியாக்கம் 'கச்சேரி காவியம்' என்ற தலைப்பில் வெளியானது.*



*1964 ஆம் ஆண்டில் சுதந்திரன் பத்திரிகையில் வெளிவந்த இவரது 'கொள்ளிக்கடன்' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.*

அன்று செவ்வாய்க்கிழமை. அர்ச். அந்தோனியாருக்குரிய திருநாள்!

தேவாலயத்தின் முன்றலில் வழமை போல ஏக ஜனக் கூட்டம். சாதாரணமான வேட்டியும் சேட்டும் அணிந்த, அன்றாட வாழ்வுக்காக வயிறு நிரப்புவதற்குப் போசாக்கு நிறைந்த உணவு 'ஜீரணிக்க வழி அறியாத' முதலாளி முன் கையேந்தி நிற்கும் தொழிலாளி முதல் 'கோட்டும் சூட்டு' மாக மேல் நாட்டு நாகரிகத்தில் தோய்ந்த உல்லாச வாசிகள் ஈறாக அந்தோனியார் கோயிலுக்குள் நுழைவதும் கடமை முடிந்து அங்கிருந்து புறப்படுவதுமாயிருக்கின்றனர்.

தேவாலய முகப்பின் ஒரு மூலையில் ஒரு பிச்சைக்காரக் குடும்பம், யாராவது அதிர்ஷ்டசாலிகள் தங்களுக்கு ஆண்டவன் அளித்த அனுக்கிரத்துக்குப் பிரதி உபகாரமாக சில பாண் துண்டுகளையோ, சில்லறை நாணயங்களையோ தங்கள் முன் வீசி எறியமாட்டார்களா என்று தவமிருக்கும் அந்த வேளையிலும், வல்லரசுகள் அணுகுண்டுகளைக்கையில் ஏந்தி ஒருவரையொருவர் மிரட்டுவது போலத் தங்கள் கைத்தடிகளைக் காட்டி வாக்குவாதப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்! அந்த மனித மந்தையின் மத்தியில் மாமிசத் தால் மறைக்கபடக் கூடாத ஒரு எலும்புக் கூட்டின் வயோதிபப் பிரதிநிதி, ஒரு இளம் கிழவிக்குத் தனது கைத்தடியைக் காட்டி மிரட்டிக் கொண்டிருக்கிறான். ஆம் நாற்பத்தைந்து வயதின் விளிம்பிலேயே வீற்றிருந்த அந்தப் பெண்ணின் நிஜ வயதை, வறுமையால் வறுக்கப்பட்டு ஒட்டி உலர்ந்த உடம்பு இரு மடங்கு பறைசாற்றிக் கொண்டிருந்தது. அந்தப் பெண்ணும் கிழவனுக்கு விட்டுக் கொடுப்பதாகத் தெரியவில்லை.

'கிழட்டுப் பிச்சைக்காரப் பயலே, நான் போற போற இடத்துக்கு வந்து என் பிழைப்பை ஏன் கெடுக்கிறாய்? உனக்குக் கொள்ளையில போக இன்னும் காலம் வரவில்லையே!'

அவள் வாய் வில்லிலிருந்து புறப்பட்ட பாணங்களாகக் கிழவனைத் தாக்கியது.

'தூ.. கிழட்டுப் பெட்டை நாயே, உன்ர பிழைப்பை நான் எப்படி கெடுக்க முடியும், வாறவங்க, போறவங்க எல்லாரும் உனக்குத் தானே அள்ளிக் கொடுக்கி றாங்க?' இது கிழவனின் வச்சிராயுதத் தின் தாக்குதல். இந்த வாய்ப்போரைக் கவனித்துக் கொண்டிருந்த ஒரு பிச்சைக்காரத் தத்துவஞானி, 'பிச்சைக்காரன் பிச்சைக்காரன் மேல் தான் பொறாமை கொள்கிறான். பணக்காரன் மேல் அவனுக்குப் பொறாமை ஏற்படுவதில்லை' என்று சலித்துக் கொள்கிறான்.

அவர்களின் யுத்தம் உச்சநிலையை அடையும்போது, 'பொன்டியாக்' காரைச் செலுத்தி வந்த தனவந்தர் ஒருவர், பெரிய பொட்டலம் ஒன்றுடன் காரை விட்டு இறங்குகிறார். இதைக் கண்ணுற்ற பிச்சைக்காரர் ஓட்டப்பந்தயத்தில் ஈடுபட்டு நொடிப் பொழுதில் காரைச்சுற்றி வளைத்துக் கொண்டனர். இதுவரையும் பலப் பரீட் சைக்குத் தயாராகிக் கொண்டிருந்த இருவரும் தங்கள் யுத்தப் பிரகடனத்தைத் தற்காலிகமாக ரத்துச் செய்து விட்டுக் காரை நோக்கி விரைகின்றனர்.

'ஒழுங்காக வரிசையில் நின்றால் தான் பாண் கொடுப்பேன்' என்று காரில் வந்த தனவந்தர் நிபந்தனை விதிக்கிறார். உடற்பயிற்சி ஆசிரியரின் ஆணைக்குக் கட்டுப்பட்ட மாணவர்களைப் போல பிச்சைக்காரர்கள் வரிசைக்கிரமமாக நிற்கின்றனர். ஒரு அந்தலையிலிருந்து தலைக்கு ஒரு பாண் வீதம் விநியோகித்துக் கொண்டு வருகிறார். 'தானம் கொடுப்பவரின் முதல் பாண்களைப் பெற்ற பிச்சைக்காரர்கள் அவைகளைக் கந்தல் சேலையில் மறைத்துக் கொண்டு வரிசையின் மறுகோடிக்குச் சென்று ஒழுங்காக நிற்கிறார்கள். தன வந்தரின் கண்களில் மண்ணைத் தூவி மறுமுறையும் பாண் பெறுவதற்காக.

அப்பொழுது பாண் விநியோகிப்பவர், முன்பு ஒரு கிழவனுடன் வாய்ச்சமர் புரிந்துகொண்டிருந்த பெண்ணுக்கு அண்மையில் வந்து கொண்டிருக்கிறார். அவளுடைய கண்கள் அகல விரிந்து தனவந்தரின் முகத்தை எடை போடுகிறது. மறுகணம் அவள் தன்னுடைய முகத்தை முந்தானையால் மறைத்துக் கொண்டே கூட்டத்தைவிட்டு அகன்றுவிடுகிறாள்.

ஐசுவரியவான்களின் மத்தியிலென்றாலென்ன. பிச்சைக்காரனின் மத்தியிலென்றாலென்ன உண்மை நட்பு ஒரே தகைமை உடையது தானே!

அந்த நிகழ்ச்சியின் பின் ஒரு கிழமை கடந்துவிட்டது. அடுத்த செவ்வாய்க்கிழமை வந்தது. ஆனால் அந்தக் கிழவி மட்டும் வரவில்லை. அவளுடைய வரவுக்காக அங்கே ஏங்கிக் கொண்டிருந்தது இன் னோர் ஜென்மம். அதுவும் ஒருகால் வழங்காத பிச்சைக்கார ஜென்மம் தான். அந்த ஒரு கிழமையும் அந்த நொண்டிக் கிழவி சுற்று வட்டாரங்களில் தன் உயிர்த் தோழிக்காகத் தேடாத இடமேயில்லை. தங்கள் அன்றாட தொழில் ஸ்தானங்க ளாகிய ஆலய முன்றல்கள், ஹோட்டல் வாசல்கள், பஸ்நிலையங்கள், நடைபாதை எங்கும் தேடிவிட்டாள். ஆனால் இளம் கிழவி அகப்படவேயில்லை.

ஒரு மாதத்தின் பின் ஒருநாள் வெள்ளவத்தை ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயம் விழாக் கோலம் பூண்டிருந்தது. ஆலய வாசலில் வர்ணநிற மின்சார 'பல்'ப்புகளால் ஆங்கிலத்தில் அழகாக 'ஆடிவேல்' என்று பொறிக்கப்பட்டிருந்தது. உள்ளே 'காணிவேல்' நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

ஆலயத்தின் உள்ளும் புறமும் சன சமுத்திரம். அந்த மக்கள் கூட்டம் நிறைந்த ஆலயவாசலில் நொண்டிக் கிழவி எதையோ தேடிக்கொண்டிருக் கிறாள். தேடியதும் கிடைத்துவிட்டது. 'கொற' இழுவையாக இழுத்துக் கொண்டு சன அலைகளின் தாக்கம் குறைந்த ஒரு இடத்திற்குச் சென்று அமருகிறாள்.

அவள் தேடிப்பிடித்து வந்த உருவமும் அவள் பக்கத்திலே அமருகிறது.

'தங்கச்சி, நீ என்னோடு பழகிய இந்த ஆறு வருடத்தில் இப்பிடி ஒரு மனத்தாங்கலை எனக்குத் தரவில்லை. இதுக்கெல்லாம் காரணம் என்ன? உம்.... சொல்லு.

'அன்றைக்கு நீ பாண் வாங்காமல் புறப் பட்டதும், அந்தோனியார் கோவில் பக்கமே தலைகாட்டாமல் விட்டதும் ஏன்?'

'...........'

'நீ சொல்லாவிட்டால் இந்த இடத்தைவிட்டு நகரவேமாட்டேன்' என்று ஒற்றைக்காலில் நின்றாள் நொண்டிக் கிழவி.

'அக்கா என்னுடைய கதை ஒரு வெட்கம் கெட்ட கதை. இதுவரை தெரிஞ்சவங்களைத் தவிர புதிதாக எவரும் தெரிந்து கொள்ளாமலே இந்தச் சீவனை விட்டுவிடுவமெண்டுதானிருந்தேன். என்ரை சொந்த ஊர்ச் சனம் அத்தனை பேருக்கும் தெரிந்த கதையே. இந்த உலகத்திலை எனக்காக வருத்தப்படும் ஒரேயொரு சீவனுக்குச் சொல்லி விடுவதால் குடிமுழுகிவிடாது. ஆனால் இதை உன் நெஞ்சில மட்டும் வைத்திரு. மற்றப் பிச்சைக்காரப் பயல்களுக்கும் தெரியவந்தால் இந்த நகரிலும் பறையடித்து என்ரை உயிரையே வாங்கி விடுவாங்க என்று கூறிய வண்ணம் அக்கம் பக்கம் பார்த்து விட்டுத் தன்னுடைய வெட்கம் கெட்ட கதையைச் சொல்லத் தொடங்கும் போது இளம் கிழவியின் கண்கள் பனித்தன.



நான் பிறந்தது யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு சின்னக் கிராமத்தில். என்னைப் பெற்ற பாவிகளுக்கு நான் ஒரேயொருபிள்ளை. சாதாரண கமக்காரராயிருந்த அப்பாவுக்கு நான் சின்னப்பிள்ளையாக இருந்த போது ஒருமுறை குதிரைப்பந்தயத்தில் 25,000 ரூபா கிடைத்ததாம். அதை வட்டிக்குக் கொடுத்து மேலும் பணத்தைக் குவித்தாரேயொழிய, என்னை மேல் படிப்பு படிக்க அவருடைய வைதீகம் இடம் கொடுக்கவில்லை. எட்டாம் வகுப்பு சோதனை எடுத்தவுடன் , நானும் பெரியவளாகிவிட்டேன். அதோடு என்னுடைய படிப்பும் நின்றுவிட்டது. மூன்றாம் வருடம் அப்பா தன் வசமிருந்த பணத்தில் 50,000 ரூபாவை கொடுத்து ஒரு டாக்டரை 'விலைக்கு' வாங்கிக் கொண்டார். அப்பிடியென்றால் ஒரு டாக்டரே எனது கணவர். அப்போது அப்பா கொடுத்த பணம், எனக்கில்லாது மேற்படிப்புக்கும் மிதமிஞ்சிய அழகிற்கும் ஈடுசெய்தது. டாக்டர் தாமோதரம் என்னைக் கைப்பிடித்தவுடன் அவருடன் பட்டினத்தில் குடியேறிவிட்டேன்.

விசாலமான காணியில் நடுநாயகமாக விளங்கி அழகிய பங்களா, டிரைவருடன் கூடிய பெரிய கார். இரண்டு வேலைக்காரர். இத்தனை சௌகரியங்களையும் தவிரத் தங்க விக்கிரகங்கள் போல் ஆண் குழந்தைச் செல்வங்கள் இரண்டு வேறு. சுருக்கமாகச் சொன்னால் 'குறை' என்பதன் கருத்தே எனக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை

டாக்டர் தாமோதரம் என்னைக் கைபிடித்துச் சில வருடங்கள் மட்டுமே தன் தொழிலிலும் பார்க்க எனக்கு முக்கியத்துவம் கொடுத்து என்னை இன்பப் பூங்காவில் ஏற்றிவைத்தார். காலம் செல்லச் செல்ல டாக்டர் நோயாளிகளைக் கவனிக்கும் அளவுக்குக் கூட என்னைக் கவனிக்கத் தவறிவிட்டார். பெரும்பாலும் இரவு முறை வேலையையே அவர் விரும்பினார். எப்பாவது பகல் வேலை கிடைத்து இரவில் வீட்டிலே தங்கநேரிட்டாலும் ஏதோ 'சீரியஸ் கேஸ்' என்று சொல்லி 'ரெலிபோனில்' கூப்பிட்டு விடுவார்கள்.

அக்கா நான் உங்களுக்கு எதையும் மறைக்க விரும்பவில்லை. சந்தர்ப்பம் சூழ்நிலையும் என்னைப் படுகுழியில் தள்ளிவிட்டன. அதற்கு டாக்டருடைய புறக்கணிப்பும் பக்க பலமாகவிருந்தது. தொழிலையே கருத்தில் கொண்ட டாக்டரால் ஏற்படுத்தப்பட்ட வெற்றிடத்தை நிரப்ப அவரின் டிரைவர் இரத்தினம் முன் வந்தான். அவனுடைய ஒத்தாசையைப் புறக்கணிக்கச் சக்தியற்றவளாகி விட்டேன் அப்போ.

டாக்டரின் பேச்சுக்கள் 'குயினைன்' மருந்தாகக் கசந்த அதேநேரத்தில் இரத்தினத்தின் பேச்சுக்கள் எனது காதுகளில் தேனாக இனித்தன. அரச போகம் நிறைந்த வாழ்க்கையின் அருமைச் செல்வங்கள் இரண்டையும் உதறித் தள்ளிவிட்டு ஒரு ஊதாரியுடன் ஓடுவதற்கு ஏதுவாக இருந்தது என்னவென்று என்னால் இன்றுவரையும் அறியவே முடியாமல் இருக்கிறது....

''பிறகு இரத்தினமும் உன்னைக் கைவிட்டு விட்டானா?'' நொண்டிக் கிழவியின் குறுக்கு விசாரணை.

'' அவன் என்னை மட்டும் கைவிடவில்லை. இந்த உலகத்தையே கைவிட்டுட்டான். ஒருத்தனைக் கொலை செய்து போட்டுத் தானும் தூக்கு மேடைக்குப் போய் பத்து வருடமாய் இருக்கும்''

''உன்னுடைய பிள்ளைகளும் தகப்பனும் என்ன சேதி?''

''டாக்டர் போன வருடம் கண்மூடி விட்டாராம். மூத்தவனும் ஒரு டாக்டராம். கொழும்பில்தான் வேலையாம். இளையவன் அப்புக்காத்துக்குப் படித்துக் கொண்டிருக்கிறானென்று கேள்வி''

''ஏன் தங்கச்சி உன்னுடைய பிள்ளைகளிடம் போறதுதானே.''

'அக்கா, அதிலும் பார்க்க என்னைச் சாகச் சொன்னீங்களெண்டால் மிகவும் சந்தோஷமாய் செத்துவிடுவேன்'

'அதிருக்க, அண்டைக்குப் பாண் வாங்காமல் மறைச்சதைப் பற்றி இன்னும் சொல்லவில்லையே'

'அவன்தான் என்னுடைய மூத்த மகன் அக்கா! பெற்ற மகனிடமிருந்து ' உரிமையுடன் வாங்கி உண்ண வேண்டிய நான், பிச்சை என்று கையேந்தி உண்ணுவதற்காகக் காத்திருந்தேன். இந்தக் கோலத்தில் என்னை அவனால் எப்படிக் குறிப்பறிந்து கொள்ளமுடியும்? பணத்திலும் பதவியிலும் ஊறித்திளைத்துப் பூரித்திருக்கும் அவனையும் என்னால் இலேசில் குறிப்பறிய முடியாமல் தான் இருந்தது. ஆனால் அவனுடைய வலது கன்னத்திலிருந்த ஒரு மச்சம் என்னுடைய மகன்... அவளால் தொடர முடியவில்லை. தேகம் பதறியது. நா தழதழத்தது. கண்கள் அருவியாக மாறின. நொண்டிக்கிழவியின் மடியில் சாய்ந்து விடுகிறாள்.

மடியில் சாய்ந்தவள் சிறிது நேரத்தில் எழுந்திருக்கிறாள்.

'தங்கச்சி, திரும்பவும் கோவிலடிப் பக்கம் போக உனது உடம்புக்கு ஒத்து வராது. வா எங்கையாவது போய் படுத்துக் கொள்ளுவம்' என்று கூறி நொண்டிக் கிழவி இளம் கிழவியையும் அழைத்துக் கொண்டு ஒரு ஓரமாக ஆலயத்தின் எதிர் திசையில் ஊர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சிறிது தூரம் சென்றதும் வீதியின் மறு கரையில் ஓரிடத்தைச் சுட்டிக் காட்டிய நொண்டிக் கிழவி,

'தங்கச்சி அந்தக் கடை விறாந்தை சும்மா கிடக்குப் போல இருக்கு. வா அந்தப் பக்கத்துக்குப் போய் அதில தங்குவம்' என்றாள்.

வீதியைக் கடப்பதற்குப் பிரத்தியேகமாக மஞ்சள் கோட்டினால் குறிக்கப்பட்ட இடமொன்றால், காலி வீதியின் ஒரு கோடியிலிருந்து மறு கோடியை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள் இருவரும்.

வீதியின் பாதி வழியைத் தாண்டியிருப்பார்கள்; அப்போது அசுர வேகத்தில் பறந்து வந்த மோட்டார் வண்டியொன்று, திடீர் 'பிரேக்' போட்ட காரணத்தால் பயங்கர ஒலியுடன் மஞ்சள் கோட்டின் ஓரத்திலிருந்து ஒரேயொரு அங்குல இடைவெளி இருக்கக் கூடியதாக நின்றது.

தனது கடந்தகால வாழ்க்கையின் அடிச்சுவடுகளின் மேல் நடைபயின்று ஏற்கனவே இழந்து போயிருந்த இளம் கிழவியின் இதயத்தை இப்பேரதிர்ச்சி திரும்பவும் பிரமிக்கச் செய்தது.

'எந்தப் பாழப் போனவரின் கார் அக்கா இது' என்று முணுமுணுத்துக் கொண்டே திரும்பவும் நடுவீதியில் சாய்ந்து விடுகிறாள்.

(18 பக்கம் பார்க்க......)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 02 . 10 . 1934

உதிர்வு 24 . 10 . 2010

### அமரர் சோமசுந்தரம் சுப்பிரமணியம்

அன்பின் சிகரமாய் பண்பின் பிறப்பிடமாய்
அன்பினால் எல்லோரையும் அரவணைத்தீர்!
எம்மைவிட்டுப் பிரிந்து நீங்கள் இறைவனடி சேர்ந்தாலும்
என்றென்றும் உங்கள் நினைவால் வாழ்ந்திருப்போம்
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கடந்த 24.10.2010 இல் அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்கள் மற்றும் நேரிலும் தொலைபேசி, தந்திமூலம் ஆறுதல் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் பலவழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

நாளை (22.11.2010) திங்கட்கிழமை நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஏ.ஜி.ஏ.லேன்,
நெடியகாடு, வல்வெட்டித்துறை. (கி/573050)

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி செல்வபாக்கியம் செல்வரத்தினம்
(இளைப்பாறிய தலைமைத் தாதி, யாழ். போதனா வைத்தியசாலை)

யாழ்ப்பாணம், அச்சுவேலி தோப்பைப் பிறப்பிடமாகவும், நிரந்தர வசிப்பிடமாகவும், லண்டனை தற்காலிக இருப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வபாக்கியம் செல்வரத்தினம் 11.11.2010 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் உசன், மிருசுவிலைச் சேர்ந்த கந்தையா செல்வரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், பகீரன், ஜீவகன், பார்த்திபன் ஆகியோரின் பாசமிகு தாயும் கதிரேசு, முருகேசுவின் சகோதரியும், சோபனா, காலஞ் சென்ற பிறேமலதா, சிந்துஜா ஆகியோரின் மாமியாரும், சௌமியா, நந்திகா, லதிக்கா, ஹரிஷனன், வசீகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ் சென்ற குணரத்தினம்; நவரத்தினம், அரியரத்தினம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 - 11.00 " Hendon Crematorium, Holders Hill Road, London, NW7 1NB" இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு: +44 208 9048638/ +44 774 8106567. (106189)

## 23ஆம் ஆண்டு நினைவஞ்சலி



எங்கள் குடும்பத்தின்
தீபமாய்த் திகழ்ந்து
அன்போடும் பண்போடும்
பாசத்தோடும் எம்மைப் பேணிப்
பாதுகாத்து நல்லறிவூட்டி
நல்வழிப்படுத்தி இன்று
எம்மையெல்லாம்
விட்டுப்பிரிந்து இருபத்து மூன்று
ஆண்டுகள் சென்றாலும்
உங்களை நாம் மறவோம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
**குடும்பத்தினர்.**
483, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தோற்றம் 18.11.1936

மறைவு 04.12.1987

### அமரர்
### இராசதுரை பஞ்சாட்சரம்

திதி: 21.11.2010

(ஸ்தாபகர், அருள்முருகன் நகைமாடம்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

(கி/573041)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதிரையும் நரியும்

காட்டில் நரி ஒன்று வாழ்ந்து வந்தது. அது எப்போதும் மற்றைய மிருகங்களை பயமுறுத்தி காரியத்தைப் பெற்றுக்கொள்ளும். ஒருநாள் என்ன செய்யலாம் என்று நினைத்தது. அப்பொழுது தூரத்தில் அமைதியாக புல்மேய்ந்து கொண்ட குதிரையை கண்டது. உடனே குதிரையின் முதுகில் எறி "நான் இந்த காட்டின் ராஜா நீ இன்று என்னை காடு முழுவதும் கூட்டிச் செல்ல வேண்டும்" என்றது.

இதனை கேட்ட குதிரை "நண்பா! அவரவர் இருக்கும் இடத்தில் தான் இருக்க வேண்டும். அப்போது தான் உரிய மதிப்புக் கிடைக்கும். நீ இப்போது கீழே இறங்கு எனக்கு வேறு வேலை இருக்கிறது" என்றது.

குதிரையின் புத்திமதியைக் கேட்ட நரிக்கு கோபம் வந்தது. "என்னை இப்போது கூட்டிச் செல்லாவிட்டால் உன் முதுகைக் கடித்துக் குதறிவிடுவேன்" என்றது. நரியை ஏற்றிக்கொண்டு குதிரை புறப்பட்டது. வழியில் நின்ற மிருகங்கள் எல்லாம் ஒதுங்கி வழிவிட்டன. நரிக்கு ஒரே சந்தோசம் பெருமையாகச் சிரித்தது.

நரியின் குணம் அறிந்த கரடி இதனை பார்த்து ஏதாவது செய்ய வேண்டுமென யோசித்தது. உடனே நரியின் மீது தாவிக் குதித்து அதனைத் தள்ளி விழுத்தியது. கீழே விழுந்த நரி வேகமாக ஓடிச்சென்று மறைந்தது. "ஏ... குதிரையே எதற்கு அந்தப் பிராணியை சுமந்து செல்கிறாய்". என்று கேட்டது இது உனக்கு வெட்கமாக இல்லையா? என்றது. ஒருவன் தவறு செய்தால் அதனை சுட்டிக்காட்ட வேண்டும். அதற்குப் பதிலாக நீ அவன் போக்கில் நடந்தால் நீயும் தவறு செய்கிறாய் என்றது கரடி. குதிரை தான் செய்த தவறை நினைத்து வருந்தியது. அன்றிலிருந்து அது நரிகளை மதிக்காமல் விட்டது.

நிரஞ்சனா தரம் -8A
யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.

# பொது அறிவு விடயம்

1. இந்து சமுத்திரத்தின் முத்து - இலங்கை
2. இருண்ட கண்டம் - ஆபிரிக்கா
3. இடி மின்னல் நாடு - பூட்டான்
4. இந்தியாவின் நறுமணத்தோட்டம் - கேரளம்
5. அரண்மனை நகரம்-கல்கத்தா
6. அதிகாலை அமைதி நாடு - கொரியா
7. அழியாத நகரம் - உரோமாபுரி
8. ஆயிரம் வாவி நாடு - பின்லாந்து
9. உலகின் கூரை - திபெத்
10. உலகின் சக்கரைக் கிண்ணம் - கியூபா

செ.ஜெனார்தனன், தரம் 5
யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்.

# அப்பா

பிதா என்றும் தந்தை என்றும் தரணியிலே உருவொடுத்து எம்மை உருவாக்கிய என் தெய்வம் அப்பா. நான் பாடசாலையில் படிக்க என்னை அரவணைத்து எனது தேவை எல்லாவற்றையும் அறிந்த என் தந்தை எல்லா இடங்களுக்கும் கூட்டிச் சென்று என்னை வழிநடத்துவார். எனக்கு ஊன்று கோலாய் நிற்பவர் என் தந்தை.

விஜியேந்திரன் ஜெபரோசினி, தரம் 2
யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

# இளமைப் பெயர்கள்


* கீரி - பிள்ளை, குட்டி
* குதிரை - குட்டி
* தவளை - குஞ்சு, பேத்தை
* பனை - வடலி
* குரங்கு - பறள், குட்டி
* அணில் - குஞ்சு, பிள்ளை
* ஆடு - குட்டி
* பாம்பு - குட்டி
* மீன் - குஞ்சு
* கோழி - குஞ்சு
* கிளி - பிள்ளை,குஞ்சு
* கமுகு - பிள்ளை
* வாழை - குட்டி, கன்று
* புகையிலை - நாற்று
* தென்னை - பிள்ளை, கன்று
* புலி - குட்டி
* பூனை - குட்டி, பறள்
* யானை -குட்டி, கன்று, போதகம்
* சிங்கம் - குருளை, குட்டி
* நாய் - குட்டி, குருளை
* மான் - குட்டி, கன்று

கபிலன் தரம் -7
யா /உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்.











ரிதிலா தரம் -6 B,
மானிப்பாய் மகளிர் கல்லூரி.



ம.தர்சியா தரம் -6 B,
யா.மா.ம.க.



பா.பவதாரணி தரம் -6 A,
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.



தே.ஆதித்தியன் தரம் -2 A,
யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி.



ச.தர்சன் தரம் -4,
அமெரிக்கன் பாடசாலை.

## உங்களுக்கும் பரிசில்கள்... விடை தெரியுமா?83

1. உருளைக்கிழங்கினை உணவுப் பொருளாக அறிமுகச் செய்தவர்கள் யார்?
2. முஸ்லிம்களின் ஹஜ் பெருநாள் அண்மையில் எப்போது கொண்டாடப்பட்டது?
3. 13 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியில் இவ்வருடம் சாதனை படைத்த பாடசாலை எது?
4. தேசிய மட்டத் தமிழ்த்தினப் போட்டியில் முதல் இடம்பெற்ற பாடசாலை எது?
5. நீரிழிவு தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

### உங்களுக்குத் தெரியுமா? 81 இற்கான விடைகள்

1. ஸ்மைல்
2. பிபா பல்லான்டி சூர்
3. 47 ஆவது
4. 8 நாடுகள்
5. காமநெகும

### விடை தெரியுமா?

தெரிந்தால் 28.11.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### பரிசுபெறுவோர் விவரம்

01. வி.சோபிதன் தரம் - 8 B
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
02. வி.லபோறன்ஸ் தரம் - 9 C
யா/மல்லாகம் மகா வித்தியாலயம்
03. சு. நிலக்ஷிகா தரம் - 2
ஏழாலை மேற்கு,
சைவ சன்மார்க்க வித்தியாசாலை
04. க.கபிலன் தரம் - 7
யா/உடுவில் மான்ஸ் மகா
வித்தியாலயம்.
05. செ.இலக்கியா தரம் - 8
மீசாலை வீரசிங்கம் மகா
வித்தியாலயம்.

## நீங்களும் எழுதலாம்

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-..........................................
தரம் :-..........................................
பாடசாலை :-..........................................
..........................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லகாலம் பிறக்குமா?

மட்டக்களப்பு, மன்னாருக்கு அடுத்த நெல் உற்பத்திப் பிரதேசம் தென்மாரட்சியில் மறவன்புலோ தனங்களப்பு என முன்பு சொல்வார்கள்.

பத்து வருடங்களாக உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த இப்பகுதியில் 2004 ஆம் ஆண்டில் 1,500 ஏக்கர் வயல் நிலமும்,யுத்தம் முடிந்த பின் கடந்த காலபோகத்தின் போது மேலும் 1,500 ஏக்கர் வரையும் நெற்செய்கைக்கு அனுமதிக்கப்பட்டது.

கடந்த வருடத்துக்கு முந்திய வருடங்களில் அதிகூடிய விளைச்சலைப் பெற்று,கூடிய விலைக்கு நெல்லை விற்ற விவசாயிகள் கடந்த காலபோகத்தில் உற்பத்தியான நெல்லை விலை வீழ்ச்சியடைந்ததால்,பலரும் விற்காமலேயே வைத்துள்ளார்கள்.

கோதுமை மாவிற்குக் கட்டுப்பாடும் விலை உயர்ச்சியும் ஏற்பட்டதால் நெல் விலை உயரும் என்ற எதிர்பார்ப்பு அவர்களுக்கு.

இவ்வாண்டு காலபோக செய்கை ஆரம்பித்து வயல்களில் நெற்பயர்கள் வளர்ந்துள்ளன. பல இடங்களில் கிளி,புறா,சிறகை ஆகிய பறவைகளால் நெல் காவு கொள்ளப்பட்டமையாலும் மழை உரிய காலம் தவறிப்பெய்தமையாலும் பலர் இரண்டாவது தடவையாகவும் விதைப்புச் செய்துள்ளனர்.

மழையை எதிர்பார்த்துள்ள விவசாயிகள் தற்போது களைநாசினியை விசிறி வருகிறார்கள்.இவ்வாண்டும் நெல் விலை வீழ்ச்சியுற்றால்,அதிக கூடிய கூலி கொடுத்து செய்கை பண்ணிய விவசாயம் பெரு நஷ்டத்திலே முடியும் என்ற ஏக்கம் பலருக்கும் உள்ளது.

இப்பகுதியில் கட்டாக்காலி மாடுகள் கமக்கார அமைப்பினால் நூற்றுக் கணக்கில் பிடிக்கப்பட்டன. எனவே அவற்றை விற்ற பணம் கமக்கார அமைப் பிடம் உள்ளதாகவும் அதனைக் கொண்டு இவ்வாண்டு காலபோக நெற் செய்கையைக் கட்டாக்காலிகளிடமிருந்து பாதுகாக்கலாம் எனவும் சொல்லப்படுகிறது.

வன்னிப் பிரதேசத்தில் இருந்துவரும் யானை,எருமை மற்றும் மாடுகளின் தொல்லையால் விவசாயம் பாதிக்கப்படும் நிலை உள்ளது. அதனால் வேலி அடைத்துப் பாதுகாக்க முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும் ஓர் செய்தி.

தற்போது இங்கு கைதடி,மீசாலை கமநல சேவை நிலையங்களிலும் மானிய உரம் விநியோகிக்கப்பட்டு வருவதால் மக்கள் கூட்டம் அதிகம்.

கைதடி கமநல சேவை நிலையத்திலும் மானிய உரம் பெறச் செல்வோரிடம் வயல்களின் பாதுகாப்புக்கென ஒரு தொகைப்பணம் கட்டாயமாகச் செலுத்தும்படி கமக்கார அமைப்பினால் வற்புறுத்தப்படுவதாகவும், பலர் அதனை ஆட்சேபித்து அரச அதிகாரிகளிடம் முறையிட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

6 கிராம சேவை அலுவலர்களைக் கொண்ட சுமார் ஆயிரத்து ஐந்நூறு குடும்பங்கள் வாழும் தென்மராட்சி தெற்குப் பகுதிகளான நாவற்குழி, கோவிலாக்கண்டி, கைதடி, கைதடி-நாவற்குழி ,மறவன்புலோ, தனங்களப்பு பகுதி மக்கள் சாவகச்சேரி செல்லும் கிட்டிய பாதையான யாழ் -கேரதீவு வீதி, சாவகச்சேரி- தனங்களப்புவீதி, நுணாவில்-கொல்கிராய் வீதிகள் மக்கள் போக்குவரத்து செய்யமுடியாத அளவு சேதமுற்று கிடங்குகளும், சேறும், தண்ணீருமாக உள்ளன. மழைகாலம் தொடங்கி விட்டதால் இப்பகுதி மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

2004 ஆம் அளவில் மறவன்புலோ மேற்குவரை மக்கள் மீளக்குடியேறியதைத் தொடர்ந்து கலையாபரண கோட்டை வீதி ஒரு கிலோ மீற்றரும், மணற்காடு வீதி ஒரு கிலோ மீற்றரும் 29 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டது. எனினும் சரியான முறையில் வீதிக்குத் தார் இடப்படாமையால் அவ் வீதிகளும் தற்போது சேதமடைந்துள்ளன.

வீதிகளின் மோசமான நிலையில் இம்மாத முடிவில் கேரதீவு- சங்குப்பிட்டி பாலம் திறந்து வைக்கப்படவுள்ள நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்தும் சாவகச் சேரியில் இருந்தும் சங்குப்பிட்டி செல்வது பெரும் கஷ்டமாகத்தான் அமையும். அதற்கிடையில் இவ்வீதிகள் திருத்தப்படும் சாத்தியங்கள் இல்லை.

அரச அதிகாரிகள் மக்கள் நலன்களில் அக்கறையுடன் செயற்படுவதால் ஏதோ நல்ல காலம் பிறக்கும் என நம்பலாம்.

-எம்.எல்.விநோதன் -

# பிறரின் உணர்வை மதிப்பவர் ஏழைகளே...!

பணக்காரர்களை விட ஏழைகளே பிறரின் உணர்ச்சிகளை அறிந்து கனிவுடன் அவர்களை பெருந்தன்மையாக நடத்துகின்றனர் என்று புதிய ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்கள், பணத்துக்கும் மனித மனத்தின் மகிழ்ச்சிக்கும் இடையிலான உறவு குறித்து ஏற்கனவே ஓர் ஆய்வு செய்தனர். அதில், பணம் அதிகம் வைத்துள்ளவர்களை விட சாதாரண மக்களே சந்தோஷமாக இருக்கின்றனர் என்பது தெரியவந்தது.

இப்போது அதே பல்கலையின் ஆய்வாளர்கள், இருதரப்பனரின் குணங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டதில் சுவாரசியமான தகவல்கள் கிடைத்துள்ளன.

முதலில், சமூகப் பொருளாதாரத்தில் கல்வியின் நிலை குறித்த ஆய்வில், ஒரு பல்கலையின் அடிமட்ட ஊழியரில் இருந்து உயர் அதிகாரிகள்வரை 200 பேரைத் தேர்ந்தெடுத்தனர். அவர்களுடனான கலந்துரையாடலின் போது, ஒவ்வொருவரின் முகபாவனைகளும் புகைப்படமாக எடுக்கப்பட்டன. அதில், சாதாரணமான உயர்நிலைக் கல்வி மட்டும் முடித்தவர்கள், கல்லூரிக் கல்வி முடித்தவர்களை விட, ஏழு சதவீதம் அதிக மதிப்பெண் பெற்றிருந்தனர்.

இதுகுறித்து ஆய்வு நடத்திய மிக்கேல் க்ரவுஸ் கூறியதாவது: சக மனிதரை மதிக்கும் பழக்கம், சமூகத்தில் நிலவும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள எப்படி உதவுகிறது என்பது இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. சமூகத்தில் நிலவும் வாய்ப்புகளை மதிக்கவும், இந்த ஆய்வு ஒரு வாய்ப்பை அளிக்கிறது. சமூகப் பொருளாதாரத்தில் உயர்மட்டத்தில் இருப்பவர்களை விட சாதாரணமானவர்கள், பிற மக்களின் தேவைகளை உணர்ந்து கொள்வதில் அதிக கவனமாக உள்ளனர். பிறரை நன்கு மதிக்கின்றனர்: இப்படிப் பறரை மதிக்கும் குணத்தால் தான் அந்த சாதாரணமானவர்கள், பிறரின் உணர்ச்சிகளையும் நன்கு அறிந்து கொள்கின்றனர். இந்தக் குணம், உலகின் அனைத்து இனங்களிலும், ஆண் பெண்ணிலும் இருக்கிறது.



# சேதி கேட்டாயோ...! எங்கப்பன் குதிருக்க இல்ல...!

"அடி ஆத்தே...!
எங்க "அப்பன் குடியிருப்பில"
அவுக "அப்பன் குடும்பங்க"
அத்து மீறினது அவுகளுக்குத்
தெரியாதாம்...!

கோச்சியடியிலே
குந்தினது மொதல்...
அப்பன் குடியிருப்பில
பூந்தது வரை...
சங்கதி தானுங்கோ
ஆச்சி சொன்னது இது
கஸ்மாலம்
இதுகளும் அவுகளுக்கு
தெரியாதாம்...

"நாட்டில...
ஒசத்தி தலவரு
இவுக இருக்காக
முழிச்சிக்கிட்டு
எமைக் காக்க..."
என எண்ணிற
எம்மவைக்கு இனி
தூக்கம் தான்
ஏதுங்கோ...?

ஒருபிடி சோத்துக்க
ஒரு பூசணிய அல்ல
ஒரு பூசணித் தோட்டத்தையே
பொதைக்கிறானுங்கோ..."

ஏ.எம்.கமால்.

# சிறு நெருடல்



ஒரு நாஸ்தீகாவதி - பஸ்சில்
பயணிக்கிறான்...
மதகுருமார்களுக்கான இருக்கையில்
அமர்ந்து கொண்டு.....

***

"சிறைச்சாலைகளை மூடுங்கள்
பாடசாலைகளை திறவுங்கள்"... என்றால்
சிறைச்சாலைகளுக்குள்ளும் .......
பாடசாலை மாணவர்கள்.

***



ஆலடி பிள்ளையாருக்கு - அபிஷேகம்
நடக்கிறது...
மாளிகை வேண்டுமென்று.

***

குயில்களாவது - பத்திரமாய்
காகக் கூடுகளுக்குள் முட்டை இடுகின்றன.
குழந்தைகள் குப்பைத் தொட்டிக்குள்.....

***

நகரத்துப் பாட்டிகளோ - உங்கள்
பழைய சேலைகளைத் தாருங்கள்.
கிராமத்திலே குமரிகள் இருக்கிறார்கள்..

***

இராவணர்களே... சீதைகளை வசப்படுத்த
பத்து தலைகளுக்குமா..?.. இராமனின்
முகமூடியை அணிந்து கொள்வீர்கள்.

நெடுந்தீவு - முகிலன்

# குலமகள் தேவியரே!

கரையில்லாக் கல்விதனை,
கற்று நாம் தேறிடவும்,
நிலையில்லாச் செல்வம் தனை
நித்தமும் நிலைபெறச் செய்திடவும்
குறையில்லா வீரம் தனை - எப்போதும்
நிறைவாக எமக்கருள வேண்டும்,
குலமகள் தேவியரே இரு கரம்
கூப்பி கும்பிட்டு வேண்டுகிறோம்,
பறந்தோடி வந்து பாரில் - எம்மை
உயர்வடையச் செய்திடுங்கள் தேவியரே

து.திலக் (கிரி)
பொலன்னறுவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவரசர்கள்



இலங்கைக்கு வாரிசு அரசியல் ஒன்றும் புதிதல்ல. பண்டார நாயக்கவின் மனைவி சிறிமாவோ, மகள் சந்திரிகா ஆகியோர் நாட்டின் தலைமைப் பதவிகளில் இருந்திருக்கிறார்கள். கட்சிக்களுக் குள்ளும் அரசியல் வாரிசுகள் ஏராளமானோர் இருக்கிறார்கள். ஆனால், இப்போது இருப்பதைப் போன்று எப்போதும் நடந்ததில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது மகன்களையும் சகோதரர்களையும் கொண்டே ஆட்சியை நகர்த்துகிறார். தனக்கு அடுத்து ஆட்சிப் பொறுப்புக்கு வரவேண்டிய முடிக்குரிய இளவரசர் போன்று அவர் தனது மூத்த மகன் நாமல் ராஜபக்ஷவை அரசியலில் முக்கியத்துவப் படுத்துகிறார்.

*தேவை: உறுதியான எதிர்க்கட்சி ஒன்று அமையாத வரையில் ராஜபக்ஷவை அசைக்க முடியாது. பதவியேற்பு நிகழ்வைப் புறக்கணித்த ரணிலின் செயலை இங்கு யாரும் கவனத்தில் கொள்வவே இல்லை.*

# மீண்டும் மன்னராட்சி

பிரித்தானியாவில் இருந்து வெளிவரும் 'The Economist' சஞ்சிகையில் மஹிந்தவின் இரண்டாவது பதவியேற்பு குறித்து வெளிவந்த செய்தி விமர்சனம் இது. மொழியாக்கம் செய்தவர் தி.வண்ணமதி.

**பாதுகாப்பு, நிதி உட்பட முக்கிய அமைச்சுக்கள் அனைத்தும் ஜனாதிபதியின் குடும்ப உறுப்பினர்களது கட்டுப்பாட்டில். மூத்த அமைச்சர்கள்கூட நாமலின் கடைக்கண் பார்வைக்காகக் காத்திருக்க வேண்டியிருக்கிறது.**



**மன்னாதி மன்னன்:** இரண்டாவது பதவிக் காலத்துக்கான பொறுப்பை நேற்று முன்தினம் கொழும்பு, காலிமுகத்திடலில் வைத்து ஏற்றுக்கொண்டார் மஹிந்த ராஜபக்ஷ. பூட்டான் மன்னரும் நிகழ்வில் கலந்து கொண்டார்.

அகன்று விரிந்த மீசையைக் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நவம்பர் 18ஆம் திகதியுடன் 65 வயதினைக் கடந்தார்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து, 30 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்த போரினை வெற்றிகொண்டவர் என்ற பெயரை பிரசாரம் மூலம் தனதாக்கிய ராஜபக்ஷ, மிடுக்கான தோற்றம் கொண்டவர்.

கடந்த ஜனவரியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ இரண்டாவது முறையாகவும் வெற்றி பெற்றிருந்தார். தொடர்ந்து இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மகிந்தவினது கட்சி பெருவெற்றி பெற்றிருந்தது.

இதனைத் தொடர்ந்து அரசியலமைப்புத் திருத்தத்தினைக் கொண்டு வந்தார் மஹிந்த. அதன் ஊடாக ஒருவர் இரண்டு தடவைகள்தான் அதிபராக ஆட்சியில் இருக்கலாம் என்ற வரையறையினை இல்லாது செய்தார். தனது அதிகாரத்தினையும் பன்மடங்காக்கினார்.

இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு கிட்டத்தட்ட ஓர் ஆண்டு கடந்துவிட்ட நிலையில் தனது பதவியைப் பொறுப்பேற்கிறார் மஹிந்த. நிகழ்ச்சியின் பாதுகாப்புக்காக ஆட்லறி எறிகணை செலுத்திகளும் கொண்டுவரப்பட்டிருந்தன.

சிங்களவர்களின் பாரம்பரிய இசைக் கருவியான மேளத்தினை இசைப்பதற்காக 8,000 பேர் மேளத்துடன் வரவழைக்கப்பட்டிருந்தார்கள்.

பதவியேற்பு வைபவத்தினையிட்டு வந்துகுவியும் பரிசுகளால் மஹிந்த திளைத்துப் போயிருக்கிறாராம். எதிர்க்கட்சியினர் கூட தாம்பாளம் நிறைய பரிசுகளை அள்ளி வழங்கியிருக்கிறார்களாம்.

தங்களது கட்சியுடன் இணைந்து கொண்டால் அமைச்சுப் பொறுப்புக்கள் அதிகாரமற்ற அமைச்சுக்கள் வழங்கப்படும் என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இப்போதும் ஆசை காட்டப்பட்டிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவோ களைப்படைந்து சோர்வடைந்திருக்கிறார் போலத் தெரிகிறது. இன்றைய நிலையில் மஹிந்தவினது பிரதான எதிராளி இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகா மட்டுமே.

இந்த ஆண்டினது ஆரம்பத்தில் நடந்து முடிந்த அதிபர் தேர்தலின்போது போரை வென்றுகொடுத்த இராணுவத்தின் முன்னாள் தளபதி எதிர்கட்சிகளின் பொது வேட்பாளராகக் களமிறங்கியிருந்தார். இந்த மோதலால் ஆத்திரமடைந்த மஹிந்த தரப்பு, இராணுவத்தில் இருந்தபோது முறைகேடுகளில் ஈடுபட்டார் எனக் கூறி பொன்சேகாவைக் கைதுசெய்தது. சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் பொன்சேகா அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்கு தனது காலத்தை அங்கேயே கழிக்க நேரிடலாம்.

நாட்டினது ஊடகவியலாளர்கள் மீது தொடுக்கப்பட்ட மோசமான தாக்குதல்களைத் தொடர்ந்து, இலங்கைத்தீவு அடிப்படை ஜனநாயகப் பண்புகளுக்கு முரணான பாதையில் பயணித்துக்கொண்டிருக்கிறது. இலங்கை ஊடகங்கள் கூட இதற்கு எதிராக எதனையுமே செய்யமுடியாத கையறு நிலையில் மௌனம் காக்கின்றன.

பத்திரிகையின் முதலாவது பக்கத்தின் இடதுபக்க மேல் மூலையில் மஹிந்தவின் பிறந்தநாள் ஒளிப்படத்தைப் பிரசுரிக்க வேண்டும் என கொழும்

**தமிழர்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற பகுதிகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டினை முன்னர் கொண்டிருந்த அரசு தனது மனநிலையினை முற்றிலும் மாற்றிவிட்டது.**

பிலிருந்து வெளியாகும் பத்திரிகைகளிடம் இந்த வாரம் அரசு கோரியிருந்தது.

அரசின் இந்தக் கோரிக்கையினை ஏற்றுச் செயற்படவேண்டிய நிலைக்கு பத்திரிகை ஆசிரியர்கள் அனைவருமே தள்ளப்பட்டிருந்தனர். கொழும்பு நகர வீதியோரங்களில் முளைத்திருக்கும் அளவில் பெரிய விளம்பரப் பலகைகளில் மஹிந்த பெரும் [illegible] கிறார்.

கொழும்பிலிருந்து 400 கி.மீ. தொலைவிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு, எலும்பையே உலுக்குகின்ற மோசமான வீதிகள் வழியாகப் பயணித்துச் சென்றோமானால் - தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட - இந்த நகரத்திலுள்ள பெரும்பாலானவர்கள் ராஜபக்ஷவினை வெறுத்து ஒதுக்குகிறார்கள். இருந்தும் இந்த மக்கள் அவருக்குக் கீழ்ப் படிந்து நடக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது.

**மாரியும் பொழியும்**

**இலங்கையில் மன்னராட்சி யுகம் மீண்டும் ஆரம்பித்திருக்கிறது என அதிபர் மஹிந்தவினது மூத்த சகோதரன் பசில் ராஜபக்ஷ தர்மசங்கடம் எதுவுமின்றிக் கூறியிருக்கிறார். மன்னன் நல்லவன் என்பதால்தான் மாரியும் பொழிகிறதாம்.**

தங்களது இலக்கினை அடைவதற்காக தீவிரப் போக்கில் செயற்பட்ட புலிகள் அமைப்பு இல்லாது ஒழிக்கப்பட்டுவிட்ட நிலையில், சிறுபான்மைத் தமிழர்களுடன் சமரசத்துடன் வாழ வேண்டும் என்ற எந்த எண்ணமும் இல்லாது நாட்டினது பெரும்பான்மைச் சிங்களவர்கள் மிடுக்குடன் நடந்துகொள்கிறார்கள்.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற பகுதிகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டினை முன்னர் கொண்டிருந்த அரசு தற்போது தனது மனநிலையினை முற்றிலும் மாற்றிவிட்டது.

தமிழர் தாயகப் பிரதேசங்களில் இராணுவத்தினரின் துணையுடன் சிங்கள மக்களைக் குடியமர்த்தும் முனைப்புக்களில் அரசு முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது. இந்த அராஜகத்தை எதிர்த்து நிற்பதற்குத் திராணியற்றவர்களாக அல்லது அஞ்சுபவர்களாகவே தமிழர்கள் காணப்படுகிறார்கள்.

போரின் இறுதி நாள்களில் ஆயிரக்கணக்கான பொதுமக்களை இராணுவத்தினர் கொன்று குவித்தனர் என எழும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சுதந்திரமான விசாரணைகளை மேற்கொள்ளுவதற்குத் தேவையான அழுத்தத்தினை நாட்டினது தமிழர்களோ அன்றி ஐக்கிய நாடுகள் சபையினரோ பிரயோகிக்கும் நிலையும் இல்லை.

இவ்வாறாகப் பொதுமக்களும் புலிகளின் உறுப்பினர்களும் படுகொலை செய்யப்பட்டதை உறுதிப்படுத்தும் காணொலி ஆதாரங்களை அண்மையில் 'அல்ஜெசீரா' தொலைக்காட்சி ஒளிபரப்பியிருந்தது. வழமை போலவே இந்த ஆதாரங்கள் உண்மைக்குப் புறம்பானவை எனக் கூறி இலங்கை அரசு நிராகரித்துவிட்டது.

இலங்கையில் 'மன்னராட்சி யுகம்' மீண்டும் ஆரம்பித்திருக்கிறது என அதிபர் மஹிந்தவினது மூத்த சகோதரன் பசில் ராஜபக்ஷ தர்மசங்கடம் எதுவுமின்றிக் கூறியிருக்கிறார்.

வெளிப்படைத்தன்மை, பொறுப்புச் சொல்லும் தன்மை மற்றும் குறித்த ஒருவர் குறிப்பிட்ட காலத்திற்கே ஆட்சியிலிருக்கலாம் என்ற வரையறை போன்ற மேலைத்தேயக் கருத்துக்கள் "ஆசியப் பண்பாடுகளுக்கு" பொருந்தாது என்கிறார் அவர். இலங்கையில் தற்போது இடிமுழக்கம் அதிகரித்திருக்கும் நிலையில் இந்த ஆண்டு பருவமழை முன்னதாகவே வரப்போகிறது. இந்த நிலையில், நாட்டில் "மன்னன் நல்லவனாக இருந்தால் மும்மாரியும் மழை பொழியும்" எனக் கூறுகிறார் பசில். அதிபர் மகிந்த ராஜபக்ஷ ஓர் அரசனைப் போல முடிசூடவேண்டியது அவசியம் என்பது அவரது கருத்து. (உ)

*நன்றி: புதினப் பலகை*



அரச பரம்பரை ஆவதற்கு முன்னர், முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்கவுடன் மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 11 . 04 . 1948



உதிர்வு 21 . 10 . 2010

### அமரர் ஆறுமுகம் ஐங்கரநேசன்

வாழ்நாள் சிலநாள் என்றாலும் வந்தநோயும்
குணமாகா தென்றாலும் வாடிய வதனம்
கண்டறியோமே உந்தன் வாய்மொழி நின்றாலும்
மூடிய விழி மலர்ந்திட மறுத்தாலும்- எங்கள்
மூச்சினில் கலந்திருப்பாய் என்றும் எம்
பேச்சினில் நிறைந்திருப்பாய்
வாழ்நாள்தனில் வாழ்ந்திருப்பாய் நிச்சயமே!

கடந்த 21.10.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (21.11.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொன்வாலை வீதி,
மானிப்பாய். (106267)

குடும்பத்தினர்.
சிறீ வெங்கடா ஜெம்& ஜூவெல்லறி.



## ENGLISH CLASSES (சாதாரண கட்டணத்தில்)

1. Written English with basic grammar.
2. Spoken English with basic grammar
(பாடசாலை மாணவர்கள் உட்பட சகலருக்கும் பொருந்தும்)
3. Written English with advanced grammar (Sentence translation, Passage Translation, Letter writing, report writing )உட்படப் பல்வேறு பகுதிகளிலும் பயிற்சி, பல்கலைக்கழக மாணவர்களுக்கும், Professional Courses follow பண்ணுபவர்களுக்கும் வேலை செய்பவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், வெளிநாடுகளில் கல்லூரிகளிலோ, பல்கலைக்கழகங்களிலோ கல்வியைத் தொடர இருப்பவர்களுக்கும் பொருந்தும்.

குறிப்பு:- எண்ணங்களை ஆங்கிலத்தில் பிரதிபலிப்பதற்குப் பயிற்சி.

4. IELTS 5. TOEFL

Manning Place வெள்ளவத்தையில் 10 வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற மேற்படி வகுப்புக்கள் இப்போது 42, Raja Veethy, Nallur இல் நடைபெறுகின்றன.

குறிப்பு:- வகுப்பைப்பற்றித் தெரிந்து கொள்வதற்காக முதல் 2 வகுப்புக்கள் கட்டணமின்றி (Free)ஆகக் கொடுக்கப்படும். தனிநபர் வகுப்புக்களாகவோ (Personal class) குழுக்களாகவோ ஒழுங்கு செய்யலாம்.

Tel:- 021 3215 520, 0770 229 960 (106158)


# தெளிந்த அறிவைப் பெற்ற ஆய்வுகளே உதவும்

## பேராசிரியர் வேல்நம்பி உரை

யாழ்ப்பாணம், நவ.21

தெளிந்த அறிவைப் பெற்றுக்கொள்ள ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்று யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் வேல்நம்பி தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆய்வு மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்:

புதிய அனுபவங்களை பெற்றுக்கொள்ள அறிவு அவசியமானது. பெற்றுக்கொண்ட அனுபவங்கள் பெறுமானம் மிக்கவை.

தெளிந்த அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அறிவின் மூலம் பெற்றுகொள்ளப்படும் அனுபவங்கள் ஆவணப்படுத்தப்படல் வேண்டும்.

யுத்த குணம் உள்ளவர்களிடையே சகஜ நிலையை ஏற்படுத்தி மாறுபட்ட கலாசாரங்களை உடைய மக்களிடையே புரிந்துணர்வை உண்டாக்க வேண்டும்.

சமாதானம், மீள் அபிவிருத்தி தொடர்பாகவே யாழ்.பல்கலைக்கழகம் ஒருநாள் வருடாந்த ஆய்வைச் செய்துள்ளது. இந்த மாநாட்டில் கலந்துகொள்வோர் பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்து கருத்துக்களை பரிமாறிக் கொள்ளுதலே நோக்கமாகும்.

இந்த மாநாட்டுக்கு 223 ஆய்வுக் கட்டுரைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 125 ஆய்வுக் கட்டுரைகள் இம்மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும் என்றார். (204-319)

# ஜப்பானுக்கு அனுப்புவதாகக் கூறி பணம் கறந்த நபர் கைதானார்

## 4 இளைஞர்களிடம் 10 லட்சம் கொள்ளை

கொழும்பு, நவ.21

ஜப்பானில் தொழில் வாய்ப்புப் பெற்றுத் தருவார் எனக்கூறி நான்கு இளைஞர்களிடமிருந்து பத்து லட்சம் ரூபாவை பெற்ற நபர் அவர்கள் நால்வரையும் சிங்கப்பூர் வரை அழைத்துச் சென்று கொழும்புக்குத் திருப்பியனுப்பியுள்ளார்.

கொழும்புக் கோட்டைப் பொலிஸார் குறித்த நபரை கைது செய்துள்ளனர்.

இவரால் ஏமாற்றப்பட்ட நான்கு இளைஞர்களும் கொழும்புக் கோட்டை பொலிஸின் குற்றத்தடுப்புப் பிரிவுக்கு அளித்த முறைப்பாட்டையடுத்தே இவர் கைதானார். சந்தேக நபர் வரக்காபொல பிரதேசவாசியென பொலிஸார் தெரிவித்தனர்.

"முதலில் சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்று அங்கிருந்து லாவோஸ் வழியாக ஜப்பானுக்கு அனுப்பி வைப்பதாக இவர் இளைஞர்களிடம் கூறியுள்ளார்.

அதன்படி சிங்கப்பூருக்கு இவர்களை அழைத்துச் சென்று சில நாள்கள் தங்க வைத்துள்ளார்.

ஒருநாள் இவர்களை சந்தித்து 'ஜப்பான் விசா கிடைக்கவில்லை. இன்னும் தாமதமாகும்' எனக் கூறி அவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்பியுள்ளார்.

இலங்கைக்கு வந்தபின் தாங்கள் கொடுத்த பணத்தைத் திருப்பித் தருமாறு நால்வரும் கேட்டுள்ளனர். பலமுறை அவர் தந்த வாக்குறுதிகள் பலனளிக்காமல் போகவே வாலிபர்கள் பொலிசுக்கு முறையிட்டனர். கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228 (C/564561)

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567



## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சின்னத்தம்பி யோகராசா

உரிமையாளர், ராஜயோகம் அழகு மாடம் (மிதிலா)



அன்னையின் மடியில்: 16.07.1950
ஆண்டவன் அடியில்: 21.11.2007

ஆதார குலவிளக்கே ஆருயிர் அப்பாவே!
அப்பா அப்பா என்றழைத்த குரல்- மூன்றாண்டு
சென்றாலும் அப்பா என்றழைக்குது அப்பா .
பாரினிலே போற்ற பண்பாய் வளர்த்து
வாழ்க்கைக்கு வழிகாட்டிய அன்புத் தெய்வமே!
எம்மையெல்லாம் மறந்து எங்கு சென்றீர் அப்பா!
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் உருண்டாலும்
அடங்கிடாது உம் நினைவு
ஏங்கித் தவிக்கின்றோம் எழுந்தோடி வாரீரோ அப்பா!

மிதிலை,
மணற்ப்பகுதி, புத்தூர். (106182)

பாசமிகு மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



## முதலாம் ஆண்டு நினைவுகளில்

### அமரர் சரஸ்வதி கதிர்காமத்தம்பி



பிறப்பு 01.07.1932
இறப்பு 01.12.2009

திதி: பூரணை

தங்களின் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (106199)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.



## WANTED: OFFICE SPACE ON RENT FOR AN INTERNATIONAL ORGANIZATION

IOM – International Organization for Migration is the leading inter-governmental organization in the field of migration and works closely with governmental, intergovernmental and non-governmental partners. Headquartered in Geneva, Switzerland IOM has 125 member states and 16 observer states to its Executive Council and has office presence in over 100 countries.

IOM is looking for an office space in the Jaffna Municipality area with the following conditions:

- Building should be in good condition.
- Should have floor area of minimum 3,000 Square feet & maximum 4,500 Square feet.
- Should have attached toilet, water & electricity facilities.
- Compound with at least 40 perches land in extend and parking space for at least five (05) vehicles.
- Parapet boundary wall on all four sides.

Those who are in possession of a building matching the above-mentioned requirements are requested to send sealed applications in detail with the proposed terms and conditions to the below mentioned address **on or before 01st of December 2010.**

**The Head of Sub-Office**
**International Organization for Migration (IOM)**
**70, Temple Road, Jaffna.**



## இணையத்தள வழவமைப்பு

உங்கள் நிறுவனங்களின் அதிகார பூர்வ இணையத்தளங்கள் மற்றும் தனிப்பட்ட தளங்களை சர்வதேச தரம் மற்றும் விதிமுறைகளுக்கு அமைவாக எம்மிடம் வடிவமைத்துக் கொள்ள முடியும்.

**Domain Name & Web Hosting**

.com, .net, .org ஒரு வருடத்திற்கு பதிவு செய்ய ரூபா 1000 மட்டுமே.

உங்கள் தேவைக்கு ஏற்ப இணைய இடவசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

500 MB Space Rs.1000 / Year
1000 MB Space Rs.2000 / Year
2000 MB Space Rs.4000 / Year
5000 MB Space Rs.7000 / Year

All our packages comes with the following:
Unlimited POP3 Email Accounts
Unlimited FTP Accounts
Unlimited Subdomains.
Unlimited Add-on Domains
Unlimited Parked Domains
Unlimited MySQL Database
Unlimited Mail Forwards, Autoresponders
Online File Manager
Up to 50 Free Scripts with Auto Installer
FREE Video Tutorials
FREE Instant Setup
24/7 Live Support
99.9% Uptime Guarantee
30 Days Money Back Guarantee
#1 Rated Control Panel - cPanel
And many more...

பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், ஆலயங்கள், இலாப நோக்கற்ற நிறுவனங்கள் மற்றும் மாணவர்களுக்கும் விசேட கட்டணச் சலுகை வழங்கப்படும்.

இணையத்தள வழவமைப்பில் சிறந்த அனுபவம் உள்ளவர்கள் நிறுவனத்தில் பதிவு செய்து கொள்வதன் மூலம் வேலைவாய்ப்பை பெற்றுக்கௌ்ளலாம்.

webster networks MAKING DREAMS REALITY
www.websternetworks.net

இல 94, மானிப்பாய் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
[வைத்தீஸ்வரா கல்லூரிக்கு அருகில்]
021 222 0261, 0779 471 771


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர்வாசிகளுக்கு எதிரானவர்கள் என்றே எம்மை யாழ்ப்பாண மக்கள் கருதினர்

**குறிப்பு**

*யாழ்ப்பாணத்தில் தாம் கடமையாற்றிய வேளையில் தமது சிவில் நிர்வாகக் கடமைகளின்போது தாம் பெற்ற அனுபவங்கள் குறித்து லியனார்ட் வூலப் தாம் எழுதிய நூலில் விபரித்துள்ள குறிப்புக்கள் இவ்வாரமும் தொடர்கின்றன.*

சட்டத்தரணி காசிப்பிள்ளை எழுதிய கடிதம் தொடர்பாக சென்ற வாரம் குறிப்பிட்டிருந்தேன்.

சட்டத்தரணி காசிப்பிள்ளையின் கடிதம் வருமாறு:

யாழ்ப்பாணம்
23 ஒகஸ்ட் 1907

அன்புள்ள ஐயா,

நீங்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய போது உங்களைச் சந்தித்து வழியனுப்ப முடியாமைக்கு மிகவும் வருந்துகிறேன். நீங்கள் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறிய போது நான் கடுமையான சளிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தேன். இன்னமும் பூரண குணமடையவில்லை, இங்கே சொற்ப உத்தியோகத்தர்கள்தான் கடினமாக உழைக்கிறார்கள். நீங்கள் சாதித்தது அல்லது சம்பாதித்தது உங்கள் கடிதங்கள் மூலம் தெரியவருகிறது. மக்களின் அங்கீகாரம் உங்களுக்குக் கிடைத்துள்ளது. உங்களது செயற்பாடுகள்மூலம் உங்களுக்குக்கீழ் வேலை செய்தவர்கள் அதிருப்தியடைந்திருப்பார்கள். உங்களுக்குக்கீழ் வேலை செய்தவர்கள் உங்களைப் போன்ற ஒரு கடின உழைப்பாளியை அதேநேரத்தில் சகல உத்தியோகத்தர்களையும் சரிசமமாக நடத்தும் கணிவுமிக்க ஒரு மேலதிகாரியை இதுவரை கண்டிருக்கமாட்டார்கள். இதுதான் உங்களுடைய இலட்சியச் சிந்தனை (Motto) வெகுமதி.

நீங்கள் நீண்டகாலம் சேவையாற்ற வாழ்த்துகிறேன்.

தங்கள் உண்மையுள்ள
வீ.காசிப்பிள்ளை

**ஆவணப் பெட்டகம் 19**

எனது அணுகுமுறைகள் என்னை ஒரு கடும் போக்காளனாகக் காட்டின. நான் மக்களுக்குத் தண்டனை வழங்கியபோது அவை என்னை ஒரு ஏகாதிபத்திய வாதியாகக் காட்டின. யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் என்னைப் பற்றி இரு தடவைகள் ஆளுநருக்கு முறைப்பாடு செய்தது. இரண்டு வருட அனுபவம் உள்ள ஒரு குடியியல் உத்தியோகத்தர்கள் வழமைக்கு மாறாக தேவையற்ற விதத்தில் செயற்படுகிறார் என்பது அவர்களது குற்றச்சாட்டு. இரண்டு தடவையும் அரசாங்க அதிபரூடாக என்னிடம் விளக்கம் கோரப்பட்டது.

முதலாவது சம்பவம் கச்சேரி விறாந்தையில் துப்புவது தடை செய்யப்பட்டுள்ளது என அறிவித்தலொன்றை எழுதியிருந்தேன். ஒருநாள் எனது எழுதுவினைஞர் ஒருவர் விறாந்தையில் துப்பிவிட்டார். நான் அவரைத் துப்பிய இடத்தைச் சுத்தம் செய்யுமாறு கூறினேன். அவர் அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டார். எனினும் பின்னர் செய்தார். நான் நினைக்கிறேன் அவரது சாதித் தடிப்பு அவரை சுத்தம் செய்யவிடாமல் தடுத்திருக்கக் கூடும். இதன் காரணமாக அவர் எனக்கு ஒரு பாடம் படிப்பிப்பதாக நினைத்து ஆளுநருக்கு முறைப்பாடு செய்திருக்கலாம். நான் கடுமையான தொனியில் அவருக்கு உத்தரவிட்டது உண்மையில் பிழைதான். ஆளுநரும் எனது விளக்கத்தை ஏற்றுக்கொண்டார். யாழ்ப்பாண மக்கள் நானும் அரச அதிபரும் மக்களுடன் கண்டிப்பான முறையில் அணுகுவதை விரும்பவில்லை. அவர்கள் எம்மை உள்ளூர்வாசிகளுக்கு எதிரானவர்கள் என்றே கருதினர். ஆனால் உண்மையில் எனது செயற்பாடுகள் உள்ளூர்வாசிகளுக்கு எதிரானவையல்ல என்பதே உண்மை.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் செய்த இரண்டாவது முறைப்பாட்டில் எதுவித உண்மையுமில்லை. இரண்டாவது குற்றச்சாட்டு, மதிப்புக்குரிய சட்டத்தரணி ஹரி சந்திரசேகரா ஒருநாள் தனது குதிரை வண்டியில் பிரதான வீதியால் வந்து கொண்டிருந்தபோது அவருக்கு எதிர்த்திசையிலிருந்து குதிரையில் நானும் அரசாங்க அதிபரும்வந்து கொண்டிருந்ததாகவும், சந்திரசேகரா எம்மைக் கடந்து சென்ற வேளையில் நான் குதிரையைத் திருப்பி குதிரைச் சவுக்கால் அவரை அடித்ததாகவும் என் மீது குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டுப் பத்திரத்தை முதல் தடவை பார்த்ததும் நான் ஆச்சரியமடைந்தேன். ஏன், எதற்காக இப்படியொரு குற்றச்சாட்டு என் மீது சுமத்தப்பட்டுள்ளது என்று சந்திரசேகராவை நான் பல தடவைகள் நீதிமன்றத்திலும் கச்சேரியிலும் சந்தித்து நட்பாகப் பழகியுள்ளேன்.



எவ்.எச்.பிறைஸ் - அரசாங்க அதிபர்

## யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை அறிந்து கொள்வோம்

சட்டத்தரணி சந்திரசேகராவின் முறைப்பாட்டை வாசித்ததும் எனக்கு ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது. ஒருநாள் நானும் அரசாங்க அதிபரும் பிரதான வீதியால் குதிரையில் வந்து கொண்டிருந்த போது எனது குதிரை திடீரென கட்டுப்பாட்டை யிழந்து வேகமாக ஓடத் தொடங்கியது.

**தாண்டவன்**

வீடுகளின் வாசலில் நின்றவர்களெல்லாம் புழுதி காரணமாக கண்களை மூடிக்கொண்டனர். வேகமாக ஓடிய எனது குதிரை முற்றவெளியில் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு நின்றது.

(வளரும்)

# மருத்துவப் பயன்தரும் மரவகைகளை வாழ்வியலுடன் இணைத்த நம் முன்னோர்

**பன்னீர் மரம்**

**தாவரவியற் பெயர் :** Guetharda speciosa
**குடும்பம் :** Rubiaccae

இது சிறுமரவகுப்புக்குரியது. தனி இலைகள் எதிரான ஒழுங்கில் காணப்படும். பெரியவை, வட்டமாக அல்லது சற்று நீள்வட்டமாக இருக்கும். பூக்கள் வெண்மைநிறம், நறுமணமுடையவை. கோயில்களில் பத்திரங்களாக இலைகள் அர்ச்சனை செய்யப் பயன்படுகின்றன. இது மருந்துகளில் அதிகம் சேர்க்கப்படுவதில்லை. எனினும் இதன் இலைகளில் உணவு, பிரசாதம் என்பவற்றை உண்டுவந்தால் பித்தந்தணியும் என்று கூறப்படுகிறது.



பூக்களை நீர்விட்டரைத்துத் துர்நாற்றம் வீசும் புண்களில் போட்டுவர துர்நாற்றம் நீங்குவதுடன், புண்ணும் ஆறும்.

உஷ்ணமான மூட்டு வீக்கங்களின்மேல் சிறிது நல்லெண்ணெய் பூசி, பன்னீர் இலையை வாட்டிக் கட்டிவர வீக்கம், வேதனை தணியும்.

**அசோகு**

**வேறுபெயர்:** பிண்டி, அசோகம், செயலை
**தாவரவியற்பெயர்:** Saraca indica
(சராக்கா இண்டிக்கா)
**குடும்பம்:** Caesalpinoideae
(சிசால்பினோய்டியே)
**சிங்களப் பெயர்:** அசோக
**சமஸ்கிருதப் பெயர்:** அசோக
**ஆங்கிலப் பெயர்:** Ashok Tree

''செயலைத் தண்தளிர் துயல்வரு காதினன்'' என்று திருமுருகாற்றுப்படையிலே முருகப் பெருமான் அசோகம் (செயலை) பூச்சூடியுள்ளதை நக்கீரர் எடுத்துக் காட்டுகிறார். அசோகு நன்கு கிளைத்துப் பரவி உயர்ந்து வளரும் ஒரு மரமாகும். இலைகள் நீண்டு குத்துவாள் வடிவினதாகக் காணப்படும். இளந்தளிர்கள் செந்நிறம். மாசி, பங்குனியில் பூக்கும். பூக்கள் நுனிவளராப் பூந்துணரில் காணப் படும். பூக்கள் செந்நிறம், கொத்துக் கொத்தாகக் காணப் படும். கனிகள் தட்டையாயும் தடித்த உறையுடனும் காணப்படும்.

மகளிர் நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் மூலிகைகளில் நாவல், அசோகு என்பன முக்கியமானவை. இதில் நாவலை ஔவையாருடனும், அசோகை சீதையுடனும் தொடர்புபடுத்திச் சமயநூல்கள் கூறுகின்றன. மருத்துவ ரீதியாகப் பார்க்குமிடத்து மூப்புற்ற பெண்களுக்கு வரும் சில நோய்களுக்கு நாவலும், இளம் பெண்களுக்கு ஏற்படும் சில நோய்களுக்கு அசோகும் முக்கியமாகப் பயன்படுவதைக் காணமுடிகிறது.



அசோகப்பட்டையைப் பச்சையாக எடுத்து இடித்துச் சாறு பிழிந்து அதில் 1-2 மேசைக் கரண்டி யளவில் தினமும்காலை, மாலை பருகிவர இளம் பெண்களுக்கு ஏற்படும் பெரும்பாடு என்னும் அதிஇரத்தப் போக்கு தணிவடையும்.

உலர்ந்தபட்டையைச் சிறு துண்டுகளாக நறுக் கிப் பசுப்பால் சேர்த்துக் குடிநீர் செய்து குடிக்கக் கொடுத்தா லும் பெரும்பாடு நீங்கும்.

அசோகம்பட்டை, மாதுளை வேர்ப்பட்டை, மாதுளங் கோது என்பவற்றைச் சமவள வில் எடுத்துப் பொடி செய்து தினமும் 1 கிராம் அளவில் காலை, மாலை சாப்பிட்டுவர சூதகவலி, வாய்வுத் தொல்லைகள், பெரும்பாடு என்பன நீங்கும்.


கர்ப்பாசய உறுப்புகளும் வலிமைபெறும். இதை உண்ணும் போது உணவின் காரம், புளி என்பவற்றைத் தவிர்ப்பது அவசியமாகும்.

**காற்றோட்டி**

**வேறுபெயர்:** ஆதண்டை, ஆதொண்டை, காத்தொட்டி, காத்தோட்டி
**தாவரவியற்பெயர்:** Capparis zeylanica
(கப்பாரிஸ் சைலானிக்கா)
**குடும்பம்:** Capparidaceae
(கப்பாரிடேசியே)
**ஆங்கிலப் பெயர்:** Thorny caper

காற்றோட்டிக்காய் பிதுர்களுக்குப் பிரியமானதாகக் கூறி ஆடி அமாவாசையன்று உணவில் கட்டாயம் இடம்பெறும் ஒரு மூலிகையாகவுள்ளது. ஆடிமாதம் காற்று மிகுந்த காலமாகும். ஆடிக் காற்றுக்கு அம்மியும் நகரும் என்பது பழமொழி. எனவே, ஆடிமாதத்தில் காற்றுக் காலத்தையொட்டி இது காய்ப்பதால் காத்தொட்டிக்காய் (காற்றொட்டிக் காய்) எனப்படுகிறது. இக்காயானது உணவுச் சமிபாட்டைச் சீராக்கி வயிற்றிலுண்டாகும் வாய்வுத் தன்மையை (காற்றை) அகற்றுவதால் (ஓட்டுவதால்) மருத்துவர்கள் இதனைக் காற்றோட்டிக்காய் என்று அழைக்கிறார்கள். இது கொடி வகுப்புக் குரியது. கூட்டிலைகள் கொடியில் முட்களுண்டு. ஆனியில் பூக்கும். ஆடி மாதத்தில் காய்களுண்டாகும்.

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்



நீண்டு உருண்டையான காய்கள் பச்சை நிறத்தில் காணப்படும் மிகவும் கசப்புச் சுவையுடையவை. பழம் சிவப்பு நிறம்.

வேர், இலை, காய் என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன.

இதன் இலை அல்லது வேர்ப்பட்டையை நீர் விட்டுக் குடிநீர் செய்து 1-2 மேசைக் கரண்டி அளவில் பருகிவர வயிற்று மந்தம், செரியாமை, வாந்தி என்பன குணமாகும்.

காயைப் பொரித்து உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டு வர வயிற்றுப் பொருமல், அஜீரணம், மூலவாயு, பீனிசம், கபநோய்கள் என்பன நீங்கும். நல் லெண்ணெயுடன் இதன் வேர்ப் பட்டையை சேர்த்துக் காய்ச்சிய எண்ணெயைத் தலைக்கு வைத்துவரமூக்கடைப்புமண்டைப் பீனிசம், தலை வலி, சளி முதலியன மாறும்.



Dr.சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோம் என் நெஞ்சே

சங்கப் பாடல்களில் பிரிதல் உணர்வைப் புலப்படுத்தும் பாடல்களே அதிகமாக உள்ளன. அவற்றில் உள்ள காட்சிப்படுத்தல் துன்பியல் காட்சியாகவே பாடலில் அமைக்கப்பட்டிருக்கும். பெண்ணினுடைய உள்ளத்து துன்பங்களையே பல்வேறு கூற்றுநிலைகளால் புலவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். அவற்றில் பெண்ணின் கூற்று, ஆணின் கூற்று, தோழி கூற்று, செவிலி கூற்று எனப் பல்வேறு கூற்றுநிலைப்பாடல்கள் உள்ளன. அகப் பாடல்கள் என அழைக்கப்படும் காதல் பாடல்களில் பிரிவுத் துன்பத்தைப் பெண் கூற்றாகப் புலப்படுத்துவது பெரும்பான்மையாகவுள்ளது. எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடலை நோக்கலாம்.

**"நோம் என் நெஞ்சே நோம் என் நெஞ்சே**
**இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி**
**அமைதற் கமைந்தருங் காதலர்**
**அமைவிலர் ஆடுதல் நோம் என் நெஞ்சே"**

(குறுந்தொகை-4)

இப்பாடல் காதலனைப் பிரிந்திருக்கும் காதலியின் பிரிவுத் துன்பத்தினை அவளே கூறுவது போல அமைந்துள்ளது. 'நோம் என் நெஞ்சே' என்ற தொடர் மூன்று முறை பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பெண்தானே தனது நெஞ்சின் வேதனை பற்றிக் கூறுகிறாள். 'என்' எனும் தன்மைப் பெயர்ச் சொல் இதற்குச் சான்றாகவுள்ளது. வாய்மொழிப் பாடல்களில் ஒரே சொற்றொடர் திரும்பத் திரும்ப வருவதுண்டு. ஆனால் துன்புற்றிருக்கும் போது ஒன்றையே சொல்லிப் புலம்பும் வழக்கம் உண்டு. பாடலைப் பாடியவர் பெண்ணின் இத்தகைய மனோபாவத்தைப் புலப்படுத்தவே ஒரு தொடரைத் திரும்பவும் பயன்படுத்தியுள்ளார்.

தன்னுடைய நெஞ்சில் நிறைந்த கவலையை மேலும் தாங்கிக்கொள்ள முடியாமல் வெளிப்படையாகக் கூறும் நிலை இது. தனது நெருங்கிய தோழியிடம் தன் நெஞ்சத்துக் கவலையைக் கூறுவதாகப் புலவர் பாடலை அமைத்துள்ளார். பெண்ணினுடைய தோற்றத்தை அவளது கண்ணீர் மூலம் காட்சிப்படுத்துகிறார். 'இமை தீய்ப்பனன கண்ணீர் தாங்கி' என்ற தொடர் இதனை நன்கு புலப்படுத்துகிறது. கண்களிலிருந்து பெருகும் கண்ணீர் மிகவும் சூடாகவுள்ளது. அது உள்ளத்திலுள்ள பெருங் கவலையைக் காட்டுகிறது.தனது கண்களின் இமைகளையே தீய்ப்பது போன்ற வெம்மையான கண்ணீர் என அவளே கூறுகிறாள். கண்களிலிருந்து இருவகையான கண்ணீர் வெளிப்படும். ஒன்று ஆனந்தக் கண்ணீர். மற்றது துன்பக் கண்ணீர்.இவ்விரு கண்ணீரிலும் வேறுபாடு உண்டு. ஆனந்தக் கண்ணீர் குளிர்மையாக இருக்கும். துன்பக் கண்ணீர் வெம்மையாக இருக்கும். நெஞ்சிலுள்ள துன்பத்தை வெளிப்படுத்தும் வெம்மையான கண்ணீரோடு காத்திருப்பது என்பது நீண்ட காலமாகக் காத்திருப்பதையும் உய்த்துணர வைக்கின்றது. அவளை விட்டுப் பிரிந்த காதலனுடைய வருகையை எதிர்பார்த்திருந்தாள். அவன்விரைவில் வந்து விடுவான் என்ற நம்பிக்கையோடு காத்திருந்தாள்.

## இலக்கியக் காட்சி 66

தன்னுடைய காதலனைப் பற்றிக் குறிப்பிடும் போது'அமைதற்கு அமைந்த நங்காதவர்' என்று கூறுகிறாள். கண்ணீரோடு தான் துன்பப்படுவதற்குக் காரணமான தன்னுடைய காதலர் என்று கூறுவதன் மூலம் அவன் நீண்ட நாள்களாகத் தன்னிடம் வரவில்லையென்பதை எடுத்துரைக்கின்றாள். இதன் மூலம் காதலன் இருக்குமிடம் தொலைவானது என்பது பெறப்படுகின்றது. பண்டைக் காலத்தில் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குச் செல்லுவதென்பது மிகவும் கடினமான காரியம்.

இன்னும் பிரிவு என்பது பெரும்பாலும் பொருள் வயிற்பிரிவு, பரத்தை வயிற் பிரிவாகவே இருந்துள்ளது. இதைவிட ஓதற்பிரிவு பகை வயிற்பிரிவு தூதிற்பிரிவு எனச் சில பிரிவுகளும் நடைபெற்றதாக உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். பழந்தமிழர் வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியமும் இப்பிரிவுகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. மேலும் பொருள் வயிற்பிரிவில் நெய்தல் நிலத்து மக்கள் கடலில் மீன்வேட்டைத் தொழிலுக்காகப் பிரிந்து செல்வது வழக்கம். அவ்வாறு செல்லும் போது சென்ற கணவன் திரும்பி வரும்வரை மனைவி மிகக் கவலையோடு இரங்குவாள். போனவன் நலமாகத் திரும்ப வேண்டுமே என்ற ஆதங்கம். அவளுக்கு சில வேளைகளில் மீன் வேட்டத்துக்காகப் போனவன் சில நாள்களுக்குத் திரும்பாத நிலையுண்டு.

இப்பாடல் அத்தகைய ஓர் இரங்கல் நிலையையே குறிப்பிட்டுள்ளது.'நோம் என் நெஞ்சே' என்ற தொடர் அவளுடைய உணர்வைப் புலப்படுத்துவதாக மூன்று முறை பயன்படுத்தப்பட்டுள்ளமை இதற்குச் சான்றாக உள்ளது. முதலில் அவன் பிரிவை எண்ணி வருந்துகிறாள். பின்னர் தன் துன்பம் தீரக் காரணமான காதலன் வரவு நீட்டிப்பதையிட்டு வருந்துகிறாள். உடல் ரீதியான துன்பம் அன்றி உள்ளம் தொடர்பான துன்பம் என்பதால் தொடர்ந்திருக்கின்றது. 'அமைவிலர் ஆகுதல்' என்ற தொடர் துன்பத்தைத் தீர்க்கும் நிலையில் அவன் இல்லையென்பதை உணர்த்துகிறது.

இப்பாடலை உரையாசிரியர் தலைமகள் கூற்று என வகுத்துள்ளார். அகமாந்தர் உணர்வுகளைத் தொல்காப்பியர் கூற்றுநிலைகளாக வகுத்துள்ளார். அதனை அடிப்படையாகக் கொண்டே உரையாசிரியர் இப்பாடலைத் தலைமகன் கூற்றெனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் 'காதலர்' என்ற சொல் 'கணவன் என்னும் பொருள் தருவதாக உள்ளது. திருமணம் முடித்தவனைக் 'காதலன்' என்று குறிப்பிடும் வழக்கம் பெரும்பான்மையாக உள்ளது. கணவன் என்ற சொல்லும் சங்கப் பாடல்களில் வழக்கிலுண்டு. நீண்ட காலம் நெருக்கமாக வாழ்ந்த உறவைக் காதலர் என்ற சொல்மூலம் பெண் புலப்படுத்துகிறாள்.

மொழிநடை நிலையில் நான்கு அடிகளைக் கொண்ட மிகக் குறுகிய பாடலாக அமைந்துள்ளது. பெண்ணொருத்தி தனது துன்பநிலையை வாய்விட்டு அரற்றிப் புலம்பும்போது பெண்மொழி பயன்படுத்தப்பட்டுள்ளது. 'நோம் என் நெஞ்சே' என்ற சொற்றொடர் பெண்மொழியின் தன்மையை உணர்த்தியுள்ளது. துன்பத்தால் வருந்தும் பெண் தன் நிலையை விளக்குவதற்கு ஒரே சொற்றொடரையே திரும்பத் திரும்பக் கூறி வருந்துகிறாள். அவள் கண்களிலிருந்து பெருகும் சூடான கண்ணீர் அவள் கையறுநிலையைக் காட்டி நிற்கிறது. எனவே இன்னொரு பெண்ணான தன் தோழியிடம் சொல்லியிரங்குகிறாள்.

இப்பாடலைப் பாடியவர் காமஞ்சேர் குளத்தார். அவருடைய பாடற்புனைவில் தன்னையே ஒரு தலைமகளாகப் பாவனை செய்து பாடும் தன்மை புலப்படுகிறது.

பாடலில் இயற்கை பற்றிய குறிப்பு எதுவும் இணைக்கப் படாமைக்கு இது காரணமாகலாம். உரிப்பொருள் என்ற நிலையில் இரங் கல், ஒழுக்கம் பாடலில் புனையப்பட் டுள்ளது. பெண் கூற்று நிலை அமைப் பும் இதனைத் தெளிவுபடுத்தியுள்ளது. பிரிதல் உணர்வுக்கும் இரங்கல் உணர்வுக்கும் இடையேயுள்ள வேறு பட்ட நிலையைப் புலவர் இப்பாடலில் புலப்படுத்தியுள்ளார்.



கலாநிதி
**மனோன்மணி சண்முகதாஸ்**

## சொற்சிலம்பம் - போட்டி இல: 139

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | ■ | |
| 9 | | ■ | 10 | 11 | | | |
| | ■ | 12 | | | | ■ | |
| ■ | 13 | | | | ■ | 14 | |
| 15 | | | | ■ | 16 | | |
| 17 | | | ■ | 18 | | | ■ |
| 19 | | ■ | 20 | | | | ■ |

### இடமிருந்து வலம்

1. பட்டினி இருத்தல்
5. நல்ல/ சிறந்த
7. படித்தும் பெறுவர்/பறக்கவும் விடுவர்.
9. வனம்.
10. சூரியன்
12. பாடலின் ஓசை நயத்தின் அங்கம்.
13. கூட்டி/ சேர்த்து வருவது
14. உன்னுடையது.
15.முடிவு.
16. குரல்வளை/தொண்டை
17. ரூபாயின் நூறில் ஒன்று
18. உரியநிலை/ நடனத்தில் அடையாளம்
19. சாப்பிடு
20. இனிப்புச் சுவைதரும் பயிர்வகை.

### மேலிருந்து கீழ்

1. உதவுபவன்
2.ஒரு நூல் வகை/ பூச்சியிலிருந்தும் எடுப்பர்.
3. வதவதங்க/மெலிய/சுருங்க/வற்ற
4. தொடர்பு.
6. ஒரு டசினிலும் ஒன்று கூட.
8. வீட்டுவாசலில் மாவினால் போடுவது.
11. தண்டாயுதம்
12. ஒலி
13. சமையலுக்கு காய் தரும் வாழை இனம்.
14. தேகம்.
15. களைப்பால் வருவது.
16.மேலதிகம்/ அதிகம்
18. முகத்தில் வருவது

அனுப்புபவர் பெயர்:..............................

விலாசம்:..............................

..............................

கையொப்பம்:..............................

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 139**

*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 01.12.2010 ஆம் திக திக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*

7. சொற்சிலம்பம் போட்டி இல.139 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 05.12.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 137 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)விகடகவி. (5)உப.(7) வடு. (8)வழிபடல். (10)சாம்பார். (12)தின். (13)சதம். (14)பாவி.(16) கனல். (17)கடுகு. (18) உரம். (19)உரு. (20) தண். (21)கரும்பு, (23)விடிவெள்ளி (24)கைமை.

### மேலிருந்து கீழ்

(1விவசாயி. (2) கடும். (3) கவர்தல். (4)விழி.(5)உடன்பாடு. (6) பல். (9)பதி.(11)பாசனம்.(15)விகுதி (16)கரண்டி. (17)கரும்.(18)உதவி.(19)உருளி. (21)கள். (22)புகை.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 137 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — **தீ.ரதீஸ்**, புளியங்கூடல் வடக்கு, ஊர்காவற்றுறை.

2 ஆம் பரிசு — **ம.வித்யா (தரம்-13)**, ...ா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி.

3 ஆம் பரிசு — **இ.சதாசிவம்**, அம்பன் கொட்டோடை, குடத்தனை.

4 ஆம் பரிசு — **கோபாலகிருஷ்ணசர்மா**, கோகுலம், கல்பொக்கனை, உடுவில்,சுன்னாகம்.

5 ஆம் பரிசு — **எஸ்.இராஜேஸ்வரி**, பாரதி லேன், சங்கானை.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **வி.என்.பரமலிங்கம்,** நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(2) **க.ஞானோதயன்** தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.

(3) **சி.எப்ராஜீம்** அரசடி வீதி, கட்டுடை,மானிப்பாய்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத் தைச் சரியான ஆவணத்துடன் 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். [illegible] பிரதேசங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப் பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருக்கும் மூளைசாலிகள்

**நாடளாவிய ரீதியில் வேலையற்ற பட்டதாரிகள் உள்ளனர் என்பது வெளிப்படை. ஆனால் இந்நிலைமை யாழ்.மாவட்டத்தில் வேறொரு நிலையில் வைத்தே பகுபாய்வு செய்யப்பட வேண்டும். அந்தளவுக்கு யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தி வளர்ச்சி, உட்கட்டுமான முன்னேற்றம், தொழிற்சாலைகளின் நிலைமையாவற்றிலும் பின்தள்ளப்பட்டே உள்ளது.**

**இந்நிலையில் யாழ். குடாநாட்டுப் பட்டதாரிகள் நிலை தொடர்பாகவும் மிகைச்சுமையானவர்களாக பட்டதாரிகள் மாறிவருவது தொடர்பாகவும் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் சிரேஷ்ட உயிரி இரசாயனத்துறை விரிவுரையாளர் பேராசிரியர் கலாநிதி பொன்.நவரட்ணத்தின் கருத்துக்கள் இங்கு தரப்படுகின்றன.**

பல்கலைக்கழகங்கள் புதிய பீடங்களையோ - புதிய கல்வித்துறைகளையோ உருவாக்குவதில் பயனில்லை.பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் மூலதனங்களான பட்டதாரிகளுக்கு - மூளைசாலிகளுக்கு - வேலை வாய்ப்பு உருவாக்கப்பட வேண்டும்.

இன்று அந்த நிலைமை முற்றாக மாறிவிட்டது. கவலைக்கிடமான ஒன்றாகத் தோற்றமளிக்கிறது. யாழ்.மாவட்டத்தில் மட்டும் 4 ஆயிரத்து 762 பட்டதாரிகளுக்குமேல் வேலையின்றி சுமையானவர்களாகச் சமுதாயத்துக்கு மாறிவிட்டனர்.

யாழ்.குடாநாடு 15 பிரதேச செயலாளர் பிரிவுகளை கொண்ட பரந்து - விரிந்த - பெரிய பிரதேசம். மூன்று பக்கமும் கடல் சூழ்ந்த நிறைவான பகுதியும்கூட. யாழ்ப்பாணத்தில் சகல வளங்களும் உள்ளதாகவும் நாம் பேசிக் கொண்டிருக்கின்றோம். அதனை வெவ்வேறு வடிவங்களில் பார்த்து, படித்தும் வருகின்றோம்.

ஆனால், அந்தளவுக்கு வளமான எமது பகுதியில் வாழ்ந்துவருகின்ற வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்க கூடியதாக எந்தவொரு துறையும் இங்கு வளரவில்லை.

பாரிய கைத்தொழிற்சாலைகளோ, உற்பத்தி நிறுவனங்களோ,சேவை நிறுவனங்களோ தற்போது இங்கு இல்லை.

வேலையற்ற பட்டதாரிகளும், ஏனைய படித்த இளைஞர்களும் ''வைற்கொலர்'' வேலை வாய்ப்பினை நம்பியே அரச உத்தியோகத்தை எதிர்பார்த்தே காத்திருக்கின்றனர்.

ஆனால் அண்மைக்காலங்களில் மக்கள் சபைச் செயலாளர் பதவி, விவசாய விரிவாக்க அலுவலர் பதவி, கிராம அதிகாரிகள் போன்ற பதவிகளுக்கு விண்ணப்பங்களை அரசு கோரிவிட்டு இதுவரையில் வேலை கொடுக்கவுமில்லை, நேர்முக பரீட்சை, பரீட்சை என்பனவற்றை நடத்தவும் இல்லை.

அரசு இன்று வேலை வழங்கும் விடயத்தில் சில தந்திரோபாயங்களை மேற்கொண்டு காலத்தை நகர்த்துகின்றது.

வேலை வழங்குவதற்கான சகல தகுதிகளையும் அரசு தற்போது இழந்துள்ளது.

2005 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் 40 ஆயிரம் பட்டதாரிகளுக்கு பல்வேறு துறைகளில் கூட்டுத்தாபனங்களிலும், நீதித் துறைகளிலும், ஏனைய சபைகளிலும் நியமனங்கள் வழங்கப்பட்டன.

இதை விட 1999 இல் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் காலப்பகுதியில் 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

ஆயினும் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரிகள் முன்னேற்றம்,அவர்களது வாழ்வாதார நிலை மற்றும் அபிவிருத்திகள் எதிலும் கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

சேவைப்பிரமாண குறிப்பு இல்லை, ஆள்சேர்ப்புத் திட்டமில்லை, இடமாற்றம் குறித்த தெளிவுஇல்லை, பதவி உயர்வு இல்லை, வகுப்பு/தரம் இல்லை, கடமைப் பட்டியல் இல்லை எல்லாவற்றிலும் இல்லை என்றே சொல்லே முதன்மையாகி வேலை கிடைத்த பட்டதாரிகளும் கவலைக்குரியவர்களாகி விட்டனர்.

இந்த நிலையில் வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்து பொருளாதாரத்தை ஒரு தேக்கமான - மந்த நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது.

இன்று புதினப்பத்திரிகைகளைப் புரட்டினால் புதிய கல்விக் கொள்கைகள் புகுத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுகின்றன. புதிய - கற்கை நிறுவனங்கள் பல நவீன விளம்பரத்தோரணையோடு உருவாகின்றன. இதனால் சான்றிதழ்களும், டிப்ளோமாக்களும், முதுமாணி, முதுமெய்யியல், கலாநிதி என்னும் கல்வித் தகைமைகளும் நீண்டு செயல்இழந்து விட்டன.

யாழ். மாவட்டத்தில் மட்டுமல்ல நாடளாவிய ரீதியாக பட்டதாரிகள் பிரச்சினை ''பெரு வெடிப்பாக'' மாறிவிட்டது.

இவ்வெடிப்பின் சாதக - பாதக நிலைமைகளின் வெளிப்பாடு - வெளியில் வெளிவரவும் தொடங்கி விட்டன. பணவீக்கத்தினால் அதன் பெறுமதி பொய்த்தோற்றத்தில் உருண்டு செல்கிறது. இந்நிலையில் புதிய சிந்தனை - புதிய தோற்ற வெளிப்பாடுகள் வெளிவர வேண்டும். இன்று அரசியல் நிலைகளில் உள்ளவர்கள் வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினையை வெளிப்படுத்தி ஆராயவேண்டும்.

அதற்காக பல விவாதங்களை நடத்தி யதார்த்தமான தீர்வு வெளிக்கொணரப் படவேண்டும். அவர்களுக்கு ஏற்பட்டுள்ள சமூகப் பிரச்சினைகளை முன்கொண்டு வரவேண்டும்.

2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளிலது வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கக் கூடிய தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும்.

வடக்குப் பகுதியில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும் உள்ளூராட்சி சபை ரீதியாகவும் தரிசு நிலங்களை முகாமைத்துவ நோக்கில் தொழிற்சாலைகளாக - சேவை நிலையங்களாக மாற்றவேண்டும்.

அப்போதுதான் தென்னிலங்கையைப் போன்று எமது மாணவர்களும் பட்டம் பெற்றவுடன் ''காத்திராது'' வேலையைப் பெறவும் பிரதேச வளர்ச்சி அபிவிருத்தி என்பன ஏற்படுவதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தி, மொத்த தேசிய உற்பத்தி என்பவற்றுக்கும் பங்களிப்புச் செய்ய முடியும். இன்று வெறும் பட்டதாரிகளை உருவாக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் கல்வி வெளியீட்டை வழங்கும் நிறுவனங்களுக்கும் ஒன்று சொல்ல

**தொகுப்பு:-**
**நவாலியூர் செ.ரமேஷ்**

வேண்டும். பட்டதாரிகளை மட்டும் உருவாக்குவது அவர்களுடைய தொழில் அல்ல. சமூகத்தில் பட்டம் பெற்றவர்கள் உயர்ந்த நிலையை அடையப் பொருத்தமான வேலையைத் தேடிக்கொடுப்பதிலும் கூடிய சமூக பொறுப்பு, கடப்பாடு அந்த நிறுவனங்களுக்கு உள்ளது. இதனை நினைவில் வைத்துச் செயற்பட்டால் மெய்யான நிலையொன்றினை அடைந்துவிடலாம்.

***

# அக இருள் நீக்குவது ஞான ஒளி

## இன்று கார்த்திகை விளக்கீடு

**சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்**

கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திர நாளே திருக்கார்த்திகை எனப்படும் வீளக்கீடு. இது சைவ சமய மக்களின் முக்கிய விசேட நாளாகும். அத்துடன் இது சிவபெருமானுக்கும் முருகப்பெருமானுக்கும் உகந்த திருநாளாகவும் கருதப்படுகின்றது.


இன்றைய கார்த்திகை விளக்கீடு ஆலயங்களிலும் இல்லங்களிலும் விளக்கேற்றி வழிபாடு செய்கின்ற ஒரு மங்கலம் நிறைந்த புனிதத் திருநாளாகும். விளக்குகளை வரிசையாக ஏற்றி அந்தத் தீப ஒளியிலேயே இறைவனைக் கண்டு தரிசிப்பது தொன்று தொட்டு நிகழ்ந்து வருகின்ற ஒரு பண்டையவழக்காகும்.

இறைவன் ஒளிமயமானவன். ஆயிரங்கோடி சூரியப்பிரகாசமுடைய ஆண்டவன் ஒளிப்பிழம்பாக நின்ற நாளே இந்தத் திருக்கார்த்திகை என்றும் சொல்லப்படுகின்றது. பிரம்மாவும் விஷ்ணுவும் அகந்தையினால் அடிபட்டுக்கொண்டவேளை ஆலாலமுண்ட நீல கண்டனான சிவன் ஒளிப்பிழம்பாகி அடியையும் முடியையும் காணுமாறு பணித்தாராம். ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ் சோதியாக நின்ற இறைவனின் அடிமுடியைக் காணமுடியுமா?

பிரம்மாவாலும் விஷ்ணுவாலும் ஆண்டவனுடைய அடிமுடியைக்காண இயலவில்லை. பிரம்மா பொய் கூறியதால் அவருக்குக் கோயிலே இல்லாமற் போய்விட்டது. ஒளிமயமான சோதியாக நின்ற சிவன் தாமே பரம்பொருள் என்பதை நிலைநாட்டி உணரவைத்த நாளே இன்றைய 'சொக்கப்பானை' என்று சொல்லப்படுகின்ற தீபஒளியேற்றும் திருநாளெனவும் இது சுபிட்சமும் மங்கலமும் தருவதால் பேரின்ப முத்தியும் தருவதால் 'சொர்க்கபாவனை' என்று கூறப்பட்டு இப்போது 'சொக்கப்பானை' என மருவியதாகவும் நமது முன்னோர்கள் கருதுகின்றார்கள்.

அத்துடன் சமயகுரவருள் ஒருவரான ஞானசம்பந்தப் பெருமானும் தமது தேவாரத் திருப்பதிகத்திலே 'தையலார் கொண்டாடும் தொல் கார்த்திகைத் திருநாள்' என்று அருளிச் செய்திருப்பதால் பெண்களே விளக்கேற்றும் உரித்துடையவர்கள் எனவும் கருதப்படுகின்றது. எனவே, இன்றைய கார்த்திகைத் தீப நன்னாளிலே சைவ மக்கள் தத்தமது இல்லங்களிலே விளக்குகளை ஏற்றி வைத்துச் சிறப்புவழிபாடு செய்வதே உத்தம கருமமாகக் கருதப்படுகின்றது.

இருள் நீங்க வேண்டுமானால் ஒளி வேண்டும். ஆதலினால் எமது ஆன்மாக்களைப் பீடித்திருக்கும் ஆணவ மல இருட்டு நீங்கி இன்ப ஒளி கிடைக்க வேண்டுமாயின் இறைவனே அருள்செய்ய வேண்டும். அந்த இறைவன் [illegible] இருப்பதால் அவ[illegible] பார்வை செலுத்தவேண்டும். புறவிருள் நீக்குவது விளக்கின் ஒளி. எமது அகவிருள் நீக்குவது ஞான ஒளி. அந்த இறைவன் சிவன், ஒளி மயமாகக் காட்சி தரும் நாளான இன்றைய திருக்கார்த்திகையிலே அவனருளாலே அவன்தாள் வணங்கி முத்தியின் பத்தைத்தேட வேண்டும்.



இன்றைய தீப நன்னாளிலே காலையில் எழுந்து நீராடிச் சந்தியாவந்தனம் முடித்து மூத்தோர் ஆசி பெற்று ஆலய தரிசனஞ்செய்து விரதங்காத்து மதியம் ஒருபொழுதுண்டு தான தர்மஞ்செய்து நல்லபடி பொழுதைக் கழிக்க வேண்டும்.

மாலையில் சூரியன் அஸ்தமனமாகும் வேளை திருவிளக்கேற்றி தேவார திருவாசகங்களை ஓதி இறையருளுக்கு ஆட்பட்டு தீப தரிசனஞ் செய்தல் சிறந்தது. இந்தத் திருக்கார்த்திகை விரதம் அனுட்டித்தால் இல்லத்தில் [illegible] ஏற்பட்டு மங்கலம் உண்டாகும். அஷ்ட லட்சுமிகளும் வந்து அருளாட்சி புரிவர். பதினாறு பேறுகளும் பக்குவமாய்க் கிடைக்கும்.

பேய், பிசாசு, பில்லி, சூனியம் ஒன்றும் அணுகாது, பலிக்காது, தீய சக்திகள் விலகி தூய சக்திகள் வந்து குடிகொள்ளும். அன்பும், அமைதியும் சாந்தமும் சந்தோஷமும் பிறக்கும்.

எனவே, இன்றைய திருக்கார்த்திகை நாளிலே தீபதரிசனம் செய்து நல்ல தூய நல்வாழ்வுக்கும் மங்கலகரமான இனிய நல் நிகழ்வுக்கும் நம்மை நாமே தயார்படுத்திக் கொள்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் பிறந்தநாள் நிகழ்வுகள்

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினமான நேற்று முன்தினம் தேசிய கொடியேற்றப்பட்டு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

சங்கானை அரசடி வைரவர் ஆலயத்தில் காலை 8 மணிக்கு ஜனாதிபதிக்கு ஆசிவேண்டி விசேட பூசைகள் இடம்பெற்றன. தொடர்ந்து 9 மணிக்குச் சங்கத் தலைவர் செ.குமாரசிங்கத்தால் தேசியக் கொடியும், பணிப்பாளர் சபை உறுப்பினர் சி. தவராசாவால் கூட்டுறவுக் கொடியும் ஏற்றப்பட்டன. இதில் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## மரண அறிவித்தல்



### குணரட்ணம் அல்பேட் குலசிங்கம்

பண்டத்தரிப்பைச் சொந்த இடமாகவும், 58, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட குணரட்ணம் அல்பேட் குலசிங்கம் (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்) 18.11.2010 வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி. குணரட்னத்தின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சின்னத்தம்பியின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக்கணவரும், திருமதி நந்தினி ஸ்ரீபாலரட்ணம், திருமதி அஜந்தினி தேவராஜன்(U.K), K.F.நந்தகுமார் ஆகியோரின் பாசமிகுதந்தையும், R.ஸ்ரீபாலரட்ணம் (Bank Pensioner), அருமைநாயகம் தேவராஜன் (UK), திருமதி நந்தகுமார் சோதீஸ்வரி (France) ஆகியோரின் அன்பு மாமனாரும், Dr.S.G.கிஷோ லோஜன், S.அடிசன் வினோத் (Bank of Ceylon), S.W.நிஷ்ஜயந் (UK), N.திலக் (France), திருமதி S.துளசி (France) ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி (DR) மநுமதி கிஷோலோஜன், திருமதி சுகன்யா வினோத் (Union Bank) ஆகியோரின் சம்பந்த வழிப் பேரனுமாவார்.

அன்னாரின் இல்லத்தில் இறுதி ஆராதனை இன்று (21.11. 2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு ஆரம்பமாகி இறுதியாத்திரை பி.ப. 3.15 மணிக்கு கொட்டடி மெதடிஸ்த சேமக்காலையை அடைந்து பூதவுடல் நல்லடக்க ஆராதனையும், நல்லடக்கமும் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

58, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
R.ஸ்ரீபாலரட்ணம் (மருமகன்)

## கொள்ளிக்கடன் ........

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவளுடைய தலையைத் தூக்கித் தன் மடியில் வைத்து முந்தானையால் விசிறிக் கொள்கிறாள் நொண்டிக்கிழவி. நொடிப் பொழுதில் ஒரு சிறு கூட்டமே கூடி விட்டது. மோட்டார் சொந்தக்காரர் கூட்டத்தை விலத்திக் கொண்டே மயக்கமுற்ற கிழவியண்டை சென்றபோது அவளுடைய கண்கள் மூடியிருந்தன. முகம் குளமாக வியர்த்துக் கொண்டிருந்தது.

'என்னப்பா கார் முட்டாமலே மயக்கமுற்றால், கார் முட்டியிருந்தால் எப்படியிருக்கும்' என்று சினத்துக் கொண்டார் மோட்டார் சொந்தக்காரர்.

மோட்டார் சொந்தக்காரரை விழிகளாற் சுட்டெரிப்பதுபோல் நோக்கினாள் நொண்டிக்கிழவி.

'நான் என்னுடைய இரண்டு கண்களாலும் பார்த்துக் கொண்டுதானிருந்தேன். ஐயாவினுடைய கார் கிழவியில் முட்டவேயில்லை. ஏதோ பசிக்களையாயிருக்கும் பாவம். உங்களுடைய பெற்ற தாய்க்குச் சமனான கிழவி; ஏதாவது கொடுத்துவிட்டு உங்க காரை எடுத்துக் கொண்டு போங்க பொலிஸ் வரமுன்' என்று நீதி வழங்கினார் கூட்டத்திலிருந்த ஒரு முதியவர்.

'கண்களால் பாராமல் காதுகளாலேயே பார்ப்பாங்க பின்னே' என்று ஒரு குறும்புப் பையன் முணுமுணுத்தது முதியவரின் காதுகளில் விழவில்லை.

கிழவியில் தனது கார் முட்டாது விட்டாலும், பாதசாரிகள் வீதியைக் கடக்கும் இடத்தில் இரு உருவங்கள் சென்று கொண்டிருப்பதைக் கவனியாது அசுர வேகத்தில் மோட்டரை ஓட்டி வந்ததற்குப் பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்படலாமென்ற அச்சத்தில், நேரத்தை வீணாக்காது 'பர்சிலி' லிருந்து ஒரு நீலநிற நோட்டை எடுத்து நொண்டிக் கிழவியின் கைக்குள் திணித்துவிட்டு மோட்டாரை எடுத்துக் கொண்டு பறந்து விட்டார் அதன் சொந்தக்காரர். மயக்கமுற்ற கிழவி கண் விழித்த போது, அவளிடம் ஒரு ஐம்பது ரூபா நோட்டைக் கொடுத்து நடந்தவற்றைக் கூறினாள் நொண்டிக் கிழவி. 'பணக்காரருக்கும் இரக்கமுள்ள நெஞ்சு இருக்கிறதே அக்கா' என்று கூறிய இளம் கிழவி நொண்டிக் கிழவியுடன் சென்று, இருவரும் அருகாமையிலிருந்த கடை வராந்தாவில் இராவைக் கழித்தனர்.

காரால் மோதப்படவிருந்த இருந்த சம்பவத்திற்குப் பின் இளம் கிழவி நன்றாக எழுந்து நடமாடவில்லை. அடிக்கடி மயக்கமுற்று நோய்வாய்ப்பட்டுக் கொண்டேயிருந்தாள். ஒருநாள் ஏற்பட்ட மயக்கத்தின் பின் அவள் எழுந்திருக்கவேயில்லை. மர ணச் சடங்கிற்கு அந்த 50 ரூபாயே உதவியது. மரணக் கிரியைகளையெல்லாம் நொண்டிக்கிழவி தானே முன்னின்று நடத்தினாள்.

எல்லாரும் சமசரம் காணும் இடம்- மயானம்.

இளம் கிழவியின் பூதவுடல் நன்றாக விறகுகளால் மூடப்பட்டிருக்கிறது. அவளுடைய அந்திய காலத்திலே அவளுக்குச் சொந்தக்காரராகவிருந்த பதினைந்து இருபது பிச்சைக்காரர் பிரேதத்தைச் சூழ நிற்கிறார்கள். நொண்டிக்கிழவி தன் தோழிக்குக் கடைசி மரியாதையைத் தெரிவித்துவிட்டுக் கொள்ளி வைத்தபின் தனது இருகரங்களையும் கூப்பித் தியானத்தில் நிற்கிறாள் கண்ணீர் பெருக.

தியானத்தில் நின்ற நொண்டிக்கிழவியின் மனத்திரையில் பல காட்சிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன.

அன்றொரு செவ்வாய்க்கிழமை அர்ச். அந்தோனி ஆலய முகப்பில் நடைபெற்ற பாண் விநியோகம்.

அதன் பின் ஆடிவேல் விழாவில் நடைபெற்றவை;

அதையடுத்து நடு வீதியில் மோட்டாரால் மோதப்படவிருந்த நிகழ்ச்சி; மோட்டார் சொந்தக்காரர் 50 ரூபாய் நோட் டைத் தன் கையில் திணிக்கும் போது அவருடைய வலதுகன் னத்தில் தான் கண்ட மச்சம்; இத்தனை நிகழ்ச்சிகளின் முடிவில் நொண்டிக் கிழவியின் வாய் 'கொள்ளிக்கடன்' என்று வாய் முணுமுணுத்தது.

## விழி நீர் சொரிந்து நிற்கும் 9 ஆண்டின் நினைவுகளுடன்



அமரர் கந்தையா
பன்னிருகரம்
(முன்னாள் உரிமையாளர்,
நியூ கௌரி மிதிவண்டி
வாணிப நிலையம் -
நெல்லியடி)
உயிர்ப்பு:15✱01✱1944
சங்கமம்:30✱11✱2001
திதி:- 21.11.2010

ஊர் போற்ற வாழ்ந்தீர்கள்
உறவுகள் மகிழ்ந்திட நடந்தீர்கள்
பிள்ளைகள் உயர்ந்திட உழைத்தீர்கள்
இறுதியில் கண்ணீரில் நனைய விட்டுச் சென்றீர்கள்
நீங்கள் காட்டிய பாதையில்
வாழ்ந்து உயர்ந்திட வழிகாட்டியாய்
என்றும் எங்களுடன் வாழந்திடுவீர்கள்.

"சாந்தி பவனம்",
கொற்றாவத்தை,
கரவெட்டி.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

(108291)

## நான்காம் ஆண்டு நினைவுச் சங்கமம்



அமரர் நாகலிங்கம்
தெட்சணாமூர்த்தி
(ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்,
சுன்னாகம்)
மலர்வு: 15✱10✱ 1953
உதிர்வு: 04✱12✱2006
திதி: பூரணை

இப்பாரில் இனி எமக்கு கிட்டாத உறவு
எங்களுக்காய் இவ்வுலகில்
இறைவன் தந்த பரிசு
தப்பாமல் எமக்கனைத்தும் தந்த எங்கள்
அப்பா- நீங்கள்
அப்பாலே சென்றாலும் அனுதினமும் மறவோம்.

குடும்பத்தினர்.
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(புங்குடுதீவு).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
வாரித்தம்பி
பொன்னுத்துரை

மலர்வு
28.11.1938

உதிர்வு
02.12.2009

திதி: பூரணை

அன்பின் திருவுருவே! பாசத்தின் பிறப்பிடமே!
பண்பின் சிகரமே! அணையா விளக்கே!
விரைந்தோடிச் சென்று ஆண்டொன்று ஆனதையா
புன்னகை மாறாத உங்கள் திருமுகம்
நெஞ்சம் நிறைந்து நிற்குதையா
பெருமைமிகும் நின் குணத்தை எம்
நெஞ்சமதில் நித்தியமாய் நினைத்திருப்போம்.

சக்களாவத்தை வீதி,
ஆவரங்கால், புத்தூர்.

குடும்பத்தினர்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
சின்னத்தம்பி தர்மறாஜன்
(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

தோற்றம்
16.08.1924

மறைவு
02.12.2009

திதி:21.11.2010



ஆண்டு ஒன்று ஆனாலும்
மறையாமல் உங்கள் நினைவுகள்
எங்களுடன் என்றும் உறவாடிய வண்ணம் உள்ளன
பார்க்கும் இடம் எல்லாம் நீங்கள் நிற்பது போல்
நீங்கள் எம்முடன் வாழ்ந்த காலங்கள் எம்முன்னே
நித்தமும் அலைமோதிய வண்ணம் உள்ளது அப்பா
உங்களுடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

புத்தூர் வீதி,
சுவினை
புன்னாலைக்கட்டுவன்.

தங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள் , குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் அரவணைப்பில் விளைவதே நல்லிணக்கம்

Dr.இ.சிவசங்கர்

காலாதி காலம் தொட்டு போர்களின் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்துள்ள இலங்கையின் வரலாற்றில் தற்பொழுதும் ஒரு புதிய அத்தியாயத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எமது செயல்களின் விளைவே எமது வாழ்வாக அமையும் என்ற தர்ம நியதிச் சக்கரத்தை உணர்ந்து ஏற்றுக் கொண்ட இரு சமயங்களான இந்து, பௌத்தங்களை பின்பற்றுபவர்கள் வாழ்கின்ற நிலமே இலங்கைத் திருநாடாகும். வெறுமனே பழம்வினையால் வந்த வாழ்வு நிலை என்று அழுது புலம்புவதை விடுத்து நாம் விரும்புகின்ற நாளைய வாழ்வைப் பெற இன்றைய செயலை வடிவமைக்க வழிகாட்டி நிற்பதே ''கர்ம நியதி சக்கரம்'' என்னும் விஞ்ஞான சமன்பாடாகும். நாம் எதை வெளிப்படுத்துகின்றோமோ அதுவே எமக்குத் திருப்பி கிடைக்கின்றது. எமக்கு விளைவது அனைத்தும் எமது செயல்களின் எதிர் விளைவும் எதிரொலியுமேயாகும். அன்பை வெளிப்படுத்தினால் அன்பு கிடைக்கின்றது. வெறுப்பை வெளிப்படுத்தினால் வெறுப்புக் கிடைக்கின்றது. எமது எண்ணங்களினாலும் அது சார்ந்த எமது செயல்களினாலுமே எமது சூழலை நாமே உருவாக்குகின்றோம். நாம் குரோதத் தன்மையுடன் செயற்பட்டுக் கொண்டு நல்லிணக்கத்தை எதிர்பார்க்க முடியாது. அத்தகைய நிகழ்வு இயற்கையின் நியதியில் சாத்தியமில்லை. அப்படி எதிர்பார்த்தால் அது அறியாமை.

நாம் எதை விரும்புகின்றோமோ அதற்கேற்ற செயல்களை செயற்படுத்துவதே புத்திசாலித்தனம். சமாதான, நல்லிணக்க சூழலை நாம் விரும்புவோமானால் அதற்கு அமைவான செயற்பாடுகளைச் செயற்படுத்துவதே பொறுப்புணர்ந்த நடத்தையாகும். ஒரு போர் அத்தியாயம் முடிந்து சமாதான வாழ்வுச் சூழலை ஏற்படுத்தும் அத்திவார கற்களை இட வேண்டிய பொறுப்பு, அதிகாரம் உள்ளவர்களின் கையிலுள்ளது. அறியாமையினால் எதிர்வினைப் பயனை மறந்து செயற்படும் போது எதிர்வினை காலவோட்டத்தில் தோற்றுவிக்கப்படுவது இயற்கை நியதியாகும், ஏற்பட்டே தீரும். இதுவே இந்து, பௌத்த சமயங்கள் கண்டுணர்ந்த நிலையாகும். சமாதான நல்லிணக்க வாழ்வை விரும்புகின்றவர்கள் கவலை கொள்ளும் படியான செயற்பாடுகளை அரச அதிகார நிர்வாகம் அரங்கேற்றி வருகின்றது. இலங்கையின் வரலாற்றுக்கூடாகவும், எமது வாழ்க்கைக் காலத்தில் நடைபெற்றவைக் கூடாகவும் பல பாடங்களைக் கற்று கொண்டு செயற்பட முடியும். மீண்டும் ஒரு போர்ச் சூழலை இலங்கையின் வரலாற்றில் தொடக்கி வைக்கின்ற களநிலைகளே கண்முன் தெரிகின்றது. ஆயுதப் போராட்டத்தை கொண்டு நடத்திய தமிழ் இளைஞர்களால் கூறப்பட்ட முக்கிய சொற்பிரயோகம் ''ஆயுத போராட்டத்தை நாம் விரும்பி செய்யவில்லை. போராட்டம் எம் மீது திணிக்கப்பட்டது. போராட நிர்ப்பந்திக்கப்பட் டோம்'' என்பதே இத்தகைய போராட்ட திணிப்புக்கான 'கருநிலை' செயற்பாடுகளை சிங்கள அரசு மீண்டும் தோற்றுவிக்கின்றது என்பதை உணர்ந்து கொள்வதும் அதனூடாக செயற்பாடுகளை மாற்றி அமைப்பதும் எதிர்கால நன்மைகளை இரு இனங்களுக்கும் ஏற்படுத்தும். போரை வெற்றி கொண்டவர்களாக அல்ல, போரின் புதிய அத்தியாயத்தை தோற்றுவித்தவர்களாக காலத்தில் பதியப்படும் சாத்தியம் உள்ளது.



சர்வமத சின்னம் மனிதமேம்பாடுகள்

மனித பிறவி எடுத்ததன் நோக்கம், தேவை என்ன? இந்த மனித வாழ்வில் நாம் கடைபிடிக்க வேண்டிய பண்பாடு எது என்பதை இந்து, பௌத்த சமயங்கள் பொதுவானதையே கூறி நிற்கின்றது. அன்புடனும், அன்பின் வெளிப்பாடான அகிம்சை யுடனும் வாழ்ந்து உன்னத மனித நிலையை (Supreme Human State) அடைவதே அதுவாகும். இதுவே முக்தி என்றும், புத்த நிலை(Budhahood) என்றும் கூறப்படுகின்றது. இதுவே மேற்கூறிய இரு சமயங்களின் தெளிவான சாராம்சமாகும். இந்த இலக்கை நோக்கிய பயணத்திற்கு இலங்கை மக்களை அழைத்து செல்ல கூடியவர்களே இன்றைய தேவையாகும். அன்பினால் வளர்ந்து அயலவர்களை அணைத்துச் செல்லும் பண்பே இனநல்லிணக்கத்துக்கு இட்டுச் சென்று சமாதான அமைதியை நாட்டில் தோற்றுவிக்கும். பெரும்பான்மை சமூகத்தினரிடமிருந்து இத்தகையவர்கள் வரவேண்டியது காலத்தின் அவசரமாகும். பௌத்த ஆன்மிக பண்பாளர்கள் சூழ்நிலையை கையிலெடுக்க வேண்டிய காலமிது. இத்தகையவர்களின் மௌனமே கடந்த காலத்தின் தொடர் இனக் கலவரங்களுக்கு (1958,1977,1981,1983) வழி சமைத்து உள்நாட்டுப் போருக்கு இட்டுச் சென்றது.


சீரடிசாயி சத்தியசாயி பிரேமசாயி

இலங்கை அரசியல்வாதிகள் இதுவரையில் இனநல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்பதற்கப்பால் அவர்களுக்குத் தெரியவில்லை, முடியவில்லை என்பதே யதார்த்தமாகும். அதனாலேயே ஒப்பந்தங்கள் எட்டப்பட்டு, எழுதப்பட்டும் (1956ஆம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தம் ) பின்னர் கிழித்தெறியப்பட்ட நிலையைக் கண்டோம். அரசியல்தனம் என்பது கபட தந்திரோபாயம்மிக்கதாகவே அறியப்பட்டுள்ளது. இனப்பிரச்சினைத் தீர்வோ, இனங்களுக்கிடையிலான நல்லிணக்கமோ நேர்மையான, திரிகரண சுத்தியுடன் அமைக்கப்படும்போதே சாத்தியமாகும். அன்றேல் சமூகங்களுக்கிடையில் அமைதியின்மையை(Social unrest) ஏற்படுத்தி வெறுப்பை விளைவாக்கி போர்ச்சூழலுக்கு இட்டு சென்று விடும். ஏற்கனவே சுட்டிகாட்டியபடி கர்மவினை, நியதிச் சக்கரத்தின் படி தவிர்க்க முடியாத செயற்பாடாக இயற்கை சக்தியினால் செயல்வடிவம் பெறும்.

புலி இயக்கம் தோற்கடிக்கப்பட்டுவிட்டது, தமிழர்களின் ஆயுதப் போராட்டம் முற்று பெற்று விட்டது, மீண்டும் தொடரப்பட முடியாதது என்ற எண்ணக் கரு தவறானது. புலி இயக்கம் சிறிலங்கா இராணுவத்தால் வெற்றி கொள்ளப்பட்டது என்பதல்ல உண்மை நிலை. புலி இயக்கம் தனது செயற்பாடுகளின் விளைவாக இயற்கை நியதிக்கமைவாக (கர்மவினை சக்கரம்) இன்றைய நிலையை அடைந்தது, அவ்வளவே. இதே வகையில் தற்போதைய அரச, இராணுவ நிலையும் தத்தமது தர்மங்களிலிருந்து நெறி பிறழ்ந்து செயற்பட்டால் காலத்தின் திட்டத்தின் அழிவைத் தேடிக் கொள்ள வேண்டிவரும் . அதன் போது இரு இனங்களும் மீண்டும் அழிவைச் சந்திக்க வேண்டிவரும்.

